சித்தவி.

ஒரு ஊரில் குடியானவனொருவன் வசித்து வந்தான். ஒருநாள் அவன் தன் வயலில் வேலை செய்து முடித்து விட்டு உச்சிப் போதில் வீட்டிற்கு வந்தான். கணவனைக் கண்டதும் மனைவி, "சாப்பிடுவதற்கான நேரம் ஆகிவிட்டது. இலை போடட்டுமா?" என்றாள்.

"வெயிலில் இதுகாறும் வேலை செய்து கொண்டிருந்ததனால் உடலில் வியர்வையும் ~~உடல்~~ உடையில் அழுக்கும் படிந்திருக்கின்றன. நான் குளத்திற்குச் சென்று குளித்து விட்டு வந்து சாப்பிடுகிறேன்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

குளத்தில் முதலில் தன் துணிகளைத் துவைத்து வெயிலில் உலர வைத்தான். துணிகள் உலருங்காறும் அருகிலிருந்த ஒரு நாவல் மரத்தினடியில் சற்று உட்கார்ந்தான். நிழலும், நீர்மேல் படிந்து வந்த இளங்காற்றும் அவன் மேனியில் படவே சுகமாகயிருந்தது. அங்கேயே தன் உடலைத் தரையில் சாய்த்தவாறு படுக்கவும் தொடங்கினான். அவனையறியாமல் அயர்ந்த தூக்கமும் வந்து விட்டது. மெய் மறந்து தூங்கும் இவன் தலைக்கு மேல் ஒரு சிறிய கிளையில் குருவி ஒன்று உட்கார்ந்திருந்தது. அதன் பெயர் 'சித்தவி'. அது அந்த மரத்திலிருந்து நாவல் பழங்களை ஒவ்வொன்றாகப் பறித்துச் சப்பிச் சப்பிச் சாற்றை விழுங்கி விட்டுக் கொட்டையைக் கீழே உமிழ்ந்தது. அந்தக் கொட்டை இவனுடைய தலையின் மேல் விழுந்தது. இவ்வாறே, பழமொன்று கொட்டையொன்றாக அந்தக் குருவி தின்று உமிழ்ந்து கொண்டேயிருந்தது.

அவன் தூக்கம் இதனால் கலையத் தன் கையால் ~~ஏ~~ தலையைத் தடவினான். பல கொட்டைகள் கையில் 'பிசு பிசு'வென்று ஒட்டிக் கொள்ள அவன் அண்ணாந்து மேலே பார்த்தான். 'இந்தக் குருவி செய்த அக்கிரமமான செயல் இது' என்று அவன் அறிந்தான். வந்த தூக்கத்தைக் கெடுத்தது ஒன்று. பழத்தைத் தின்று தன் தலைமேல் கொட்டைகளை உமிழ்ந்தது ஒன்று. இந்த இரண்டு குற்றங்களும் அவனால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

உடனே, ~~அவனா~~ எழுந்து ஆரவாரமின்றி மெல்ல அந்த மரத்தின் மேல் ஏறினான். குருவியிருந்த கிளைக்கருகில் சென்றான். பரியக்குவமாகக் கையை நீட்டி லபக்கென்று குருவியைப் பிடித்துக் கொண்டான். இது ஒரு பெரிய காரிய சாதனை போல அவனுள்ளம் உணர்ந்தது.

ஒரு கையில் குருவியோடு இன்னொரு கையின் உதவியோடு நிதானமாக அந்த மரத்தை விட்டு இறங்கினான். குருவியைக் கூர்ந்து பார்த்தான் ஒரு கணம். "என் கைப்பிடிக்குள் சிக்கிக் கொண்ட குருவியே, நீ பெருந்தவறு செய்திருக்கிறாய். நீ செய்த தவறு ம[illegible] முடியாதது. இப்போது உனக்கு நான் சரியான பாடம் கற்பிக்கப் போகிறேன்"

குருவிக்கு[illegible] தெரிந்தும் எதுவும் பேசாமல் மௌனமாக இவன் சொல்
[illegible]கட்டுக் செ[illegible]. எல்லாமறிந்த ஒரு ஞானியைப் போல அது மௌனமாக
[illegible]தப் பா[illegible]ானவன், குருவியோடும் குளத்து நீர் நோக்கி நடந்தான். த[illegible]
[illegible]கற்கு[illegible]வைத்த இடத்தில் வந்து முழங்கால் அளவு நீரில் நின்று அந்தக் குருவி[illegible]
[illegible]நக்[illegible]ம் எடுப்பதுமாக எண்ணிக் கொண்டே சற்று நேரம் துன்புறுத்தினான்.
[illegible]லட்சியம் பண்ணாமல் அப்போதும் மௌனமாகவேயிருந்தது.

[illegible]யானவனுடைய உள்ளம் இதுகாறும் இதற்கு கொடுத்த தண்டனையே போதும்[illegible]
[illegible]. எனவே அவன், அந்தக் குருவியைத் தன் முகமாக்கிக் கொண்டு கேட்ட[illegible]
[illegible]சித்தவி செத்தாயா?" என்று.

[illegible]ருவி, அதற்கு பதில் கூறிற்று. "நான் ஏன் சாகிறேன், சித்தப்பா. எ[illegible]
[illegible]பழம் தின்றேன். உன் தலை நிறையக் கொட்டை உமிழ்ந்தேன். இப்போ[illegible]
[illegible]ஸ்நானம் பண்ணினேன்" என்று.

[illegible]ச்சமறியாத அகங்காரமுள்ள சித்தவிக் குருவியின் இந்தப் பதிலைக் கேட்[illegible]
[illegible]ம் கொதிக்கத் தொடங்கிற்று. அவ[illegible] நெறநெறவென்று கடித்[illegible]
[illegible] உயரமும், அறுபது கிலோ எடையுமுள்[illegible] பார்த்த ஒரு கைப்பிடி[illegible]
[illegible]ச்சும் குருவியாகிய நீ என்னைத் தூக்கி எ[illegible]கிறாயா? இதோ பார்[illegible]
[illegible] கடைசி மூச்சை விடச் செய்[illegible].

தான் தனி தவைத்த பாறாங்கல் அவனுக்கு எதோ ஒரு ...
தது. 'உனக்கு நான் உதவி செய்ய முடியும்' என்று தான் அது கூறியிருக்...

அவன் உடனே அந்தக் கல்லின் அருகில் வந்து நின்றான். குருவியின் ... கால்களையும் ஒரு கையினால் இறுக்கிப் பிடித்தவாறு அந்தப் பாறையின் மேல் துணியைத் துவைப்பது போலவே அடிக்கத் தொடங்கினான். ஒன்று, இரண்டு என எண்ணியவாறே. அவனுடையவுள்ளம் இப்போதும் சொல்கிறது. 'இது ஒரு சிறிய குருவி; நீ இதுகாறும் கொடுத்த தண்டனை மிகப் பெரியது. பாவம் அது இப்போது நிச்சயமாக அதன் கடைசி மூச்சை விட்டிருக்கும்' என்று

எனவே, குடியானவன் அந்தக் குருவியை உடனே தன் முகமாக ஆக்கிக் கொண்டு, "சித்தினி, சித்தினி செத்தாயா?" என்றான்.

குருவி அதற்கு பதில் கூறிற்று: "நான் ஏன் சாகிறேன் சித்தப்பா. என் வயிறு ...யப் பழம் தின்றேன். உன் தலை நிறையக் கொட்டை உமிழ்ந்தேன். கங்கையில் ஸ்நானம் பண்ணினேன். இப்போது பாறையில் தவமும் செய்தேன்" என்று.

திமிரான பதில் இது. மனிதனுடைய உள்ளத்தைப் பரிசோதனை செய்யும் பதில் இது. அவனுடைய சக்திக்கு விட்ட சவால் இது. எனவே, குடியானவன் சற்று விக்கித்து நின்றவாறு இதனை வெற்றி கொள்வது எப்படி என்று சிந்திக்கத் தொடங்கினான். அப்போது அவனுடைய உள்ளம் சொல்கிறது: 'இந்த நீருக்கும் பாறைக் கல்லுக்கும் குருவியின் உயிரை நீக்கும் சக்தியில்லை என்று தெரிகிறது. நீ தைரியத்தைக் கைவிடாதே. எல்லாம் வல்ல அக்னிதேவனுக்கு இதனை ஆகுதியாக்குகிறேன்" என்று.

அவன் ஏற்கனவே கையோடு கொண்டு வந்திருந்த பீடிக்கு தீப்பெட்டியின் நினைவு நினைவு வந்தது. இப்போது அக மகிழ்ந்தவனானான். கடைசி வெற்றி தன்னுடையது என்று நம்பினான். செயல்பட்டான்.

உடனே, மரத்தின் கீழே கிடந்த சுள்ளல்கள், இலை சருகுகளையெல்லாம் பொறுக்கி ஓரிடத்தில் ஒதுக்கிச் சேர்த்துக் குவித்தான். குப்பைக் குவியல் போதுமானதாகவே தெரிந்த நெருப்புக்குச்சியை உரைத்து அவன் குவியலில் தீயை மூட்டினான். கனலும், புகையுமாகக் காற்றின் உதவியோடு அது பற்றி எரிந்தது" குருவியே, உன்னுடைய தெய்வத்தைக் கும்பிட்டுக் கொ... 'வாய்க் கொழுப்பு சீழாய் வடிந்தது' எனும் பழமொழிக்கு நான் இலக்காகி விட்டேன். மனிதனை அறிவில்லாமல் எதிர்த்து அவமதித்து விட்டேன். அடுத்த பிறவியிலாவது இன்னுங் கொஞ்சம் அறிவை கொடு' என்று வேண்டிக் கொள்" என்று. அந்த எரியும் நெருப்பில் குருவியை அமிழ்த்தி அமிழ்த்திச் சீக்கிரம் சீக்கிரமாக எடுத்தான். சூடு குருவிக்கு மட்டுமன்று அவனுடைய கைக்கும் பட்டது. இப்போது கேட்டான்:

"சித்தினி, சித்தினி செத்தாயா?" என்று. அதற்குக் குருவி பதில் கூறிற்று. "நான் ஏன் சாகிறேன் சித்தப்பா? என் வயிறு நிறையப் பழம் தின்றேன்; உன் தலை நிறையக் கொட்டை உமிழ்ந்தேன்: கங்கையில் ஸ்நானம் செய்தேன்: பாறையில் தவம் புரிந்தேன்: இப்போது தீயில் ஓமம் செய்கிறேன்" என்று.

இப்போது குடியானவன் என்ன செய்வான்? கோபங்குறைந்து குதூகலமிழந்து தோல்வியுற்றவனாய்க் கையிலிருந்த அந்த சித்தினிக் குருவியை விடவே செய்தான். சித்தினி சிரித்துக் கொண்டே எப்போதும் போல இயற்கையாகவே பறந்து சென்று அந்த நாவல் மரத்தின் கிளை ஒன்றிலமர்ந்து ஒரே ஒரு முழு நாவல் கனியைப் பறித்து வாயால் சப்பிக் கொண்டே குடியானவனை உற்றுப் பார்த்தது. அவனுடைய அறிவற்ற நிலையும், அறியாமைப் போக்கும் குருவிக்கு அவன் மீது ஒரு பரிவை உண்டாக்கிற்று. வாயிலிருந்த கனியைச் சப்பிக் கீழே துப்பி விட்டு அவனுடைய செவியில் நிறையும் படியாக இனிய குரலில் பாடத் தொடங்கிற்று. அது தற்காலம் மனிதர்கள் கேட்க ஒரு பாடல் பாடலாக இருக்கவில்லை. அது மனிதனைச் சிந்திக்கச் செய்யும் பாடலாக இருந்தது. ... பாடல் அது. ஆம். அது ஒரு அற்புதமான பாடல். தமிழ்நாடு இதுகாறும் கேட்டிராத பாடல்.

இது ஒரு மரண சாசனம்.

பிறப்பு, இறப்புக்கிடையேயுள்ள என் வாழ்நாளில் நிரந்தரமாகச் செய்யும் என் தொழிலில் உள்ளம் ஒன்றி நான் ஈடுபட்டிருக்கும் போது, எதாவது ஒரு மருத்துவமனையில் தூய வெள்ளை மேலுறையில் மூடப்பட்டுள்ள மென்மையான ஒரு படுக்கையின் மேல் என்னுடைய உடல் கிடக்க வேண்டிய ஒரு நாள் வரவேயுள்ளது.

எதாவது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவர் ஒருவர் வந்து என்னுடலைப் பரி-சோதித்து துடித்துக் கொண்டிருந்த "இருதயம் செயலிழந்து விட்டது, உடனே உள்ளேயிருந்த உயிரும் உடலை விட்டு வெளியேறி விட்டது" என்று உறுதிப் படுத்துகிறார்.

"இவ்வாறான பின் செயற்கை முறையில் எந்திர உபகரணங்களைக் கொண்டு, என்-னுடலுக்குள் செயற்கை சுவாசம் நிகழும்படி முயலாதீர்கள். அது என்னுடைய அகால மரணம் என்று குறிப்பிட்டுக் கூறாதீர்கள். அது இயற்கை மரணம் என்று குறிப்பிடுங்கள். மற்ற மக்களின் பூரணமான வாழ்வுக்கு உதவும் படியாக என்னுடைய உடலை இங்கிருந்து சரியான இடத்திற்கு எடுத்துக் கொண்டு செல்லுங்கள்.

"வாழ்க்கையில் என்றும் இளங்காலையில் உதய சூரியனைக் கண்டிராத ஒருவனுக்கு, இளங்குழந்தையின் மென்மையான புன்முறுவல் தவழும் எழில் முகத்தைக் காண முடியாதவனுக்கு ஒரு பெண்ணின் கண்களில் அன்பு ஒளியைக் கண்டிராதவனுக்கு என்னுடைய கண்களைக் கொடுத் தவுங்கள்.

"யாருடைய இருதயம் முடிவு காணாத நோயுடனேயே துடித்துக் கொண்டிருக்கிறதோ அந்த ஒரு மனிதனுக்கு என்னுடைய இருதயத்தைக் கொடுத்துதவுங்கள்.

"எதாவது ஒன்றுடன் மோதி நொறுங்கி விட்ட காரிலிருந்து எடுத்துக் கொண்டு ஆதரவற்ற ஒருவனுக்கு என்னுடைய இரத்தத்தை எடுத்து அவனுடைய உடலில் செலுத்துங்கள் அவன் உயிர் பிழைத்து எழுந்து வாழ்வில் தன்னுடைய பேரப் பிள்ளைகளோடு ஆனந்தமாக துள்ளி விளையாடும் விளையாட்டைக் காணும் ஒரு சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைக்கட்டும்.

"எந்திரத்தின் உதவியைக் கொண்டு ஒரு வாரத்திலிருந்து, மறுவாரம் வரையிலு சிரம சாத்தியமாக வாழ்நாளைக் கழிக்கும் ஒருவனுக்கு என்னுடைய கிட்னியை (சிறுநீர எடுத்துக் கொடுத்துதவுங்கள்.

"என்னுடைய உடலிலுள்ள ஒவ்வொரு எலும்பையும் பிரித்தெடுங்கள். மாமிசத்தை பிரித்தெடுங்கள். இழை இழையாக ஓடிக் கொண்டிருக்கும் நரம்புகளையெல்லாம் பிரி தெடுத்து காலில்லாத குழந்தையொன்று நல்ல முறையில் ஓடியாடும்படி கொடுத்துதவு

"என்னுடைய தலையிலுள்ள மூளையின் ஒவ்வொரு சிறு பகுதியையும் ஆராய்ந்து மானால் எல்லாவற்றையுமே எடுத்துக் கொள்ளுங்கள். என்றுமே பேசியறியாத ஊமை செவிட்டுக் குழந்தை இதனால் எதிர் காலத்தில் ஒரு நாள் சுகமடைந்து கும்மாளமிட் சிரித்து மகிழட்டும். காது கேட்காத ஒரு பெண் மகள் தன் வீட்டு பலகணியின் மூ வெளியே இடி, மின்னல் உடன் கூடிப் பெய்யும் மழையின் இரைச்சலைக் காது குளிர ஆனந்தமடையட்டும்.

"மேலும் என்னுடைய உடம்பில் எது மீதியாயுள்ளதோ, அதனை சுட்டு சாம் அந்த சாம்பலைக் காற்றில் இரைத்து விடுங்கள். வண்ண வண்ணமான அழகிய மலர் செடி, கொடிகளிலிருந்து அரும்பி விரிய அது உதவும்படியாகட்டும்.

"எதையாவது இந்த மண்ணில் புதைத்தே தீர வேண்டும் என்று எண்ணுவீர்க என்னுடைய வாழ்நாளில் செய்த தப்பும், தவறுகளைப் புதைத்து விடுங்கள். அ என்னுடைய தோல்விகளையும் புதையுங்கள். உறவும், நட்புமாக என்னோடு வாழ்ந்தவர்களிடத்தில் என்னால் ஏற்பட்ட சிறுசிறு அறியாமைகளையும் கூடவே அ புதைத்து விடுங்கள்.

"நான் செய்த பாவங்களையெல்லாம் சைத்தானுக்குக் கொடுத்து விடுங்கள். என்னுடைய ஆத்மாவை எல்லாம் வல்ல இறைவனுக்கு அர்ப்பணித்து விடுங்கள்.

"ஒரு சமயம் நீங்கள் என்னைப் பற்றி ஏதாவது பேச வேண்டும் என்று தோன்றினால் உங்களுடைய அவசியம் எவருக்குத் தேவையோ, அவர்களோடு அன்பான வார்த்தையைப் பேசுவதன் மூலம் என்னைப் பற்றி எண்ணுங்கள்.

"நான் கேட்டுக் கொண்ட இவ்வளவையும் நீங்கள் நடத்திக் கொடுத்தளவில் நான் ஒரு புகழ் வாய்ந்தவனாகிறேன்...." — இது ராபர்ட் என். டெஸ்ட் அவர் "சின்சினாட்டி போஸ்ட்" பத்திரிக்கையில் பிரகடனம் செய்த இருதயப் பூர்வமான ஒரு மரண சாசனம்.

நன்றி

****

அரசி அகல்யாபாய்.

இந்த உலகம் மிக உன்னதமானது. எனினும் கூடவே பின்னமானதுமாகும். நல்லதும் அல்லதும் தொடர்ந்து முரண்பட ஒன்றியும் ஒன்றாததுமான இழுபறியுடன் இந்த உலகில் மக்களாகிய நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். சரித்திரச் சான்றுகள் நம் அறிவை முன்நோக்கி பலவிதங்களை உணர்த்த உதவுபவைகளாக அமைவன.

ஔரங்கசீப்பின் அரசு தேய்பிறையாகக் குறைந்து வரும் கால கட்டத்தில், நமது பாரத புனித பூமியில் நிகழ்ந்த வரலாற்றுச் சித்திரம் இதுவும் ஒன்று. நம்மை இது சிந்திக்க வைக்கிறது. பிறருக்கு எடுத்துச் செப்பவும் தூண்டுகிறது. ஆமாம், இது ஒரு அற்புதமான வரலாற்று மின்னல் ஒளிச் சித்திரம்.

மகாராஷ்டிரத்தில் பீஷ்வாக்களின் ஆளுமைக்குள் அடங்கிய ஒரு குறுநிலப் பகுதியை மல்லார்ராவ் என்ற ஒரு வீரன் ஆண்டு வந்தான். மல்லார்ராவின் மருமகள் 'அகல்யாபாய்' என்னும் பெயருள்ள மாண்புமிக்க ஒரு பெண்மணி. கணவன் இறந்து, மாமனாரும் காலம் ஆன பின் விதவையர்க் வெள்ளாடை அணிந்து அரசுக் கட்டிலேறி ஆட்சி புரிந்த ஒரு (கி.பி 1766) வீராங்கனை மட்டுமல்ல, வினை மாட்சிமைப்பட்ட வித்தகியுங் கூட.

'அகல்யாபாய்' எனில் ஒரு பேரறிவுச் சுடர். 'ஆற்றல் சால் பெருமகள்' என்று அக்கால ஒரு சில கவிஞர்களால் அவர் பாராட்டப்பட்டுள்ளார். அதில் ஒரு கவிஞன் சொல்லுகிறான், "அரசியாகிய எங்களைத் தாயைப்போல் ஆளும் நீயும், கங்கைத் தாயும் வேறுவேறு அன்று. நீங்கள் இருவரும் இந்த உலக மக்களின் மேம்பாட்டிற்காகவே பிறந்து வாழ வந்தவர்கள். உங்களுக்கு ஒப்புவமை கூற வேறொன்றை உலகில் நான் காணவில்லை" என்று. இதிலிருந்து நாம் அகல்யாபாயின் உண்மை நிலையை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

இந்த அரசி இருந்து அரசாண்ட நகரத்தின் பெயர் மகேசுவரம். அரசியின் கீர்த்தி, செவி வழிச் செய்தியாக நாள்தோறும் நாட்டில் பரவிக் கொண்டேயிருந்தது. நீதியும், கலாச்சாரமும் அரசியால் பாதுகாப்படைந்தன. மக்கள் வாழ்வில் அமைதியும், ஆனந்தமும் பரிமளிக்கத் தொடங்கிற்று. ஐயப்பாடும், அச்சமுமற்ற நிம்மதியான நிலையில் உழைப்பும் உயர்வுமாக மக்கள் வாழத் தொடங்கினர். அகல்யாபாயின் ஆட்சிமுறையே அன்றைய மக்கள் நல்வாழ்வுக்கு முழுக்காரணமாயிருந்தது. கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். புலவர்கள் போற்றப்பட்டார்கள். அறிவுக் காவியங்கள் மெல்ல அரும்பி மலரத் தொடங்கின. அகல்யாபாயின் பேரறிவு பொருள் வளத்தோடு அறிவு வளத்துக்கும் ஆக்கம் தந்து கொண்டிருந்தது.

புலவர்கள் போற்றப்பட்டார்கள் என்பது உண்மை. ஆனால், 'தகுதியுடையவர்கள் மட்டும்' என்பது தான் அந்த உண்மையில் பொதிந்திருந்தது.

ஒரு வேனிற்காலம் மகேசுவரத்திற்கு ஒரு புலவன் படைப்பிலக்கியம் என்ற பெயரோடு ஒரு நூலை இயற்றிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். தன்னுடைய வருகையை அரசிக்கு அறிவித்துத் தன்னுடைய நூலைக் கேட்டருளுமாறு கோரிக் கொண்டார். அவருடைய கோரிக்கை அரசியால் அங்கீகரிக்கப் பெற்றது. குறிப்பிட்ட ஒரு நாளில் இரவு நேரத்தில் சில புலவர்களும், அறிஞர்களும் கூடிய ஒரு சிறிய சபையைக் கூட்டி புலவனை அழைத்துச் சபைக்கு அறிமுகப்படுத்தி நூலை படித்து விவரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஏற்கனவே பசியோடு கூடியவர்கள், ஒரு சுவையான விருந்தை எதிர்பார்த்து அரசியுடன் அமர்ந்திருப்பதைப் போல இருந்தது, அப்போதைய அந்தச் சபையின் தோற்றம்.

கம்பீரமாக சபையில் எழுந்து நின்ற புதுப்புலவர், தம்முடைய நூலிலிருந்து இசையோடு இரண்டொரு சூத்திரங்களைப் பாடி அதிலுள்ள ஆழமான கருத்துக்களை நுட்பமாக விவரிக்கத் தொடங்கினார். ஒருமை உணர்வோடு எல்லோரும் அவருடைய சொற்பெருக்கை கருத்துப் படங்களை அறிந்து மகிழ மேலும் எதிர்பார்த்திருந்தனர். மூன்றாவது சூத்திரம் பாடி முடிந்து அதன் விளக்கம் கூறிக் கொண்டிருக்கும் போதே அரசி அகல்யாபாய் புலவனை இடைமறித்துக் கேட்கலானாள், "இந்த நூல் எந்தப் பொருளைப் பற்றிக் கூறுகிறது? எந்த உண்மைகளை அடிப்படையில் கொண்டுள்ளது. இந்த நூலின் குறிக்கோள் நோக்கம் யாது?" என்றாள்.

மகாராணி இந்த நூலின் பெயர் "அங்கமாலை" என்பது. தங்களுடைய பேரழகினை வருணித்துக் கூறுவது, இதனுடைய நோக்கம், இடையிடையே தங்களைப் பற்றின போற்றுதல்களும் உண்டு. இதுவன்றி வேறெதுவும் இதில் இல்லை என்று பதிலளித்து விட்டு மேலும் விட்ட இடத்திலிருந்து படித்து விளக்கத் தொடங்கினார். ஒரு சில கணங்கள் அரசி மௌனமாக அமர்ந்து செவி கொடுத்தார். ஓரிரண்டு சூத்திரங்களுக்குப் பின், அரசி மறுபடியும் இடையில் குறுக்கிட்டுக் கூறினார்.

புலவரே, "உங்களுடைய அந்த நூலை இங்கே கொண்டு வாருங்கள். இது போன்ற உறுப்புக்களைப் பற்றிய வருணனை நூலை நான் என்றும் விரும்புவதுமில்லை, விரும்பினதுமில்லை. நிலமகள் பருவகாலங்களில் வானத்திலிருந்து போதுமான அளவு மழையை மட்டும் எதிர்பார்க்கிறாள். அந்த மழையோடு கூடிய இடி மின்னல்கள் வேண்டப்படாதது என்னும் மழையோடு கூடும் போது அவற்றையும் நிலமகள் ஏற்றுக் கொள்ளுகிறாள். ஆனால் மழைத் துளிகளே இல்லாமல் காதையும், கண்ணையும் அடைக்கக் கூடிய வெறும் இடியும் மின்னலும் எதற்காக வேண்டும். இந்த உங்கள் நூலை நமது புனித ஆறாகிய நர்மதைக்கு நாளைய தினம் அர்ப்பணிக்கப்படவுள்ளது. இது உலகத்துக்கு வேண்டாதது. எனவே, நீங்கள் இப்போதே இந்த இடத்தைக் காலி செய்து விடுங்கள்" என்று.

இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு நுட்பம். அரசி அகல்யாபாயின் சூட்சும உணர்வு, மக்களின் நலன் வேண்டத்தக்கவை, வேண்டத்தகாதவை என்று பிரித்தறிந்து தகாதவற்றை உடனடியாகக் களைந்தெறியப்படும் உறுதிப்பாடு ~~[illegible]~~ இதிலிருந்து காண முடிகிறது.

ஆம். இன்று நமது தேசத்தில் உள்ள தலைவர்கள் பயிர் எது, களை எது என்று தெரியாதவர்களாகவே உள்ளனர். எதிர்காலத்திலாவது இந்த நாட்டில் உண்மைக்கும் பொய்யுக்கும் இடையிலுள்ள பேதம் இன்னது என்று அறிந்து நல்லதை ஆதரித்து அல்லதை அகற்றும் ஒரு தலைவர் பிறந்து வர நாம் விரும்பி வேட்கையுறவர்களாய் இருப்போமாக.

உடம்பின் விலை.

கூனும், குருடும், செவிடும், அசடும் போன்ற குறைபாடுகளுடன் குழந்தையைப் பெற யாரும் விரும்ப மாட்டார்கள். மாறாகப் பண்பார்ந்த நல்ல இயல்புகளுடன் அழகான குழந்தையே பிறக்க வேண்டுமென ஒரு தாய் விரும்பினும், அதுவும் நிறைவேறும் ஒன்று அன்று. பிறக்கவுள்ள குழந்தையாவது, தான் எப்படிப் பிறக்கவேண்டும் என்பதையறிந்து பிறக்கவும் இயலாது.

ஆனால், ஒரு தாய் கருவுற்று வயிற்றில் வளர்ந்து கொண்டிருக்கும் சிசு, மாதங்-...ந்ததும், பெறுவதும் பிறப்பதுமான காரியம் நடந்தே தீருகிறது... அது, ...யர் எதிர்பார்த்ததாகவோ, மாறாகவோ ஆண் அல்லது பெண் எனும் உருவில் பிறந்...க்கக் காண்கின்றனர். இது இயற்கையின் பொது நியதி.

ஒரு தாயுள்ளம், தான் பெறும் குழந்தை-அது எப்படியிருப்பினும், தாங்கிக் கொள்ள வல்லது. இரத்த பாசத்திற்கு அந்தச் சக்தி இயற்கையாய் அமைந்துள்ளது. குறையோடு கூடிய குழந்தையாயிருப்பினும், அதைப் பார்த்து உள்ளம் நொந்து ஒழுகும் கண்ணீரைத் துடைத்தவாறே, அந்தக் குழந்தையைப் பாராட்டித் தாலாட்டி வளர்க்க ஒரு தாய் தவறவே மாட்டாள்.

அங்கங்கள் ஒன்றிரண்டு மட்டுமல்ல, எண்ணிவைத்தபடி எட்டுக் கோணல்கள். ஆம்! காது யானைக் காது. கண்ணோ, மாறுகண்; வாயோ, கோணல் வாய்; மார்பு, கோழி மார்பு; முதுகு கூனல்; முட்டிக் கால்கள், ஆறு விரல்களுடைய கைகள், அவலட்சணமான தலைவடிவு. முன்னொரு காலத்தில் ஒரு பார்ப்பனத் தாய்க்கு இத்தகைய அவலட்சணமான ஒரு குழந்தை பிறந்தது. இந்த அழகுக் குழந்தையைப் பெற்ற அந்தத் தாய் உள்ளத்தில் வேதனை கவ்வ, வேறு ஒன்றும் செய்ய இயலாதவளாய், அதை வளர்த்து வந்தாள். குழந்தையும் நாளடைவில் வளர்ந்து கற்கும் வயதில் கற்கத் தக்க நூல்களைத்தையும் பழுதறக் கற்று கற்றதற்குத் தகுந்தவாறு உலையாது, ஒழுகி, 'மிகப் பெரிய அறிவாளி இவன்' வாழ்ந்து வந்தான். அவனை 'அட்டவக்கிரன்' எனப் பெயரிட்டு அழைத்து வந்தனர்.

அந்தக் காலத்தில், 'தேவேந்திரன்' என்னும் பெயருடைய அரசன், இந்த நாட்டில் ஒரு பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரை, ஒரு 'தெய்வீகத் தன்மை வாய்ந்த அரசன்' என்று மக்கள் கருதிப் போற்றி வந்தனர். அவர் அவ்வப்போது முற்றும் துறந்த முனிவர்களை அழைத்து, சபையைக் கூட்டிப் பேசச் செய்து புதுமையான விஷயங்களை அறிந்து மகிழ்வது வழக்கம்.

'அட்டவக்கிரன்' இந்த நிகழ்வுகளைக் கேள்விப் பட்டுத்தானும், அந்தச் சபையில் கலந்து கொள்ள ஒரு நாள் விரும்பிச் சென்றான். உடல், கோணல் மாணலாயினும், உள்ளம் நேரானதாயிருந்ததனால், அவன் சபை கூடியிருக்கும் நேரத்தில், தயக்கமோ, அச்சமோ இன்றி உள்ளே சென்றான். அட்டவக்கிரன் அங்கு வரக் கண்டதுமே, சபையில் அமர்ந்து கொண்டிருந்த துறவிகளும் பொது மக்களும் தத்தம் சிந்தனையும் செயலும் இழந்தவராய் உள்ளத்திலிருந்து பீறிட்டு எழுந்த சிரிப்பை அடக்க முடியாதவர்களாய் எல்லாரும், ஏகமாகப் பெருங்குரலில் ஆரவாரித்துக் கைகொட்டி நகைத்தார்கள். அவனைச் சுட்டிக் காட்டி, உடல் குலுங்க, விழுந்து விழுந்து சிரிக்கும் செயலை அவர்களால் தவிர்த்துக் கொள்ள முடியவே இல்லை. தேவேந்திரனும்கூட அதற்கு விதிவிலக்காக இல்லை.

கோலாகலமாகச் சபை முழுவதும் தன்னைப் பார்த்து ஏளனத்தோடு சிரிப்பதைக் கண்ட அட்டவக்கிரன், அவர்களைப் பார்த்துத் தானும் அவ்வாறே கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்தான். அவர் தன்னைப் பார்த்து செய்யும் இந்த ஏளனத்திற்கு ஒரு துளியும்கூட வெட்கப் படவில்லை என்பதை சபையிலிருந்த துறவிகள் கண்டனர். தம்மை மிகவும் மேலானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த துறவிகள், அட்டவக்கிரன் சிரித்ததைப் பார்த்து, "அடே, எட்டுக் கோணல் சரீரமே, நீ எதற்காக இப்படிச் சிரிக்கிறாய்? சொல், நீ இவ்வாறு எங்களைப் பார்த்துச் சிரித்ததற்கு சரியான காரணம் கூறாவிடின், எங்களுடைய சாபத்திற்கு நீ ஆளாக வேண்டிவரும்" என்றனர்.

இதைக் கேட்ட அட்டவக்கிரன் துளியும்கூட அசைந்து கொடுக்காமல், முதலில், "நீங்கள், எல்லாரும் சிரித்ததற்கான காரணம் என்னவென்று சொல்வீர்களா?" என்றான்.

"உன்னுடைய உடம்பு முழுவதும் கோணல் மயமாய் உள்ளது. உன்னைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் இது சிரிப்பை மூட்டாது விடுவதில்லை. எனவே, உன்னைப் பார்த்து நாங்களும் சிரித்தோம். ஆனால், உன்னுடைய சிரிப்புக்கு என்ன காரணம்?"

சாக்ரட்டீஸ்.

பழமொழிகள் அழகிய கன்னிப் பெண்களைப் போன்ற மிகவும் வசீகரமானவை. பார்த்தவர்களுக்கு அவர்கள் பரவசமூட்டுவதைப் போலவே பழமொழிகளும் படித்தவர்களுக்குப் பரவசமூட்டவல்லவை.

பிறந்த வீட்டிலிருந்தும், பிறந்த ஊரிலிருந்தும், அவர்கள் திருமணம் புரிந்து கொண்டு சென்றுவிடுவதைப் போன்றன்றி பழமொழிகள் பிறந்த ஊரிலிருந்து கொண்டே அயலூர்களுக்கு மட்டுமன்றி, அயல்நாடுகளுக்கும் மெல்ல, மெல்லச் சென்று பரவிக் கொண்டே இருக்கவல்லவை. அதுவுமன்றி என்றும் உலகத்தை விட்டு நீங்காத நிலை பெற்றிருக்கவும் வல்லவை. கதைகளுடைய கதையும் பழமொழிகளைப் போன்றதே ஆகும்.

"தாயுக்குப் பின் தாரம் என்பது நம் தாய் நாட்டுத் தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று." ஒரு தாய் தான் ஈன்ற மகவினை இரவும் பகலும் இடைவிடாது அதன் தேவையறிந்து வேண்டியதனைத்தும் செய்து பாதுகாத்து வளர்ப்பதைப் போலவே ஒரு மனைவியும், தன் கணவனுக்கு எந்த வித ஒரு குறைபாடும் நேரவிடாது அவன் வாழ்நாள் முழுவதிலும் கூடவேயிருந்து பாதுகாத்து வாழ்க்கையில் பங்கு-பற்றிவருபவளாகிறாள்.

ஆகவே, ஒவ்வொரு ஆடவனும் ஒரு நல்ல குணமுள்ள மனைவியை வாழ்க்கைத் துணையாகப் பெற அருகதையுடையவர்களாக ஆனார்களாக. நல்லவர்களான இத்தகைய தம்பதிகளின் இல்லறத்தில் இன்பமன்றி துன்பம் என்ற ஒன்று என்றுமிருக்க அங்கு இடமிருக்காது.

ஆனால், மாறாக ஒன்று நல்லதும், ஒன்று கெட்டதுமாயிருந்தால் அத்தகைய திருமண வாழ்வில் துன்பமன்றி இன்பம் எனும் ஒன்று அங்கு என்றுமிருக்க இடமிருக்காது. இந்தக் கருத்தின் பிற்பகுதியை மட்டும் நிரூபிக்க வந்த கதை தான் இது. படித்த நம்மைச் சிந்திக்கச் செய்யும் அருமையிலும் அருமையான கதை இதுவொன்று.

"அச்சா தோஸ்து அவுரா அச்சி பத்னி கிஸ்மத் வாலும் கோ மிலதாஹை" என்ற இந்தி மொழியிலும் ஒரு பழமொழி இருக்கிறது. 'கிஸ்மத்' என்றால் 'பாக்கியம்' என்பது பொருள். இது சாக்ரட்டீஸின் விஷயத்தில் மட்டும் ஒரு துளியுங்கூட பொருந்தியிருக்கவில்லை. ஏனென்றால் உலகத்தில் மிகப் பிரசித்தி வாய்ந்த 'சத்திய பரிசோதகன்' என்ற எல்லோராலும் பாராட்டப்படுவது ஒரு சிறிய பாக்கியம் ஒன்று அல்ல. பாக்கியம் (பாக்கியம் என்ற சொல்லுக்கு இங்கு செல்வம் என்ற பொருள் படுத்திக் கொள்ள வேண்டாம்) மனைவி அமைவதுங்கூட ஒரு பாக்கியந்தான். செல்வத்தையும் மனைவியையும் ஒருவன் அடைவதைக் காட்டிலும் 'ஆத்ம ஞானம்' என்ற ஒன்றை ஒரு மனிதன் அடைந்தானெனில் அதுவே பரிபூரணமான பெரும் பாக்கியமாகும். அஞ்ஞானத்தில் ஒவ்வொரு மனிதனும் அதோகதியடைகிறான். அஞ்ஞானம் மனிதனுடைய பெரிய விரோதி. ஆகையால், அஞ்ஞானத்தை அறவே நாம் துடைத்தெறிய வேண்டும். மெய்ஞ்ஞானம், அமிர்தமயமானது அடைந்தே தீர வேண்டியதுமாகும். ஆனால் மற்ற வஸ்துக்களைப் போல் பழக்கத்தினால் அது தேடிக் கொள்வது ஒன்றல்ல; இடைவிடாத சுய முயற்சியினால் தேடிக் கொள்ள வேண்டிய வைராக்கியத்திற்குரியது மெய்ஞ்ஞானம். வெறும் தெய்வத் திருநாமங்களை சொல்லிக் கொண்டு திரிந்து வரட்டு சம்பிரதாயம் இதனிடம் செல்லாது; எனவே தான் 'ஞானிகளிடம் தெய்வமும் உள்ளது' என்னும் பழமொழியும் பிறந்துள்ளது.

இத்தகைய ஞானியான சாக்ரட்டீசுக்கு ஒரு நல்ல மனைவி வாய்க்கவில்லை. ஆயினும் கூட சாக்ரட்டீஸ் தன் வாழ்க்கையை அந்த அரக்கியுடனேயே வாழ்ந்து வரலானார். எத்தகைய கடுமையான சந்தர்ப்பமாகவேயிருக்கட்டும்; ஆத்மாபிமானமில்லாத விஷயமாகவே இருக்கட்டும். சாக்ரட்டீஸ் அப்போதும் பொறுமையை மட்டும் கைவிட மாட்டார். ஆயினும், இவருடைய மனைவி மகா மூர்க்கியும், முன் கோபமும் உடையவளாகவேயிருந்தாள். அவள் சாக்ரட்டீசுக்குக் கொடுத்த துன்பங்கள் எட்டில் எழுதி விளக்க முடியாதவைகள். ஆயினும், சாக்ரட்டீஸ் சகித்துக் கொண்டு அவளோடு தான் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள், காலை வேளை வீட்டில், அவருடைய மனைவி சமையலறையில் இருந்த பண்டபாத்திரங்களை விளக்கிக் கொண்டிருந்தாள். வழக்கம் போலச் சாக்ரட்டீஸ் தன்னுடைய தனியறையில்

அமர்ந்தவாறு ஒரு நாலை மனமொன்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். இப்படி நான் ஆராய்ச்சியிலிருக்கும் போது அவருடைய உள்ளம் இரண்டறற அறிவிலேயே ஒன்றி விடுவதுமுண்டு.

சாக்ரட்டீஸின் தர்மபத்தினிக்கு அவருடைய இந்த ஒன்றிய நிலைதான் மிகமிகப் பிடிக்காததாகயிருந்தது. 'எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது' எனும் ஒரு சந்தர்ப்பம் போன்றது நான் அப்போது அவருடைய நிலையும். அன்றும் எதையோ மனதில் எண்ணிக் கொண்டு எதனையோ வாயில் முணுமுணுத்தவாறு கொஞ்ச நேரமும், பிறகு கொஞ்சம் அதிகமான சுச்சலமாக அவள் பாத்திரங்களை விளக்கினாள். சாக்ரட்டீஸின் காதில் விழும்படியாகவே மிகவும் இழிவான சொற்கள் அப்போது அவளுடைய வாயிலிருந்து வந்து கொண்டிருந்தன. வேண்டுமென்றே பாத்திரத்தை எடுத்து வீசியெறிந்தாள். ஒவ்வொன்றையும் ஒலியுண்டாகும்படி கீழே வைத்தாள். இவள் என்னதான் சண்டித்தனம் செய்தும் சாக்ரட்டீஸ், என்ன? என்று கேட்கவில்லை. ஏனென்றும் திரும்பிப் பார்க்கவில்லை.

அவருடைய இந்த மௌனம் அவளுக்கு மேலும் அதிகமான கோபத்தை மூட்டிற்று. பாத்திரங்களைக் கழுவி முடித்த அசுத்தமான கரியும், கழிவுப் பொருள்களும் நிறைந்த தண்ணீரை ஒரு பெரிய பாத்திரத்துடன் எடுத்துக் கொண்டு வெளியே கொட்ட வந்து கொண்டிருந்தாள். இடையில் தன்னுடைய கணவர் கற்சிலைபோல் அமர்ந்தவாறு படித்துக் கொண்டிருப்பதை பார்த்தாள். அப்போதும் அவர் ஏறெடுத்துப் பார்க்கவில்லை; ஏனென்றும் கேட்கவில்லை. இந்த நிலையைப் பார்த்த அந்த அரக்கியின் பொறுமை எல்லை மீறிற்று. உலகம் என்ன சொல்லும் என்பதை எண்ணிப் பாராது, என்ன செய்ய நினைக்கிறோம் என்பதையுமறியாது, அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று சிந்திக்காத அந்தக் கொடிய பிசாசு பெரிய பாத்திரத்திலிருந்த அந்த அழுக்கு நீர் முழுவதையும் சாக்ரட்டீஸின் தலையின் மீதே ஊற்றி முடித்தாள். இதனையும் சகித்துக் கொண்டு எதுவும் பேசாத பொறுமையோடு இருந்த சாக்ரட்டீஸ் அவள் திரும்பிச் செல்லும் போது வாய் திறந்து பேசினார்:

."வெளியே இடிகாற்றும் வெறும் இடியும் மின்னலுமாக இருந்தது. இப்போது நான் மழை பெய்து கொண்டிருக்கிறது போலும்" என்று.

அன்றொரு நாள் அவருடைய சொந்த வீட்டில் நடந்த நிகழ்ச்சி இது. அந்த மகாநுபாவன் இதை எப்படித் தான் சகித்துக் கொண்டாரோ அதை நாம் அறியோம். வீட்டுக்குள் இவ்வாறாயின் அந்தப் பெரிய ஏதென்ஸ் நகரத்து மக்களால் இவருக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு ஒரு எல்லையேயிருக்கவில்லை.

சாக்ரட்டீஸ் ஒரு பரம தத்துவ ஞானி. எதையும் ஆராயும் அறிவு அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. அவர் அறிந்து தேடியது சத்தியம் ஒன்றையே. சத்தியமே அவருடைய தெய்வம் சத்தியத்தையே ஆராதித்து வருபவர். இத்தகைய ஒரு பெரிய ஞானிக்குத் தன் சொந்த ஊரான ஏதென்ஸ் நகரத்தில் உள்ள மனிதர்களில் பலருக்கு மேல் பகைவர்களாயிருந்தனர். அழுக்காறுடையவர்களாக இன்னும் சிலர் இருந்தனர். அவர்கள் சாக்ரட்டீஸின் மீது சுமத்திய குற்றம் கடவுளை நம்பாத நாத்திகன் என்பது தான். 'தன்னுடைய ஆராய்ச்சி ஒன்று மட்டுமே இந்த நாஸ்திகனுக்குக் கடவுள்' என்றும் சாற்றுவார்கள். 'குயுக்தியான தன் பேச்சினால் நகரத்து இளைஞர்களையெல்லாம் கெடுத்து விடுகிறான்' என்றெல்லாம் பேசிக் கொள்வார்கள்.

ஒருநாள், இத்தகைய குற்றங்களைச் சுமத்தி சபையைக் கூட்டி பெரிய மனிதர்கள் என்பவர்கள் அமர்ந்து கொண்டு இல்லாததும் பொல்லாததும் கூறி சாக்ரட்டீஸைக் குற்றவாளியாக்கினார்கள். விஷக் குடித்து உயிர் விடவேண்டுமென்ற கோரமான தண்டனை விதித்தார்கள். 'தன் கையாலேயே அதைக் குடித்து தன்னுடைய உயிரை தானே நீக்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள்.

மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த சாக்ரட்டீஸ் மலர்ந்த முகத்தோடும், நிறைந்த மனத்தோடும் அந்த விஷக் கோப்பையை எடுத்துக் கையில் வைத்தவாறு "சகோதரர்களே, உங்களுடைய எல்லோருடைய நலத்திற்காகவும், மன நிறைவுக்காகவும் நான் இந்தப் பானம் பருகுகிறேன்" என்று கூறி அருந்தித் தம்முடைய இகலோக வாழ்க்கையை முடித்துக் கொண்டார். ஆனால், அந்த அரிய ஞானி சாக்ரட்டீஸ் இறக்கவில்லை. அவர் இன்றும் நம்மோடு வாழ்கிறார்

—o—

கற்பனைச் சூழ்ச்சி.

அட்டூக்கிரன் நிபதியில் திட்டமிட்டுப்போதுமான அளவு பொய்யும் புனைச்சுருட்டும் கலந்த நிரந்தரமாகத் தமிழ் மக்களை அடிமைகளாக்கி ஆளப் புனையப்பட்ட கதை தான் தமிழ் மகா பாரதக் கதை. நமக்கு வேண்டியதனைத்தும் அதில் அடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், நமக்கு வேண்டிய ஒன்றைத் தேடியெடுக்கத் தொடங்கினால் எதுவொன்றையும் நாம் அதில் கண்டெடுக்கவே மாட்டோம்.

ஆம், மகாபாரதம் நமது காலத்தை வீண் செய்து வைக்கிறது. நம்பிக்கையூட்டி மோசம் பண்ணுகிறது. இறுதியில் நம்மை அடிமை கொண்டு ஆளப் பார்க்கிறது. 'கிருஷ்ண பரமாத்மா' என்ற ஒரு சொல்லுக்கு நாம் மதிப்பளித்து அந்தக் கற்பனை உருவத்தைக் கடவுளாக்கிக் கொண்டு கோவிந்தம் போட வேண்டியவர்களாகி விடுகிறோம்.

உபநிஷத்துகள் இந்த கிருஷ்ணனை தெய்வம் என்று ஒரு போதும் ஒத்துக் கொள்ளாது. "ரிதம், சத்தியம், பரப்பிரம்மம்" என்கிறது உபநிஷத்து. இந்தக் கருத்துப் படி தெய்வமும், மனிதனும் வெவ்வேறு என்று கூறுவது பெரிய தவறு. சத்தியமும், நீதியும் வெவ்வேறு எனக் கூறுவது அதைவிட மிகப் பெரிய தவறு.

'மனிதன், சத்தியமும், நீதியும் உளத்தில் வைத்துக் கொண்டொழுகின் தெய்வமாகிறான்' என்பது தான் உண்மை. அதனால் தான் "சத்தியம் வதா, தர்மம் சரா". அதாவது 'உண்மையைப் பேசு. அறவழி ஒழுகு' என்கிறது உபநிஷத்து.

எனவே, "மகாபாரதக் கதை எலியைப் புலியாகக் காட்டித் தமிழர்களை மயக்கி அடிமை கொண்டுள்ளது" என்பதற்கு ஆதாரமாய் மகாபாரதப் போர்க்களத்தைப் பற்றிய இந்த ஆராய்ச்சி அறிவுக் கதையை இனி எல்லாரும் கூர்ந்து படித்துப் பாருங்கள். தயவு செய்து, ஆம், நாம் ஒவ்வொன்றிலும் உண்மைகளை ஓர்ந்துணர்ந்து கொள்ளாத வரையிலும் உயர்வுக்குரியவர்களாக மாட்டோம். உண்மையே விஞ்ஞானம். உண்மையே தெய்வீகம். அதை உணர்ந்தொழுகுவதுதான் அறிவுடைமையுமாகும்.

மகாப்பாரத யுத்தம் பதினெட்டு நாள் கால அளவில் நடந்து முடிந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒரு செய்திதான். அதிரதர், மகாரதர்களோடு கூடிய இந்தப் போரில் கௌரவர்களுக்கு உரிய சைன்யம் பதினொரு அக்சோகினி. அடுத்து, பாண்டவர்களுக்குரியது ஏழு அக்சோகினி சேனை இவை அனைத்தும் நாசமாயிற்று.

ஆனால், இந்த 'அக்சோகினி' எனும் கணக்கு உண்மையாகவே இருந்திருந்தால், சிந்தித்துப் பார்க்கும் ஒருவனுக்கு இது திகைப்பிரமையை உண்டு பண்ணிவிடும். ஏனெனில், அந்தப் போர்க்களத்தில் அக்சோகினிக்கு உட்பட்ட எண்ணிக்கையில் 'ஐம்பது லட்சம் காலாட்கள்' நேருக்கு நேர் நின்று போர் செய்து மடிந்துள்ளனர். ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரதங்கள் (ரதம் ஒன்றுக்கு நான்கு குதிரைகள் வீதம் பூட்டப்பட்டவை) சகிதம் சுக்குச் சுக்காக நொறுங்கிப் போயிற்று. 'ஒரு லட்சத்து முப்பதினாயிரம் யானைகள்' மேலும் யானைகளின் மூன்று மடங்கு அதாவது, 'மூன்று லட்சத்து தொண்ணூறாயிரம் குதிரைகள்' செத்தொழிந்தன.

இந்த யானைகள், குதிரைகள், ரதங்கள், காலாட்களுக்கு வேண்டிய ஆகாரம், ஆயுதங்கள் முதலான சாமக்கிரிகளைத் தேடித் தயார் செய்து கொண்டு வந்து இவ்வனைத்தையும் பராமரிப்பதற்கு எத்தனையோ லட்சம் மக்கள் பரிசாரகர்களாக இருந்தே தீர வேண்டும் என்பதுவும் உண்மை.

'குருச் சேத்திரத்தில் நடந்ததெனக் கூறப்படும் இந்த போர்க்களம் இன்றைய டெல்லிக்கும், தானேசுவரத்துக்கும் இடையில் உள்ள சிறு நிலப்பரப்பு தான்' என்று சொல்லப்படுகிறது. ஆனால், இவ்வளவு பெரிய அளவிலுள்ள பதினெட்டு அக்சோகினி படைகளுக்கு இந்தச் சிறிய நிலப்பரப்பிலிருந்து எப்படித்தான் போர் புரிந்திருக்க [illegible]

ஆங்கிலேயர்கள், நமது பாரதப் புண்ணிய பூமியில் காலடி எடுத்து [illegible]

முன் 'மக்கள் கணக்கெடுக்கும் நடைமுறை' நமது பழக்கத்தில் இருந்திருக்கவில்லை. 'லார்டு ரிப்பன்' வைசிராய் ஆக இருந்த காலத்தில் தான் முதன் முதலாக (ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தியொன்று) மக்கள் கணக்கு எடுத்ததில், (இன்றைய பர்மா, பாகிஸ்தான், பங்களாதேசம், ஸ்ரீலங்காவையும்) சேர்த்து மொத்தம் இருபது கோடி என்று தொகைப் படுத்தி உரைக்கப்பட்டது.

இது இவ்வாறாக, எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாய்க் கூறப்படும் இந்த மகாப் பாரதப் போரில் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் போர் வீரர்கள் சேர்ந்திருந்தனர் என்பதை எப்படி நம்புவது. இதுவுமன்றி விவசாயிகளுக்கு அத்தியாவசியமான கொத்து, கொடுவாள், குந்தாலி, கோடாலி, கொழு இவற்றிற்கெல்லாம் இரும்பு போதுமான அளவு கிடைக்காதிருந்த அந்தக் காலத்தில் ரதங்களுக்கும் ஆயுதங்களுக்கும் போதுமான இரும்பு எங்கிருந்து கிடைத்தது அவர்களுக்கு?

வரலாற்று நூலின் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தால் மௌரிய ~~அரசுகள்~~ சாம்ராச்சியத்திற்கு முன் பாரத தேசத்தில் ஆட்சி செய்த அரசுகள் தமக்கு என்று நிரந்தரமாகப் படை வீரர்களை வைத்து போசித்துக் கொண்டிருந்ததாக நாம் காண இயலாது. அந்த அளவு மக்கள் தொகைப் பெருக்கமும் பாரதயுத்த காலத்தில் இருந்திருக்க முடியாது. சந்திரகுப்தன் தன்னிடம் தயாராக வைத்திருந்த படையில் கேவலம் நான்கு லட்சம் வீரர்கள் மட்டுமே என்று தெரிய வருகிறது.

இன்னொரு விசேஷமான செய்தி என்னவென்றால் மகாபாரதத்தின் பருவங்கள் பதினெட்டு. மகாபாரதத்துக்குள் புனைந்து செருகப்பட்ட பகவத் கீதையின் அத்தியாயங்களும் பதினெட்டு. யுத்தம் நடந்த நாட்களும் பதினெட்டு. அதே போன்று அக்சோகினி சைன்யம் கூடப் பதினெட்டு. இப்படி எல்லாம் பதினெட்டாக இருந்திருக்கக் கூடுமோ? இதை உண்மை என்று நம்பலாமா. ஆயினும் நாம் நம்ப முடியாததொன்றை நம்பினோம். ஏன் நம்பினோம்? அறியாமை காரணமாக, ஆராய்ந்து பார்க்க அறியாதவர்களாக, நாம் இருந்த காரணத்தினால் தான் இந்தப் பொய்களையும் புனைசுருட்டுகளையும் தெய்வீகமென்று நம்பினோம்; அடிமைகளானோம்.

மாமருந்து.

தெலுங்கு தேசத்தில், கோதாவரி நதிக் கரையில் இருந்த ஒரு சிறிய கிராமத்தில், குடியானவன் ஒருவன் வசித்து வந்தான். நன்செய்யும், புன்செய்யுமாக அவனுக்கு சில ஏக்கர் நிலமும் சொந்தமாக இருந்தது. நல்ல முறையில், ஒவ்வொரு நாளும், கண்ணும் கருத்துமாக நிலத்தில் பாடுபட்டு விதைத்து விளைவினை எடுத்து வீடு சேர்த்து பசியாற உண்டு மகிழ்வதுதான் அவனுடைய பரம்பரைத் தொழிலாக இருந்தது.

(அறிவுள்ள நல்ல மனைவியும், ஆணும், பெண்ணுமாக இரண்டு அழகான குழந்தைகளும் உள்ள ~~அழகுசு அளவான குடும்பத்திற்குத் தலைவன் அவன்~~. பகற்பொழுது நிலத்தில் பாடுபடுவதற்கு; இரவுப் பொழுது இல்லத்திற்கு வந்து இன்புற்று உண்டு உறங்குவதற்கு என்ற இரண்டே வாக்கியங்கள் தான் அவன் தன் முன்னோர்களிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஞானோபதேசமாக இருந்தது.) (உள்ளத்தில் வேறு ஒளி இல்லை;) ஒப்பமில்லை; ஆக்க ரீதியான நினைவுகள் அவனுடைய உள்ளத்தில் உதித்ததே இல்லை. அறியாமையின் காரணமாக ஐயமும், அச்சமும், கவலையும் நெருங்கி அவனோடு உறவு கொள்ளத் தொடங்கின.)

"உடைமை தேடிக் கொள்ளாதவனை ஊரில், எவரும் மதிக்காத குறைபாடு", ஏகநாதர் காலத்திலும் இருந்தது; எனவே, இந்த உழவர் பெருமகனும், வழியில் போக வர இருந்தபோது ஏகநாதரைச் சிலசமயம் நேரில் பார்த்தும் பாராதவனாய், தன்னுடைய குடித்தன கௌரவத்துக்குத் தாழ்ந்தவனாகவே எண்ணி, கம்பீரமாக ஒதுங்கிச் செல்வான். ஆயினும், அடிக்கடி ஏகநா[illegible]ன் முகம் மட்டும் இவன் அகத்தில் ஆழப்பதிவுற்றிருந்தது.

கையிலும், பையிலும் காசில்லாத இந்த[illegible] பரதேசியின் முகம் — சூழ்நிலை காரணமாக பிரச்சினைகளும், கவலைகளும் தோன்றும் போ[illegible] கூடவே அவனுடைய உள்ளத்தில் தோன்றத் தொடங்கும்.

ஒளி மிகுந்த கண்கள், பரிவு மிகுந்த பார்வை, கம்பீரமான தோற்றம், மென்மையான குரலினிமை, குற்றம் காணமுடியாத ஒழுக்கம் ஊரில் உள்ள மற்ற எவரிடமும் காணக் கூடாத காட்சியாக ஏகநாதரைக் கண்டான், அவன்.

ஏகநாதர், ஒரு ஆத்ம ஞானி, "தான் வேறு, தெய்வம் வேறு அன்று" என்று அறிந்து ஒழுகுபவர். இந்த ஆத்ம ஞானியை, 'காசே தான் கடவுளென்றும், உண்பதும் உடுப்பதுமே வாழ்க்கை' என்றும் கருதும் குடியானவன் இனங் கண்டு கொள்வது ~~இயலாதது~~ ~~என்பது~~. ~~ஆயினும்~~, இன்று அவரைப் போய் கண்டு பேச வேண்டும் என்னும் ஆவல் அவனுடைய உள்ளத்தில் ஒருநாள் உதித்தது. ஒரு மாலை நேரம் ஏகநாதரைப் போய் தரிசித்தான். தன் உள்ளத்தை வெளிப்படுத்தினான்.

"ஐயனே, எனக்குடைமைகளிலிருந்தும், உற்றார், உறவினர்களிலிருந்தும், குழந்தை குட்டிகளோடு கூடிய குறைவற்ற குடும்பமிருந்தும், பலவ[illegible] ...னால் நான் மிகவும் பாதிக்கப்படுகிறேன். அச்சம், அகத்தை விட்டு அகலாத [illegible] உங்களுடைய ஒளி மிகுந்த முகமே, என்னை [illegible] ...ரச் [illegible] ...னா'

ஏகநாதர், 'உனக்கு எல்லா [illegible]

செய்தார்.

என்று

சீடனின் இந்தக் கேள்வி குரு எதிர்பார்த்ததேயாகும். குருநானக் புன்முறுவலோடு அதைப் பற்றி விளக்கிக் கூறலானார்: "அப்பனே இந்த ஊர் மக்கள் நல்லவர்கள். சின்னா பின்னமாகி அவர்கள் வேறு ஊர்கள் தோறும் இவர்கள் சென்று பரவிக் குடியேறினால், இவர்களுடைய நல்ல குணங்களை நேரில் கண்டும், கேட்டும் நாடே நல்லதாக மாறி விடும். அமைதியும் ஆனந்தமும் அங்கங்கு குடி கொண்டிருக்கும், அந்தக் கெட்ட ஊர் மக்கள் இருந்த இடத்திலேயே சுகமாக இருந்து வாழ்ந்து கொள்ளட்டும். அப்படியிருந்தால் த் மட்டும் அவர்களிடமிருந்து அந்தக் கெட்ட உலோபத்தனம் மற்ற ஊர் மக்களுக்குப் பிடிபடாது, தம்மிடமுள்ள நல்ல குணங்களையே கொண்டு, சுகமாக அங்கங்குள்ளவர்கள் வாழ இயலும். கெட்டது எங்கும் பரவக் கூடாது. நல்லது ஊர்தோறும் பரவ வேண்டும். இதுவே உலக நலத்துக்கு ஆதாரமாக உள்ளது" என்று பதிலளித்-தார். ஆழ்ந்த சிந்தனை, எதிர்கால விளைவு உலக நலம் மகானின் வார்த்தை முன்னே கசந்து பின்னே இனிப்பது போலும்.

* * * ****

விலை மதிப்பற்ற இரத்தினக்கல்:

அசோக சக்கரவர்த்தி, மகததேசம் முழுவதையும், பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியும் காலகட்டத்தில், ஓரளவு பலகீனமாயிருந்த அண்டை நாடுகள் சிலவற்றையும் போரிட்டு வென்று தன்னுடைய பண்டகசாலை ஒன்றில் விலை மதிப்புள்ள வைரம், வைடூரியம், இரத்தினங்கள் முதலானவற்றையும், உள்ளத்தில் வெற்றிப் பெருமிதத்தையும் நிறைத்து வைத்துக் கொண்டிருந்தார். அவர் காலத்தில் அரண்மனைக்கு நாடெங்கும் பிரசித்தி பெற்ற ஒரு பௌத்தத் துறவி வந்து சேர்ந்தார்.

சக்கரவர்த்தி அவரை வரவேற்று உபசரித்துக் கூட இருந்து விருந்தருந்திய பின், 'இங்கேயே சற்று உலாவி விட்டு வரலாம் வாருங்கள்' என்று அவரை அழைத்துச் சென்றார். 'உண்டபின் உலாவுதல் உடம்புக்கு நல்லது' என்று உணர்ந்து சக்கரவர்த்தி அதனை நடைமுறை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். இவ்வாறு உலாவுங்கால் தனது இந்த வைர வைடூரியங்கள் நிறைந்திருந்த அந்தக் களஞ்சியத்தைத் திறந்து காட்டத் தவறவில்லை. அப்போது சக்கரவர்த்தியின் கண்களில் ஒரு புத்தொளி காணப்பட்டது. முகத்தில் யாருமே சாதிக்காத ஒரு அரும்பெரும் காரியம் சாதித்து விட்டதைப் போன்ற ஒரு பெருமிதமும் இருந்தது. நடையில் ஒருவித கம்பீரமும் இருந்தது.

சக்கரவர்த்தி உடனே தன் பொக்கிஷத்திலிருந்து மிகப் பெரியதும் ஒளிர்வதுமான ஒரு இரத்தினத்தைக் கையில் எடுத்து அவருக்குக் காட்டியவாறு "தவசிரேஷ்டரே, இது போன்ற விலை மதிக்க முடியாத பெரிய இரத்தினம் நம் பாரதத்தில் இதைத் தவிர வேறு அநேகமாக இருக்க முடியாது" என்றார்.

இதைக் கேட்ட துறவி "அரசே, இரத்தினம் என்றால், அது மிக அதிக விலை பெறுமானமுள்ள ஒரு கல் தானே?" என்று கேட்டார். "ஆமாம், இரத்தினம் என்றால் விலை மதிப்புள்ள ஒரு கல் தான்" என்றார், சக்கரவர்த்தி.

"அரசே, உன்னுடைய இந்த நாட்டிலேயே நான் இதைக் காட்டிலும் விலை மதிப்புள்ள இரத்தினங்களைப் பார்த்திருக்கிறேன்" என்றார், துறவி.

சக்கரவர்த்தி சற்றும் எதிர்பாராத பதிலாக இது இருந்தது. எனவே, சிறு நேரம் திகைத்து நின்று, "இருக்காது? அது எப்படி சாத்தியமாகும். இது போன்ற இரத்தினம் நமது தேசத்திலேயே வேறொன்றும் இருக்க முடியாது" என்றார்.

"என்னுடைய வார்த்தையில் உமக்கு நம்பிக்கையில்லையெனின், என்னோடு நீர் வருவீராக. இதைக் காட்டிலும் விலையுயர்ந்த அந்த இரத்தினங்கள் எங்கேயிருக்கின்றனவோ, அங்கேயே உம்மை அழைத்துச் சென்று காட்டுகிறேன்" என்றார், துறவி.

இந்த வார்த்தைகளை நம்ப இயலாததாயிருந்தும், 'அவருடைய வார்த்தையைப் பரிசோதனை செய்து பார்க்கலாம்' என்ற எண்ணத்தோடு சரி என அரசன் புறப்பட்டார். நகரத்தைக் கடந்து சென்று அங்கு ஒதுக்கப்பட்டிருந்த குடிசை வாசிகளின் ஒரு வீட்டின் முன் போய் இருவரும் நின்றனர்.

"அரசே, நான் சொன்ன அந்த விலை மதிப்புள்ள இரத்தினக்கல் அதோ பார் தெரிகிறது; நான் ஏன் உம்மோடு பொய் பேச வேண்டும்" என்றார் துறவி. துறவி சுட்டிக் காட்டிய திசையைத் திரும்பிப் பார்க்காது நின்ற சக்கரவர்த்தி "உம், இது ஒரு தொத்தல் குடிசை. சோற்றுக்கு வக்கற்றவன் குடியிருப்பு. இதில், அந்த விலைமதிக்க முடியாத இரத்தினம், எங்கிருந்து வந்திருக்க முடியும்? போதகரே, நீங்கள் என்னோடு விளையாடாதீர்கள்" என்றார்.

அப்போதும் துறவி சற்று குனிந்து அந்த வீட்டிற்குள் சுட்டிக் காட்டியவாறு, "அரசே, இந்தக் குடிசையில் அதோ தெரிகிறதல்லவா? நமக்கு எதிர்க்கவே, இந்தக் கல் தான், அந்த இரத்தினம்" என்றார்.

கெட்ட ஊரும், நல்ல ஊரும்...

தேச முழுவதும், அறியப்பட்டிருந்த குருமார்களில் ஒருவரான குருநானக் மிகவும் புகழ் பெற்றவர்; சுயசிந்தனையுள்ளவர்; சமயோசிதமான ~~செறிவு~~ பேரறிவும், அதைப் பயன்படுத்தும் ஆற்றலும் அவருக்கு இயல்பாகவே வாய்த்தவைகள்.

குருநானக் ஒரு முறை தம்முடைய நெருங்கிய அன்பான சீடர்களில் ஒருவரான மர்த்தானன் என்பவனை உடன் அழைத்துக் கொண்டு தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டார்.

சில நாட்கள் கழிந்த ஒரு நாள், அது ஒரு சிந்தனைக்குரிய நாளாக அவருக்கு வாய்த்தது. அன்றைய தினம் அவர் போய் ஒரு சிறியகிராமத்தில் தங்க நேர்ந்தது. அந்த ஊரில் வாழும் மக்கள் அனைவருமே ஓரளவு வளமும் வசதியும் வாய்த்து வறுமையற்ற நிலையில் வாழ்பவர்களாகவே காணப்பட்டனர். ஆயினும், அந்த ஊருக்குள் தமக்கு அறிமுகமில்லாத மனிதர்கள் எவர் வரினும், அவர்களைப் பற்றி இவர் யார், எவர் என்று விசாரிப்பதோ, வரவேற்று உபசரிப்பதோ அவர்கள் பழக்கத்தில் அறவே இல்லாமலிருந்தது. இது காரணமாக இந்த சாதுக்கள் இருவருக்கும் உண்பதற்கு உணவும், உறங்குவதற்கு இடமும் யாரொருவரும் தர முன் வரவில்லை. ஊருக்குள் வந்த புதிய மனிதர்களைப் பற்றி உதாசீனம் செய்யும் மக்கள் வசிக்கும் ஊர், குருநானக் இதற்கு முன் ஏ எங்கும் கண்டிருக்கவில்லை. வளமான வாழ்வு இருந்தும், வாழ்வாங்கு வாழ அறியாத மக்களாக அவர்கள் இருப்பதைக் கண்டு குருநானக் ஆழ்ந்து சிந்தனை செய்யலானார்.

பசியும், பட்டினியுமாக ஊர் புறத்தில் ஒரு மரத்தினடியில் அவர்கள் அன்று இரவைக் கழித்தனர். காலையில் எழுந்ததும் குருநானக் சிஷ்யனோடு குளத்தங்கரைக்குச் சென்று காலைக் கடனை முடித்துக் கொண்டு வழக்கம் போல் சற்று நேரம் தியானத்தில் அமரலானார். தியான முடிவில் குருநானக், "இந்த ஊர் மேலும் மேலும் வளமுள்ளதாகவே இருக்கட்டும். எல்லாம் வல்ல இறைவனது ஆசீர்வசனமும் இந்த ஊர் மக்களின் மீது சதா இருந்து கொண்டு இருக்கட்டும். இந்த ஊர் மக்களில் ஒருவர் கூட வேறு எந்த ஊருக்கும் சென்று குடியேறும் நிலையின்றி இங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கட்டும் இவர்கள் எல்லோருக்கும் ~~நல~~ நலமுண்டாகட்டும்" என்று வாழ்த்தியவாறு தமது தியானத்தை முடித்தார்.

அன்றும் சாலையோடு நடந்து சென்ற குருநானக்கும், சீடனும் மாலையில் வேறொரு ஊரை அடைந்தனர். அந்த ஊரில் வாழும் மக்களனைவரும் வேறு விதமானவர்களாக இருந்தார்கள். தோற்றங்களில் எளிமையிருந்தும், முகத்தில் கம்பீரம் மிக்கவர்களாக அவர்கள் தென்பட்டார்கள். பரிவும், பாங்கும் வினயமும் அவர்கள் இயல்பாக வாய்க்கப் பெற்றிருந்தனர். யார் எவர் என்று தெரியாதிருந்தும், குருநானக்கைக் கை கூப்பி வணங்கி நகை முகத்தோடு வரவேற்றனர். எளிய முறையில் அன்புணர்வோடு தம்மிடமுள்ள உணவை அவர்களுக்கிட்டு உபசரித்தனர். பல செய்திகளையும் அவர்களிடம் கேட்டவாறு தம்முடைய மனக்குறைகளையும் கூறிக் கொண்டனர். இது குருநானக்கை மிகவும் ~~கவர்~~ கவர்ந்தது; ~~வி~~ சிந்திக்கவும் வைத்தது. அன்றும் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்ட குருநானக் தியானத்திலமர்ந்தார். தியான முடிவில் குருநானக், "இந்த ஊர் பாழாகப் போகட்டும்; மழை பெய்யாதிருக்கட்டும். இந்த ஊரில் வாழும் மக்கள் அனைவரும் இங்கிருந்து குடி பெயர்ந்து நாடு முழுவதும் பரவிக் கொள்ளட்டும்" என்று பிரார்த்தனையோடு தியானத்தை முடித்தார்.

சீடன் மர்த்தானனுக்கு, குருநானக்கின் இந்த வார்த்தைகள் விசித்திரமானதாகவும், காதில் கேட்கக் கூடாதவையாகவும் மனதில் பட்டது. வருத்தத்தோடு அவன் கேட்டான், "மகாத்மா, நாம் நேற்று லோபிகள் வாழும் அந்தக் கெடு கெட்ட ஊருக்குச் சென்றிருந்து மரத்தடியில் பசியும், பட்டினியோடு இரவைக் கழித்து எழுந்தவுடன் அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறினீர்கள். மாறாக, இப்பொழுது இந்த ஊரில் வாழும் நல்ல மக்களுக்கு பயங்கரமான சாபமளிக்கிறீர்கள், அல்லவா? எதற்காக இப்படிச் செய்தீர்கள்?" என்று.

"தபோதனரே, இன்று என்னை நீங்கள் கிண்டல் செய்ய வேண்டிய அவசியம் என்ன ~~என்ன~~ உள்ளது?" இங்கே நீர் எனக்கு சுட்டிக் காட்டும் இந்தக் கல் தானியம் நெறிந்து மாவாக்கும் ஒரு யந்திரக் கல். இந்தக் கல் எப்படி இரத்தினமாக முடியும்?" என்று வினவினார், சக்கரவர்த்தி.

துறவி மேலும் அதே கல்லைச் சுட்டிக் காட்டியவாறு, "அரசே ~~மி~~ மிகமிக அதிகமான விலை மதிப்புள்ள பரோபகாரியான உண்மை இரத்தினக்கல் இது தான். உம்முடைய பொக்கி-ஷத்தில் இருக்கும் வைர, வைடூரிய இரத்தினங்களால் உடல் நோக உழைக்கும் ஒரு உழைப்பாளியின் அல்லது உலகத்தைக் கட்டி ஆளும் ஒரு அரசரின் பசியையாவது ஆற்ற உதவுமா? வயிறு நிறையுமா? பசி ஆறுமா? ஆனால் இந்தக் கல் மனிதனின் வாழ்வுக்கு ஆதாரமாயுள்ளது. இந்தத் தொத்தல் குடிசையிலே வசிக்கின்ற வயதான மூதாட்டிக்கு வயிற்றுக்கு அன்னமளித்துக் காப்பாற்றுகிறது. இதில் தானியத்தை நெறித்து மாவாக்கி, மற்றவர்களுக்குக் கொடுத்து வரும் கூலிக் காசுகளால், இவள் குடும்பத்தை நடத்துகிறாள். அன்னமளித்து ஒவ்வொரு நாளும் உயிர் காக்கும் இரத்தினமான இதற்கு முன்னால், உம்முடைய எதற்குதவாத விலை மதிப்புள்ள எல்லா இரத்தினங்களையும், மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த கலப்பு நீரில் போட்டு இந்த நெறிக்கும் கல்லுக்கு 'கண்ணெச்சில்' ~~கண்ணெச்சில்~~ தீர்ப்பதற்குக்கூட ~~தீர்ப்பதற்கும்~~ சுற்றிக் கொட்டக் கூட அவைகள் தகுதியற்றவைகள். ~~கண்ணெச்சில் தீர்ப்ப~~ (இவை பயன்படுவன). உம் பட்டத்திலுள்ள அந்த நவரத்தினங்களை நீர் அடைவதற்கு ~~எவ்வளவோ சிரமப்பட்டிருக்கிறீர்?~~ மேலும், இருந்து நீண்ட நாள் வாழ வேண்டிய எத்தனை மனித உயிர்கள் உம்மால் நீக்கப்பட்டுள்ளன? இந்தப் புனித பூமியின் மேல் எத்தனை இரத்தம் அவற்றுக்காகச் சிந்தப்பட்டுள்ளது? ~~இவ்வுலகில் உமது அந்த நவரத்தினங்களை பகலும்,~~ இரவும் எச்சரிக்கையோடு, ~~கண்விழித்து~~ காப்பாற்ற வேண்டியுள்ளது. அவற்றைத் தன் உடைமையாக்கிக் கொண்டிருந்த ஒவ்வொரு அரசனுடைய மரணத்துக்கும் அவைகளே காரணமாகியுள்ளன. ~~அவற்றினுடைய~~ இறந்த கால வரலாற்றில் எத்தனை பேருடைய உயிர் நீங்கப் போர்களை உண்டாக்கின? ~~அதை அறிந்துரைப்பவர்கள்~~ தான் எவர் உள்ளனர்? ~~எவர் அறிந்தவர்~~? சற்று சிந்தித்துப் பாரும். அரசே, சற்றுச் சிந்தித்துப் பாரும்" என்றார், துறவி.

துறவியின் வார்த்தைகள், அரசனை சிந்திக்க வைத்தன. அவன் ~~எடுத்துரைத்த~~ அவ்வளவும் வரலாற்று உண்மைகளாகவே ~~இருந்தன~~. அசோக சக்கரவர்த்தியின் ஆளுமைச் சக்தி, துறவியின் வார்த்தைகளினால், அறவே பறி போய் விட்டது போலிருந்தது. தலை தாழ்ந்தது. ~~உடலும் ஒத்துக் கொண்டது~~.

<u>அறிவுடையாத</u> அரசனாகி, அத்துடன் சக்கரவர்த்தியுமாகிய அசோகர், துறவியின் இந்த ஞானோபதேசத்தைக் கேட்டு மனமாறி 'இனி நான் இந்த உலகத்தில் உயிரோடு இருக்கும் வரை போர் புரிய மாட்டேன், என்றும் அன்பு வழியைக் கடைப்பிடித்து வாழ்ந்து தீருவேன்' என்று பிரதிக்ஞை செய்து கொண்டு அவ்வாறே வாழ்ந்து வந்தார். அந்த ஒழுக்கம் அவரை மனிதத் தன்மையிலிருந்து, அமரனாக்கி நம் பாரத மக்களால் இன்றும் போற்றப்பட்டு வருகிறதல்லவா?-

கேட்டுக் கொண்டபடியே, "நான்கே, நான்கு வார்த்தைகளை மட்டும் நான் இங்கு பேசுகிறேன். 'நான், இங்கு பேசுவதற்காக வந்தவனல்ல, இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை காண்பதற்காக மட்டும் வந்தவன். அதனால், நான் இங்கு எதையும் பேச விரும்பவில்லை. நான், இங்கு வந்து பேசவேண்டிய அவசியம் நேர்ந்தால், நிச்சயமாக வந்து பேசுகிறேன்", என்று பேசிவிட்டுத் தன் ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார்.

* * *

'ஆழ்ந்து கற்று, அமைதியாய்ச் செயல்படும் சான்றாண்மையுள்ள ஒவ்வொரு-வரும் அடக்கமுடையவர்களாகவே இருப்பர்' என்பதை ஐன்ஸ்டீன் அன்று பேசி நிரூபித்துள்ளாரல்லவா?

****

நான் காத்துக் கொண்டிருந்தேனே! " என்றார்.

* * *

ஒரு தடவை பாரிஸில் ஆராய்ச்சிக் கூடத்தில் ஐன்ஸ்டீன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்த அழைக்கப்பட்டிருந்தார். வேறு நாட்டிலிருந்து, தம் காரிய நிமித்தமாக வரும் ஐன்ஸ்டீனை பாரிஸ் விஞ்ஞானிகள் வரவேற்கும் நிமித்தம், நூற்றுக்கணக்கில் ரயில் நிலையத்துக்கு வந்து எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர். ரயில் வண்டியும் குறித்த நேரத்தில் வந்து நின்றது. உடனே, அவர்கள் எல்லோரும், முதல் வகுப்புப் பெட்டியில், தம்முடைய அபூர்வமான இந்த அதிதியைத் தேடிக் காணாமல் ஏமாற்றமடைந்தனர். ஆனால், மூன்றாம் வகுப்புப் பெட்டியொன்றில் பிரயாணம் செய்து முடித்த ஐன்ஸ்டீன், அவற்றையெல்லாம் கவனிக்காமல், ரயிலிலிருந்து இறங்கி நிலையத்தைக் கடந்து சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். ஐன்ஸ்டீனை, உற்று நோக்கி, அடையாளம் கண்டுகொண்ட அந்த கூட்டத்திலிருந்த ஒருவர், விரைந்து வந்து அவரைப் பார்த்து, "ஐயா, நீங்கள் இப்படி மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஏன் பிரயாணம் செய்தீர்?" என்று வினவ, அதற்கு, "ஐன்ஸ்டீன், சிறிதும் தயங்காமல், "இந்த ரயிலில், நான்காம் வகுப்புப் பெட்டி, ஒன்று கூட இணைக்கப்பட்டிருக்க-வில்லையே?" "என்ன செய்வது?" என்றாராம்.

* *

எந்தவொரு சொற்பொழிவை நிகழ்த்த வேண்டுமெனினும், ஐன்ஸ்டீன், அதற்கான செய்திகள் அனைத்தையும் சிந்தித்து சரியான நிலையில் தயார் செய்து கொள்ளாமல் செல்லவே மாட்டார். ஒரு தடவை, நாடு முழுவதும் இரண்டாம் முறை பிரசாரம் செய்யப்பட வேண்டியிருந்த ஒரு 'ஒரு ரேடியோ' நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருமாறு ஐன்ஸ்டீன் அழைக்கப்பட்டிருந்தார். அவரும், சரியான நேரத்திற்கு சென்று சபையில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கவனிக்கலானார். மேடை-யிலிருந்த யாரோ ஒருவர், சபையில் ஐன்ஸ்டீன் அமர்ந்திருப்பதைக் கண்டு அவருடைய அனுமதி பெறாமலேயே, "மதிப்பிற்குரிய ஐன்ஸ்டீன், அவர்கள் சபையை உத்தேசித்து நான்கு வார்த்தைகள் இப்போது பேசவுள்ளார்", என்று பிரகடனப்படுத்தி விட்டார். இதை எதிர்பாராதிருந்த ஐன்ஸ்டீனுக்கு மிகவும் தர்மசங்கடமாய் விட்டது. எனினும், உடனேயே எழுந்து சென்று, மேடைமேல் ஏறிநின்று, "மதிப்பிற்குரிய அன்பர்,

ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்காவில், ஜனாதிபதி பதவிக்குத் தேர்தல் நடைபெற வேண்டியிருந்தது. முதல் தடவையாக, ஆபிரகாம் லிங்கனும் அந்தத் தேர்தலில் போட்டியிட்டார். அவருடைய உருவப்படம் எல்லாத் நாளிதழ்களிலும் பெயரோடு பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த உருவப்படத்தை வேறு ஒரு ஊரிலிருந்த பதினோரு வயதினளான சிறிய கன்னிப் பெண்ணொருத்தி, கண் இமை கொட்டாமல் உற்றுப் பார்க்கலானாள். நீண்ட முகம், குழி விழுந்த கன்னங்கள். ஆனால், முகத்தில் தாடியே இருக்கவில்லை. உடனே, அந்தப் பெண் தன்னுடைய மனதிலேயே இந்த ஆபிரகாம் லிங்கனின் முகத்தில் ஆண்களுக்கேற்பத் தாடியும் இருந்தால் அந்தத் தோற்றம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தாள். ஓ, அந்த முகத்துக்குத் தாடியிருந்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று அவளுடைய உள்ளத்தில் பட்டது. அப்போதே, அந்தச் சிறுமி தன் அபிப்பிராயத்தை லிங்கனுக்கு தெரிவிக்க வேண்டுமென்று ஒரு கடிதமும் வரைந்தாள்.

"உயர்திரு. ஆபிரகாம் லிங்கன் அவர்களுக்கு, இந்தக் கடிதம் எழுதும் நான் பதினோரு வயது மட்டும் நிறைந்த ஒரு இளம் பெண். என்னுடைய பெயர் "கிரேஸ் பெடல்". நீங்கள் ஜனாதிபதி பதவிக்காக இந்தத் தேர்தலில் ஒரு அபேட்சகராகப் போட்டியிடுவது எனக்கு மிக அதிகமான குதூகலத்தை உண்டாக்குகிறது. பாருங்கள், எனக்கு உடன் பிறந்தவர்கள் நான்கு தமையன்மார்கள் உள்ளனர். அவர்களெல்லோரும் தம் வாக்குகளை நிச்சயமாக உங்களுக்கே அளிக்க விரும்புகிறார்கள். ஆனால், எனக்கு இங்கு ஒரு சிறிய கோரிக்கை உண்டு. உங்களுடைய நீளமான முகத்தில் தாடியே இருக்கவில்லை. ஆனால், உங்களுடைய முகத்துக்குத் தாடி மட்டுமிருந்தால் வெகு பொருத்தமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆகையால், நீங்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்வீராயின், என் சகோதரர்களின் வாக்குகள் உங்களுக்கே நான் அளிக்கச் செய்கிறேன். அதுவுமின்றி, தற்போதைய பெண்களுக்குத் தாடியுள்ள மனிதன் என்றால் தான் மிகமிகப் பிடிக்கும். ஆகையால், இங்குள்ள அத்தகைய எல்லாப் பெண்களின் வாக்குகளுமின்றி, அவர்களின் கணவர்மார்களின் வாக்குகளும் உங்களுக்கே நிச்சயமாகக் கிடைக்கும். பிறகு, நீங்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில் சிறிதும் ஐயமில்லை.

இப்படிக்கு,
"உங்களுடைய கிரேஸ்"

கிரேஸ் எழுதிய கடிதம் லிங்கனது நம்பிக்கைக்குரிய இரண்டு முக்கிய காரியதரிசிகளின் கைகளுக்கு வந்து கிடைத்தது. மிக மிக முக்கியமான கடிதங்களை மட்டும் அவர்கள் லிங்கனது பார்வைக்கு அனுப்பி வைப்பர். அதனால் ஒரு காரியதரிசி, அந்தப் பெண்ணின் கடிதத்தைக் குப்பைக் கூடையில் எறிய முயன்றார். மற்றொரு காரியதரிசிக்கு இது சரி எனத் தோன்றவில்லை. இந்த இரு காரியதரிசிகளிடையே நீண்ட வாக்குவாதம் நடந்தபின், கடைசியில் லிங்கனுடைய பார்வைக்கு அதை அனுப்பி வைத்தனர்.

சில நாட்கள் கழிந்த பின் லிங்கன், அந்த இளஞ்சிறுமி கிரேஸின் கடிதத்துக்கு பதில் எழுதினார். "என்னுடைய அன்புமிக்க சின்னஞ்சிறிய சிநேகிதிக்கு மனப்பூர்வமான நல்வாழ்த்துக்கள். நான், தாடி வளர்த்த வேண்டுமென்ற உன்னுடைய கோரிக்கை, வெகு வெகு விநோதமான ஒரு அறிவிப்பு. இந்த வயதில் நான் தாடி வளர்த்தால் அதைப் பார்த்து மக்கள் பரிகாசம் செய்வார்கள். எனினும், முடிந்தால் நான் உன்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிறேன்."

மிக அதிகமான வாக்குகள் பெற்ற லிங்கன், ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை, வெள்ளை மாளிகைக்கு அழைத்துக் கொண்டு வரும் ரயில், கிரேஸின் ஊரான "வெஸ்ட் பீல்டின்" வழியாகத் தான் செல்ல வேண்டி இருந்தது. இந்தச் செய்தி கேட்டு ஆனந்தமடைந்த கிரேஸுக்கு 'லிங்கன் தாடி வளர்த்திருக்கிறாரோ' என்று நேரில் பார்க்க வேண்டும் போலிருந்தது. லிங்கன் வரும் அந்த நாளில் அவள் ரயில்நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றாள். ஆனால், அங்கு தம்முடைய புதிய ஜனாதிபதியைப் பார்க்க வந்திருந்த மக்கள்

கூட்டம் மிகப் பெரிதாயிருந்தது. லிங்கன், அமர்ந்திருந்த பெட்டியின் மேலே அமெரிக்காவின் கொடி அசைந்தாடிக் கொண்டிருந்தது. ஆனால், லிங்கன் மட்டும் கிரேஸின் விழிகளுக்குத் தென்படவில்லை. நிராசையினால் அவள் வீட்-டிற்குத் திரும்பிச் செல்ல எண்ணினார். அந்தளவில் கூடியிருந்த மக்கள்,

புதிய ஜனாதிபதி அவர்கள் இங்கு எங்களுக்கு சில வார்த்தைகளையேனும் பேச வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டனர். லிங்கன் பேச ஆரம்பித்தார்.

"மகா ஜனங்களே, இப்போது எனக்கு இங்கு சொற்பொழிவு நிகழ்த்துமளவு நேரமிருக்கவில்லை. ஆனால், உங்களனைவரையும் பார்த்து எனக்கு மிகமிக மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கூடியிருக்கும் இந்த மாபெரும் கூட்டத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளும் ஒரு சிறிய வேண்டுகோள் இது. 'தாடியை வளர்த்தினால் என்னுடைய தோற்றம் கம்பீரமாக இருக்குமென்று எனக்குக் கடிதம் எழுதிய இளங்கன்னிப் பெண் இதே ஊரில் உள்ளவள் தான். அந்தச் சிறு பெண்ணை நான் இப்பொழுது பார்க்க மிகவும் விரும்புகிறேன்", என்றார்.

கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர், " அந்த இளஞ் சிறுமியின் பெயர் என்ன?" என்று வினவினார்.

"கிரேஸ் பேடல்" என்று லிங்கன் பதிலளித்தார். "நான் தான் கிரேஸ் பேடல். இதோ நான் இங்கே இருக்கிறேன்", என்றவாறு அந்தச் சிறுமி மக்கள் கூட்டத்தினுள் நுழைந்து வழி செய்து கொண்டு முன் வந்தாள். லிங்கனைக் கண்டவுடனே ஓடிவந்து அவர் முன் நகைமுகத்துடன் நின்று உற்றுப் பார்த்தாள். 'ஓ, சந்தேகமில்லை. நான் கற்பனை செய்து கொண்ட சித்திரமே, இவர்தான்.' என்று எண்ணினாள். லிங்கன் அவளை அன்போடு எடுத்து முத்தமிட்டு, "பார், உன்னுடைய விருப்பப்படியே நான் தாடி வளர்த்துக் கொண்டிருக்கிறேன்", என்றார். கிரேஸ், அந்த முகத்தை அழகு படுத்திக் கொண்டிருந்த தாடியைக் கண்டு, "ஆம் நீங்கள் இப்பொழுது உண்மையாகவே மிகமிகக் கம்பீரமாகத் தென்படுகிறீர்-கள்", என்றாள். அவளுடைய உள்ளம் மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது. லிங்கன், அந்தப் பெண்ணுக்கு மற்றுமொரு முறை முத்தமிட்டு, "என்னுடைய அருமைச் சிநேகிதியே, இன்னொருமுறை நான் இங்கு வந்து உன்னைச் சந்திக்கிறேன்", என்று சொல்லி சீழே விடும் போது ஆனந்தக் கண்ணீர் விட்டவாறு, கிரேஸ் லிங்கன் அவர்களை வழியனுப்பி வைத்தாள்.

'லிங்கனின் உள்ளம் மிகப் பரந்து விரிந்துள்ளது. உலகமெல்லாம் அதில் அடங்கியுள்ளது. ஆனால், அதில் பழி பாவங்களுக்கும் மட்டும் எள்ளளவும் இடம் இருக்கவில்லை.'

—எமர்சன்.

* *

சாபம்.

எல்லா நாடுகளிலும், மிகப் பழங்காலத்திலிருந்து தற்காலம் வரை, ஏன்? எதிர்காலத்திலுங்கூடக் கவிஞன் என்ற சொல்லுக்கு, மக்களுள்ளம் முதலிடம் கொடுத்துக் கொண்டுள்ளது. ஆயினும், எதிர்காலத்தை எண்ணி, நிகழ்காலத்திலுள்ள வேண்டத்தகாதவைகளைக் குறித்துக் கவிஞன், தீர்க்கதரிசனத்தோடு உரையாடும் போதும், அதற்குத்தக்க நூல் இயற்றும் போதும், மக்கள் கவிஞனைத் தூரமாக ஒதுக்கி வைத்துவிடத்தவறுவதேயில்லை. இது மக்களுடைய அறியாமையின் காரணமாக நிகழ்வதேயன்றி, கவிஞன் தவறு அதில் எதுவும் இருக்க இயலாது.

இதுவும் அன்றி, உண்மையான ஒரு கவிஞன் எப்போதாவது பரிசிலாகக் கிடைக்கும் ஊதியத்தைப் பாதுகாத்து வைத்துக் கொள்ளும் உலோப உணர்ச்சிக்கு உள்ளாவதுமில்லை. எனவே, வறுமை ஒரு கவிஞனின் இல்லத்தில் சதாவாசம் செய்யத் துணிந்து கொள்கிறது. ஆனால், இதே கவிஞன், காலஞ் சென்ற பின் எதிர்கால மக்களால், நிச்சயமாகப் போற்றப்பட்டும், புகழப்பட்டும், வருவது நடைமுறையில் இன்றும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதுகாறும் கூறிய, இந்தக் கருத்துக்களுக்குச் சரியான எடுத்துக் காட்டாக எல்லா நாட்டிலும், எல்லா மொழிகளிலும் கவிஞனைப் பற்றிய வரலாற்று ரீதியான செய்திகள் நமக்கு இன்றும் படிக்கக் கிடைக்கின்றன. அவற்றில் ஒன்று தான், இந்தக் கதையும்.

இவர் உருது மொழியில் மிகமிக இனிய கவிதைகளை எழுதி எல்லா அறிஞர்களாலும் பாராட்டப்படும் ஒரு கவிஞன். அவருடைய சுருக்கமான பெயர் 'மஜாஜ்' என்பர். சத்தியத்தைப் பின்பற்றி ஒழுகித் தீர்க்கதரிசியான ஒவ்வொருவரும், தாம் பிறந்த வீட்டிலும், சொந்த ஊரிலும், உற்றார், உறவினர் எனும் இனத்தவராலும் மதிக்கப் படுவதில்லை என்பது நிர்ணயகரமான சிரஞ்சீவித்துவமுள்ள ஒரு மகத்தான வாக்கியம். இந்த வாக்கியத்திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகவே, கவிஞர் 'மஜாஜ்' என்பவரும் வாழ நேர்ந்தது.

ஊரில், அன்றென ஒரு திருவிழாநாளாக இருந்தது. சாது சந்நியாசிகள், பக்கீர்கள், வயிற்றுப் பாட்டிற்கான 'பிச்சாந்தேகி'களெல்லாரும் ஊருக்குள் வந்து முற்றுகையிட்டு இருந்தனர். எல்லா வீட்டு வாயில்களிலும் வந்து நிற்பது போலவே அன்று கவிஞர் 'மஜாஜ்' அவர்களின் வீட்டிற்கும் 'பக்கீர்' ஒருவன் வந்து தலை காண்பித்தான். தனக்கு ஏதேனும் கொடுத்தருளுமாறு கேட்டுக் கொண்டான். மேலும், "உங்களுக்கு இனி ஒவ்வொரு நாளும் வைகறைப் போதுகளாகவே புலர உள்ளது. உங்களுடைய இல்லத்தில் குன கலம் குடிகொள்ள உள்ளது. சௌபாக்கிய தேவதையின் கருணைக்கு இந்த இல்லம் தகுந்த பாத்திரமாக அமைந்து விட்டது. எஜமானே, எனக்கு ஏதாவது உதவுங்கள்" என்று மன்றாடினான். பக்கீரின் இந்த வார்த்தைகளைக் கேட்ட கவிஞருக்கு வெறுப்பும், சிரிப்பும், சினமும் முப்பிரிக் கயிறு போல உள்ளத்தில் ஒன்று கூடிற்று. ஆயினும், அவற்றை உள்ளத்திலிருந்து, வெளியே கிளம்பி விடாமல் அடக்கிக் கொண்டு மஜாஜ் மிகவும் விநயமாகச் சொன்னார்:

"மன்னித்து விடுங்கள், பெரியவரே. இன்று உமக்குக் கொடுக்க என்னிடம் ஒரு சிறு நாணயம் கூட இல்லை, இது உண்மை; நீ சென்று வா" என்று. கல்லிலிருந்தும் நார் உரித்து விடும் வலிமையுள்ள பக்கீர்கள் அவ்வளவு எளிதாக, வந்து நிற்கும் இடத்தைக் காலி செய்து விடுவார்களா? நின்ற இடத்தை விட்டு நீங்காது, பக்கீர் மேலும் குடும்பத்திற்கான எதிர்காலப் பலனை சொல்ல ஆரம்பித்தார். "எஜமானரே, உங்கள் இல்லத்தரசிக்கும், இதயம் மகிழ்விக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆயுளும், ஆரோக்கியமும் எல்லாம் வல்ல இறைவன் அருளக் காத்துள்ளார். அதோடு கூட நிறைந்த செல்வமும் அவர் கருணைகூர்ந்து உங்களுக்கு வாரிக் கொடுக்கட்டும். இன்று உங்கள் வீடு தேடிவந்த என்னை வெறுங்கையோடு திருப்பி அனுப்பாதீர்கள்" என்று சொற்களால் அவருடைய உள்ளத்தைப் புண்படுத்தலானான். பொதி சுமந்த மாட்டின் முதுகுப் புண்ணை புசித்துப் பசியாற்றிக் கொள்ளும் உவகைச்சாலை என என்னும் காக்கைப் புத்தியே

பிச்சைக்காரன் புத்தியும்.

கவிஞர் மஜாஜின் பிறவிக் குணமே மிகவும் சாதுத்தன்மையுடையது. திருவிழா நாளாகிய இன்றைய தினம் தன் வீட்டில் உள்ள அடுப்பும் நெருப்பைக் காணாத நிலையில் செயலற்றிருந்த மஜாஜிக்கு புதியதாக அன்று உள்ளத்தில் சினம் உண்டாயிற்று. ஆனால், இந்தச் சினம், பக்கீரின் வார்த்தைகளைக் கேட்டதின் காரணமாகவோ, அல்லது சில நயா பைசாக்களை இவனுக்குக் கொடுக்க இயலாத தம்முடைய வறுமை நிலையிலிருந்து ஏற்பட்டதா என்று அறியமுடியாததாக இருந்தது.

எனவே, அவர் அந்தப் பக்கீரைப் பார்த்துக் கூறினார்: "நீ, வெகு விரைவாக இந்த இடத்தை விட்டுப் போகவில்லையானால், உன் வாழ்நாள் முழுவதும், எண்ணி எண்ணித் துன்புறத்தக்க அளவு சுடு சொற்களை உன்மேல் நான் பிரயோகிக்கப் போகிறேன், பார்" என்று.

பக்கீர், "ஆகட்டும்.... எதாவது கொடுங்கள்..... கடைசிப் பட்சம் அது மிகவும் கெட்ட வார்த்தையாயிருந்தாலும் சரி.... அதையேனும் கொடுங்கள். சும்மா வெறுங்கையோடு மட்டும் அனுப்பாதீர்" என்றான், நம்பிக்கையோடு மேலும் நின்றவாறு.

இதைக் கேட்டு, வெறுப்பும் வேதனையுமுற்ற கவிஞர் மஜாஜ் கோபக் குரலில் கூறினார், "அப்படியானால், தருகிறேன் இதோ. இங்கிருந்து போகமாட்டாயா? ...... தருகிறேன். நீ வணங்கும் எல்லாம் வல்ல அந்த இறைவன் உன்னை, என்னைப் போன்று கவிஞனாக மாற்றி விடட்டும். அப்போதுதான் என்னுடைய சொல் நிலையும், மனநிலையும் உனக்குப் புரியும்; தயவுசெய்து இனியாவது போய் விடு" என்று.

பாவம். கையில் பைசா இல்லாதிருப்பது போல், கவிஞன் உள்ளத்தில் வசவுச் சொற்களும் இருக்கவில்லை போலும். மற்றவர்களின் அறியாமையிருள் நீங்க, ஒளி-மயமான சொற்கள் குவிந்து கிடக்கும், அச்சமறியாத உள்ளம், அன்பார்ந்த உள்ளம் காசுக்கு மதிப்பளித்துச் சேர்த்து வைத்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளவில்லை. ஆம். காசு உலோபியின் உடமை. கவிஞனுக்கு அது தேவையற்றதுதான்.

....

"ஓகோ, அப்படியா? அந்த மூன்றாவது நாள் உனக்கு என்ன காரியமிருந்தது?"

'அதுவா? உலகத்தில், ஆண்கள் அதிகமா, பெண்கள் அதிகமா? என்னும் மிகப் பெரிய கூப்பாடு, பிரபுகளே," என்றது நரி.

'என்னவென்று, தீர்ப்பு செய்தாய்?'

'மிகவும் ஆழ்ந்து சிந்தித்துப் பெண்களே, உலகில் அதிகம் என்று தீர்ப்பு செய்தேன், தேவர்களே' என்றது, குள்ளநரி.

'அது எப்படி ஐயா?' என்று மும்மூர்த்திகள் பெரும் வியப்புடன் வினவினார்கள்.

'பெண்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு அப்படியே நம்பி நடந்து கொள்ளுகிற ஆண்களையும் பெண்கள் கணக்கிலேயே சேர்த்துக் கொண்டேன், தெய்வ உத்தமர்களே' என்றது நரி.

இப்போது திருமூர்த்திகள் தத்தம் தேவிகளின் முகங்களை உற்று நோக்கினர்.

குள்ளநரி கேட்டது: "பிரபோ, நான் செய்த தீர்ப்புகள் எப்படியாவது இருக்கட்டும் என்னை, இங்கே எதற்காக வரவழைத்தீர்கள். நான் இங்கே என்ன செய்ய வேண்டி-யுள்ளது?" என்றது.

திருமூர்த்திகள், கொஞ்சநேரம் மௌனமாயிருந்து பிறகு மெல்லிய குரலில் சொன்னார்கள்: "எதற்காகவுமல்ல ஐயா, சும்மா, இப்படி சேமசமாச்சாரத்தைக் கேட்டு, தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத் தான்" என்று.

இதற்குள் வேர்த்து விறுவிறுத்துவிட்ட மும்மூர்த்திகளுக்கு, 'நரி இங்கிருந்து கிளம்பினால் போதும்,' என்று இருந்தது.

நரியும், 'நல்லது, சென்று வருகிறேன், பிரபுகளே' என்று வணங்கி விடை பெற்றுக் கொண்டு தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தது.

விசாரணை.

நம்முடைய பாரத தேசத்தில், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் இம்மூன்று தேவர்களும், மும்மூர்த்திகள் எனச் சுருக்கி வழங்கப்படுவர். இந்த மூர்த்திகளின் தேவி-களின் பெயர் சரஸ்வதி, லட்சுமி, பார்வதி என்பர். ஒரு நாள் இவர்கள் மூவரும் கோபாவேசங்கொண்டு, தலையை விரித்தவாறு, வெறுங்கட்டாந் தரையில் படுத்துப் புரண்டு புரண்டு புலம்பி அழுது கொண்டிருந்தனர். இந்தச் செய்தி, தோழியர் மூலம் கேள்விப்பட்டவுடனே, மும்மூர்த்திகளும் விரைந்து வந்து தத்தம் தேவிமார்களைக் கண்டு, 'என்ன நடந்தது?' என்று விசாரித்தார்கள். மிகவும் வாஞ்சையோடும் வினயமாகவும் கேட்டனர். முதுகைத் தடவியும், கண்ணீரைத் துடைத்தும் மேலும் செய்வதையெல்லாம் செய்து, வினவிய பின்தான் மூவரும் வாய் திறந்து பேசினர். "மூன்று உலகங்களையும் கட்டியாளும் உரிமையுடையவர்களென்று வீண் கொட்டம் அடித்துக் கொள்கிறீர்கள். ஆனால் உங்களுடைய சகதர்மிணிகளாகிய எங்களுக்கு இந்தவுலகத்தில் ஒரு அற்பப்பலகறையின் விலையுங்கூட இருக்கவில்லை. உங்களுடைய உலக ஆதிபத்தியம் நாசமாகிப் போகட்டும்" எனக் கொடிய நாராசம் போன்ற பதில்கள் கிடைத்தன.

நாரத முனிவர், அன்று சத்தியலோகம், வைகுந்தம், கைலாசம் என்னும் மூன்று உலகங்களுக்கும் எழுந்தருளியிருந்தாராம். வேலைக்காரர்கள், புரோகிதர்கள், சமையற்காரர்களுக்கு இன்று வேலைகள் இருப்பது போல அன்றும் தேவர்களுடைய வாசஸ்-தலங்களில், வேலைகள் இருந்தன. நாரதர் இந்தத் தேவிகளை அவரவர் வாசஸ்-தலங்களிற்குச் சென்று சந்தித்த போது பேச்சுவாக்கில், லோகாபிராயமாக, "தேவிகளே மூன்று உலகங்களிலுமுள்ள மக்கள் எல்லோரும் உங்களைப் புகழ்ந்து போற்றுபவர்களாகவே உள்ளனர். ஆனால், பூலோகத்தில், ஒரு காட்டில் வசிக்கும் குள்ள நரியொன்று மட்டும் ஓஹ், என்ன மகா வந்தது, இந்த மூன்று தேவிகளுக்கும்? இவர்களைவிட மும்மடங்கு மேலான பூலோகத்திலுள்ள மானிடப் பெண்களில், ஒரு சிலர் மிகவும் நல்லவர்களாய் உள்ளனர். அழகில் மட்டும் என்ன? தேவசாதியில் அவர்கள் அழகிகளாகயிருக்கலாம். ஆனால், நரிப் பெண்களில், என்னுடைய மனைவி சம்புகியுங்கூடப் பேரழகுடையவள்தான். என்ன நாரத முனிவரே, நான் சொல்வது கேட்டீர்களா?" என்று மிகவும் கேவலமாக என்னைப் பார்த்து வினவுகிறது." என்று தேவிமார்களின் காதில் விழச் செய்தார். இது கேட்ட, தேவிகளுக்குச் சிந்தை நொந்து சினம் பீறிட்டது. எனவே, "அந்த நரியை நீங்கள் நீதி ஸ்தலத்தில் வைத்து விசாரணை செய்ய வேண்டும். இல்லையெனில், நாங்கள் சீராட்-டறையில், நீங்கள் வெளியிலேயே நிற்க வேண்டும்" என்று மிகக் கடுமையாய்ப் பேசினார்கள்.

"ஆகட்டும், அப்படியே விசாரணை செய்கிறோம்", என்று திரிமூர்த்திகள் வாக்குறுதி செய்தனர்.

இவ்வளவும் செய்து முடித்த பின், நாரதர், பூலோகத்திற்கு வந்து, குள்ளநரி சம்புகனைக் கண்டு தேவலோகத்தில் நடந்ததனைத்தையும் உள்ளது உள்ளபடி சொன்னார். அதைக் கேட்ட நரி, அலட்சியமாக, "அப்படியே, அவர்கள் விசாரணை செய்யட்டும்; நானும் அதைப் பார்த்து விடுகிறேன்" என்றது.

திரிமூர்த்திகள், நீதி நிலையத்திற்கு வந்திருந்த அந்த நரிக்கு சம்மன் அனுப்பி வைத்தனர். குறிப்பிட்டப்பட்ட விசாரணை நாள் கடந்து பின் மூன்று நாளாகியும், சம்புகன் நீதி நிலையத்திற்கு வந்து சேரவில்லை. திரிமூர்த்திகளுக்கு இப்போது கோபம் கொதி-நிலைக்கும் மீறிப் போயிற்று.

நான்காவது நாள் குள்ளநரி, நீதிநிலையத்திற்கு வந்து சேர்ந்தது. "என்ன? சம்மன் அனுப்பி வைத்தால் வந்து சேருவதற்கு உனக்கு நேரமிருக்கவில்லையா?" என்று திரிமூர்த்திகள் 4+1+5=10 குரல்களிலிருந்தும் பயங்கரமான உறுமலுடன் நரியை நோக்கிக் கேட்டார்கள்.

தேவமார்கள் மூவரும் பார்வையாளர்களின் இடத்தில் வந்து அமர்ந்து அங்கு நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். குள்ளநரி துளியும் அச்சமின்றி, "ஏற்கனவே பேசித்தீர்க்க வேண்டியிருந்த சில காரியங்களின் நிமித்தமாய் எனக்கு இங்கு வர நேரமிருக்கவில்லை, பிரபுகளே" என்றது.

'என்ன அவ்வளவு தவிர்க்க முடியாத பிரம்மாண்டமான பெரிய ஆட்சிச் செயல் வந்ததுனக்கு?' என்று திருமூர்த்திகள் இடிபோல ஒரே குரலில் முழங்கினார்கள்.

'பிரம்மாண்டத்தையாளும் தொழில் தாங்களே செய்து கொண்டிருப்பதால் அதைப் பற்றிய சிந்தனை எனக்கு இல்லை சுவாமிகளே. எனக்கு, எங்களுடைய உலகத்தில் சில அவசியமான காரியங்கள் செய்து முடிக்க வேண்டி ஒரு கோரிக்கை இருந்தது.'

'தவிர்க்க முடியாத அத்தகைய பெரிய செயல்கள் உனக்கு என்ன இருந்தன?' என்று கேட்டனர், திருமூர்த்திகள்.

'உலகத்தில் குன்றுகள் அதிகமா, குழிகள் அதிகமா? என்ற ஒரு ஐயப்பாடு தீர்ப்பதற்காக என்னுடைய தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. முதல்நாள், அதைப் பற்றிப் பேசித் தர்க்கித்துத் தீர்மானிக்க வேண்டியதாயிற்று' என்றது, குள்ளநரி.

'நீ அதற்கு என்ன தீர்ப்பு வழங்கினாய்?' என்று திருமூர்த்திகள் மேலும் வினவினர்.

'வெகு, தீர்க்கமான வாதப் பிரதிவாதங்களைக் கேட்ட பின், குழிகளே அதிகம் என்று தீர்ப்பு செய்தேன்' என்றது தந்திரமுள்ள அந்த நரி. "அது, எப்படி?" என்று திருமூர்த்திகள் வினவியவாறு குதூகலித்தனர்.

'ஒரு குன்றையொட்டி, இன்னொரு குன்று இருந்து கொண்டேயிருக்கிறது. அதனால், குழிகளே அதிகம் என்று என்னுடைய தீர்ப்பின் முடிவு' என்று நரி உரைத்தது.

'பரவாயில்லை' என்று திருமூர்த்திகள் தலையை ஆட்டினர். 'இரண்டாவது நாள் என்ன இருந்தது?'

'இரண்டாவது நாளில், காடுகள் அதிகமா? ஊர்கள் அதிகமா? என்ற பிரச்சினை எழுந்தது.'

'என்ன தீர்ப்பளித்தாய்?' என்றனர் திருமூர்த்திகள்.

'பிரபுகளே, காடுகள் அதிகம் என்றுதான்.'

'எதற்காக? நீ ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்தாயா?'

'இல்லை, தர்மதுரைகளே. இங்கு தர்க்க சாஸ்திரத்தைப் பயன்படுத்தினேன்'

'என்ன தர்க்க சாஸ்திரம், உன்னுடைய தலை?' குள்ளநரி தர்க்க சாஸ்திரத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினால், மும்மூர்த்திகளுக்குக் கோபம் வராமலிருக்குமா?

'ஆமாம், பிரபுகளே, என்னுடைய தலையைத்தான் உபயோகப்படுத்தினேன்' என்று நரி அலட்சியமாகப் பதிலளித்தது. 'குள்ளநரிகளுக்கு, தாங்கள் ஒவ்வொரு தலையையே கருணை கூர்ந்து வைத்திருப்பதினால் எதைப் பற்றியும் ஆலோசிப்பதற்கு அனுகூலமாயிற்று.", என்றது.

ஒரு தலைக்கு மேல், அதிகம் தலைகளுள்ள இரண்டு தேவர்களின் முகங்களை அப்போது [illegible] கூர்ந்து பார்த்தது, கண்ணைச் சிமிட்டியது போல இருந்தது.

"இப்படியா செய்தி? உன்னுடைய தர்க்கம் தான் என்ன என்று சற்று விவரித்துக் கூற முடியுமா?"

'சுவாமிகளே, அது கூற முடியும். அதிகமான ஊர்களில் வாழும் இரண்டு கால்களுள்ள மனிதர்கள் அதிகபட்சமாக காடுகளில் உள்ள நான்கு கால்களுள்ள விலங்குகளைப் போலவே நடந்து கொள்வதினால்தான், அத்தகைய ஊர்களையெல்லாம், காடுகளென்றே எண்ணித் தீர்ப்பு செய்திருக்கிறேன்?' என்றது.

'என்னுடைய அறிவுத் திறமையை, செயலாற்றலை இப்போது நீங்கள் நேரில் காண்கிறீர்கள் அல்லவா. உங்களுடைய வயோதிக அறிவுக்கும் என்னுடைய வாலிப அறிவுக்கும் என்ன வித்தியாசமுள்ளது? எதில் நீங்கள் உயர்ந்தவர்கள்; நான் எதில் தாழ்ந்துள்ளேன்' என்றான், மகிழ்ச்சிக் குரலோடு அந்த நல்ல சீடன்.

ஒரு காலத்தில் தன்னுடைய சீடனாக இருந்தும், அதையெல்லாம் மறந்து விட்டு இன்று மார் தட்டிப் படாடோப மாகப் பேசுகின்ற அவனைப் பார்த்து அந்தப் பழைய குரு 'பொக்கை வாயால்' கெக்கக்கே என்று சிரிக்கலானார். மேலும் பேசலானார்.

அப்பனே, "உன்னை நீயே ஒரு பெரிய அறிவாளி என்று நினைத்துக் கொண்டு விட்டாய். குழந்தாய், என் வசத்திலுள்ள அந்த சமாதியின் பேரும், பெருமையும், பொன்னும், பொருளுமான எல்லாவ வைபவங்களின் மர்மமும் கூட உலகில் எந்த ஒரு மனிதனும் அறிந்திருக்க வில்லை. நீயும் கூட அங்கு ஒரு சாது சன்னியாசியின் உடல் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளது' என்று தான் எண்ணிக் கொண்டிருந்தாய். ஆனால், நான் சவாரிக்காக உனக்குக் கொடுத்த அந்த வெள்ளைக் கழுதையின் தாய்க் கழுதைச் சமாதிதான் அதுவும். அதனுடைய எலும்புகளின் மேல் தான் அந்தச் சமாதியும் கட்டப்-பட்டுள்ளது" என்று உண்மையை விவரித்து விளக்கி விட்டு, சீடனின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு 'தெரிகிறதா?' என்றார்.

நம்முடைய நாட்டிலும், இவ்வாறமைந்த அற்புதக் கோயில்கள் எத்தனையுள்ளதோ? அதை யார் அறிவார்?

****

சாதுவின் சமாதி.

ஐரோப்பாவிலுள்ள நகரமொன்றில், பண்டைக்காலத்திலிருந்த நடைமுறை நிகழ்ச்சியைப் பற்றிய சித்திரம் இது. அங்கு, ஒரு புகழ் வாய்ந்த பாதிரியாரின், எலும்புகள் மீது கட்டப்பட்டிருந்த சமாதி ஒன்று இருந்தது. அந்தச் சமாதியின் முகப்பில் பாதிரியாரின் உருவம் அழகிய சித்திரமாக வரையப்பட்டிருந்தது. சித்திரத்தில் கை நுழையும் படியான ஒரு துவாரமும் இருந்தது. வரும் யாத்ரிகர்கள் துவாரத்தின் மூலம் கையை நுழைத்து அந்தத் தூய ஞானியின் எலும்புகளைப் பரிசித்தால், அவர்களின் உடல் நோய்களும், மனக் குறைபாடுகளும் நீங்குவதாக மக்கள் எல்லோருமே நம்பினார்கள்.

செவி வழிச் செய்தியாக இது நாடெங்கிலும் நம்பிக்கைக்குரிய செய்தியாக வழக்கத்தில் பரவியதனால், சேய்மையிலுள்ள ஊர்களிலிருந்துங் கூட மக்கள் அடிக்கடி சாரிசாரியாக வருவது இயல்பாக இருந்தது. அவ்வாறு வரும் ஒவ்வொரு யாத்ரிகனும், தன் கையினால் எலும்புகளைப் பரிசித்து விட்டு, மனநிறைவோடு தன் சக்திக்குத் தகுந்தபடி பொன்னையோ, பொருளையோ விலை மதிப்புள்ள ரத்தினங்களையோ காணிக்கையாக பக்தி சிரத்தையுடன் சமாதியின் மேல் வைத்து விட்டுச் செல்வார்கள்.

சில ஆண்டுகளில் அந்தச் சமாதியின் மூலம், அதை நிருவகிக்கும் பாதிரியாருக்கு அளவு கடந்த பொருள் சேகரமாயிற்று. அந்தப் பொருளைக் கொண்டு பாதிரியார் சமாதியைச் சுற்றிலும் மிகப் பெரிய மண்டபங்களும், மாளிகைகளும், பூஞ்சோலைகளும், சுற்று மதில்களும் எழுப்பி, மேலும் மேலும் யாத்ரிகர்கள் அங்கு வந்து தங்கியிருக்க எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். இவ்வாறு, நிர்வாகியாக இருந்த பாதிரியாரின் வாழ்வும், மிக உன்னதமான அளவில் உயர்ந்து விட்டது.

ஆண்டுகள் ஒன்றின் பின் ஒன்றாக வந்து சென்று கொண்டிருந்தன. பாதிரியாரின் உள்ளமறிந்து ஒழுகும் ஒரு நல்ல சீடனும், மிக ஆதரவாக இருந்து கொண்டிருந்தான். ஒரு நாள் பாதிரியார் அந்த நல்ல சீடனைத் தம்மருகில் உட்கார வைத்துக் கொண்டு உரையாடலானார்:

"அன்புள்ள மகனே, நான் இப்போது சொல்வதை சற்று நீ உற்றுக் கேட்பாயாக. நாள்தோறும், இங்குள்ள எல்லாச் செயல்களையும் சரிவர, நடைபெறச் செய்வதற்கு நான் ஒருவனிருந்தாலே போதுமானது. எனவே, நீ உனக்காக, உன்னுடைய எதிர்கால நலத்துக்கு வேண்டி இதே போன்று நடத்த ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள். நான், உனக்கு அதற்கு வேண்டிய பொருளையும், சவாரிக்கு இந்த வெள்ளை கழுதையையும் கொடுக்கிறேன்" என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்ட அந்த நல்ல சீடனின், உள்ளத்தில் பீறிட்டெழுந்த குதூகலத்தை அவனுடைய முகமலர்ச்சி வெளிப்படுத்திற்று. அவன் 'ஆமாம், மிகவும் சரி, அப்படியே செய்யுங்கள், ஐயா' என்று உடன்பாடு தெரிவித்தது.

அதற்கான ஒரு நாள் குறிப்பிடப்பட்டது. அன்று சீடன் எதிர்பார்த்திருந்த அளவுக்குப் பொன்னும், பொருளும் கொடுத்து வெள்ளைக் கழுதையோடு பாதிரியார் அவனை அனுப்பி வைத்தார். சீடன், அந்த அழகிய கழுதையின் மேல், பொன்னோடும், பொருளோடும் அமர்ந்தவாறு ஒரு நீண்ட நெடுஞ்சாலையில் பல நாட்கள் பிரயாணம் செய்தான். இரவு பொழுதுகளில், சாலை ஓரங்களிலுள்ள ஊர்களில் சௌரியமாகத் தங்கியிருந்து பொழுது புலர எழுந்து வழக்கமாகத் தன் பயணத்தைத் தொடங்குவான், அவன். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள், மாதங்களாகக் காலமும், காலத்தைப் போலவே தூரமும் மிகவும் நீண்டு விட்டது. மேலும், ஒவ்வொரு நாளும் பணப்பையின் கனமும் கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது. இதுகாறும், இவ்வாறே அவனுடைய பிரயாணமும், ஜீவனமும் நல்ல முறையிலேயே நடைபெற்று வந்தது. ஆனால், அன்று அவனது காசுப் பை வெறுங் காற்றுப் பையாக மாறி விட்டது.

அன்று அவன், தன் வயிற்றுப் பசியை ஆற்ற இயலாதவனானான். செய்வதறியாது

அவனுடைய உள்ளம் அன்று மிகவும் வேதனைப்பட்டது. பசி என்பது மனிதனுக்கும், விலங்கு-க்கும் வெவ்வேறாக இருக்க முடியாதல்லவா? இந்த நல்ல சீடனு பசியால் வருந்தியது போலவே, அந்த வெள்ளைக் கழுதையும் அன்றைய இரவில் வருந்த வேண்டிய இருந்தது நேர்ந்தது. அன்றைய இரவு முழுவதும் அந்த நல்ல சீடனின் மனம், 'இனி என்ன செய்வது? என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு விடை காண முயன்றது. சரியான விடை கிடைக்காத ஒரு நேரம் ஏன் நான் பழைய அந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லக் கூடாது?' என்ற யோசனையும் உதித்தது.

ஒரு சில நாட்கள், பசியும், பட்டினியுமாகக் கழிக்க நேர்ந்தது. அதற்குள்ளாக அவனுடைய கழுதை பசி காரணமாய்த் தன் கடைசி மூச்சைக் காற்றோடு கலக்க விட்டுத் தீர்த்தது. வைகறைப் போதில், அந்த இறந்த கழுதையைச் சீடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இதுகாறும் 'இனி என்ன செய்வது' என்ற அவன் சிந்தித்துக் கொண்டிருந்த வினாவுக்குச் சரியான விடை காணாதவனாகவே இருந்தான், அவன்.

'கையில் காசுமில்லை, சவாரி செய்யக் கழுதையும் இல்லை' என்ற பயங்கர நிலையில் ஏதோ ஒரு புதிய வழி அவனுக்குப் புலப்படுவது போலிருந்தது. உடனே, அவன் எழுந்திருந்து, சாலையின் ஓரத்திலிருந்த ஒரு நல்ல இடத்தில் ஆழமாகக் ஒரு குழி-யைத் தோண்டி இறந்த அந்தக் கழுதையை அதில் இழுத்துப் போட்டு மண்ணால் மூடி மறைத்தான்.

பிறகு, அந்தச் சாலையில் நடந்து செல்லுகிற ஒவ்வொரு யாத்ரிகனையும் பார்த்து, "இதோ பாருங்கள். இங்கே புதைக்கப்பட்டுள்ளது, அரும்பெரும் ஒரு தீர்க்கதரிசியின் உடல் அவரை அடக்கம் செய்யப்பட்ட இந்த இடத்தில் அந்தப் பெரிய மனிதனின் ஞாப-கார்த்தமாக ஒரு சமாதி கட்டப்பட வேண்டியுள்ளது. உங்களுடைய சக்திக்குட்பட்ட, புத்திக்குட்பட்ட பொருளை உதவியாகத் தாருங்கள்" என்று வேண்டிக் கொள்ளலானான். அவனுடைய முகத்தோற்றமும், குரல் ஒலியும் கேட்பவர்களை உண்மை என்று நம்புமாறு செய்தன

ஒன்றிரண்டு மாதங்கள் கழியும் தருவாயில் அங்கு ஒரு சமாதிக்கட்டி முடிக்கப்பட்டது. இந்த சமாதியின் முகப்பிலும் ஒரு பாதிரியாரின் உருவச் சித்திரம் வரையப்பட்டது. இதிலும் ஆதாரம் இல்லாமலில்லை. முன்பு அவனிருந்த அதே பழைய சமாதியின் கதையாகவே எல்லா நிகழ்ச்சிகளும் நடைமுறைக்கு வந்தது. இங்கு வரும் பக்த கோடிகள் பொன்னையும் பொருளையும் நாளும் நாளும் கொண்டு வந்து கொட்டி விட்டுச் சென்றனர். நாளடைவில் இதுவும் ஒரு நல்ல தீர்த்தச் சேத்திரமாக மாறிக் கொண்டிருந்தது. வெகு தொலை-விலிருந்த ஊர்களிலிருக்கும் கனவான்கள் எல்லாரும் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினர். அவர்கள் வாழ்வு மேலும் மேலும் வளமுற காணிக்கைகளை இங்கு கொண்டு வந்து அர்ப்பணித்து விட்டுச் செல்லலாயினர்.

ஒரு காலத்தில் இந்தச் சாலையோரம் வெற்றிடமாகக் கிடந்தது. இன்று முக்கிய-மான ஒரு புண்ணியஸ்தலமாக விட்டது. பொருள் சேரச் சேர சமாதியைச் சுற்றிலும் மச்சு மாடங்கள் தோன்றின. எழிலான பூஞ்சோலைகள் தோன்றலாயிற்று. சுற்று மதில்களும் எழுப்பப்பட்டு விட்டன. இப்போது, அந்த வெற்றிடம் மக்கள் மனங்களைக் கவரக் கூடிய ஒரு அழகார்ந்த இடமாக மாறி விட்டது.

சீடனும், தன்னுடைய குருவைப் போலவே மனித வாழ்வுக்கு, மேலான, தேவ வாழ்க்கை வாழத் தொடங்கினான். உலகிலுள்ள எல்லாச் சுக போகங்களும் இவன் இருக்குமிடம் தேடிக் கொண்டு வந்து சேர்ந்தது.

இவனுடைய கீர்த்தியும், மெல்ல மெல்ல நாடு முழுவதும் வேகமாகப் பரவலாயிற்று. பழைய குருவின் காதுக்கும் மெல்லச் சென்று எட்டலாயிற்று. ஒரு நாள், அந்தப் பழைய பாதிரியார் தன்னுடைய சீடனின் உன்னத நிலையை நேரில் கண்டுகளிக்க வந்து சேர்ந்தார். அறிவுள்ள தன்னுடைய அந்த நல்ல சீடனின் மகோன்னதமான நிலையைக் கண்டு குருவினுடைய உடல் முழுவதும் புளகம் போர்த்தது. 'அப்பனே, உன்னால் எப்படி இதுவெல்லாம் சாத்தியமாயிற்று' என்று கேட்டார். சீடனும் உள்ளதை உள்ளவாறு சொல்லி விளக்கினான்.

சிறிய சொல், ஒளி வெளியே வருமுன் - அவருடைய வலது கை சுட்டு வி விரல் நிலத்தைக் காட்டியபடி இருந்தது. அந்த சொல்லும் உதிர்ந்தது: "மண், இதோ இந்த நிலம் இதுதான், மிகப்பெரும் சக்தி வாய்ந்தது, மிகமிக அழகானது; எல்லாவற்றுக்கும் ஆதாரமாய் உள்ளது. இந்த அன்னை மண்ணைப் போலவே நாமும் வாழ வேண்டும். மண்ணானது ஒரு நெல்லை நெற்கள்ளாக்கி விளைவித்துத் தருகிறது. ஒரு மீன் சினையிலும் சிறிய ஆலம் விதையை, எவ்வளவு பெரிய ஆலமரமாக்கி எவ்வளவு உபகாரியாம் தன்மையை இந்த மண் தோற்றுவித்து வைத்திருக்கிறது. நிலைபேறுடையது மண். எல்லா ஜீவராசிகளின் மகிழ்ச்சிக்கும் காரணமாகவுள்ளது, மண். மண்ணே நமக்கும் அன்னையளிக்கும் சு மாதா." என்றார், அ அந்தக் குருதேவர்.

குருவின், ஒளி நிறைந்த கண்கள், மேலும் ஒருமுறை பனிபடிந்த மலைச் சிகரங்களையும் பழமையான ஆலமரத்தையும், புள்ளி மான்கள் துள்ளி விளையாடும், பச்சைப் பசும்புல்வெளியை - உற்றுப் பார்த்தவாறு, பசுங்கிளிகளின் மழு கீதங்களையும் செவி கொடுத்துக் கேட்டவாறு மௌனியானார். சீடர்கள், அவசரமாகக் கைகளிருந்த பனையேட்டில், உடனே எழுத்-தாணியினால், பூமியின் இயற்கையைப் பற்றிய பாடத்தை எழுதத் தொடங்கினார்கள்.

* * * * * * * * * * * * * *

புவியின் போதனை.

குரு மிகவும் மெதுவாக முன்னால் நடந்து கொண்டிருந்தார். அவருடைய உள்ளம் எதைப் பற்றியோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தது. வழியின் இருமருங்கிலும் நிலமகளை அழகுபடுத்திக் கொண்டிருந்த பசுமையான செடி கொடிகளிலிருந்து அன்று மலர்ந்த வண்ண வண்ண மலர்கள் மணம் கமழ்ந்து கொண்டிருந்தன.

இக்காட்சிகளைக் கண்டு களித்தவாறு ஒரு சில சீடர்கள், குருவைத் தொடர்ந்து பின்பற்றிச் சென்று கொண்டிருந்தனர். மதுவருந்தும் வண்டுகள், மலருக்கு மலர் ரீங்காரம் செய்தவாறு பறந்து கொண்டிருந்தன. சேய்மையில், ஆங்காங்கு வெண்பனியால் மூடப்பட்ட மலைச் சிகரங்கள், வான முகில்களை வரவேற்றுக் கொண்டிருந்தன. அங்குள்ள எல்லாக் காட்சிகளும் அவர்களுடைய உள்ளங்களைக் குதூகலிக்கச் செய்தன.

ஆழ்ந்து சிந்தித்தவாறு, முன்னால் சென்று கொண்டிருந்த குருவின் முகம் மலரலாயிற்று. அவருடைய முகமலர்ச்சிக்குக் காரணம், அவருடைய சிந்தனைக்குக் கிடைத்த சரியான விடையோ அங்கு தென்பட்ட இனிய காட்சிகளோ அதை நாம் புரிந்து கொள்ள இயலாததாக இருந்தது. நீண்டு வளர்ந்திருந்த அவருடைய தாடி வெண்பனியோடு போட்டிபோடுவதாயிருந்தது. பொன்னிறமான, அவரது மேனியை காவி உடைகள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. கம்பீரமான அவரது தோற்றமும், முகத்தில் படிந்திருந்த சாந்தமும், பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துவதாக இருந்தன.

சீடர்களுடைய முகங்களிலும் பரவசம் படியலாயிற்று. அவர்களின் தலை முடி கருத்து நீண்டிருந்தன. குதூகலம் உள்ளத்தில் குடிகொண்டிருந்ததை, அவர்களுடைய கண்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. பனை ஏடுகளும், எழுத்தாணியும் அவர்களின் கைகளில் இருந்தன. இளங்காலையின் அமைதி எங்கும் குடிகொண்டிருந்தது. மென்மையான காற்று, செடிகொடிகளை அசைத்தவாறு மலர்களிலிருந்த மணத்தைக் கவர்ந்து கொண்டியங்கியது. அங்கு நிலவிய அமைதி உள்ளம் கவருவதாயிருந்தது.

சற்றுத் தொலைவில், இலைகளோடு கூடிய மிலாறுகளுடன் கிளைகளை நீட்டியவாறு ஒரு பெரிய ஆலமரம் இருப்பதைக் கண்டார்கள். அந்த மரத்தின் உள்ளத்தில் எத்தனையோ ஆண்டுகளின், முடிவான வரலாறுகள் நிறைந்திருந்தன. அந்த மரத்தின் சுற்றுப் புறத்தில், பச்சைப் பசேலென்று காணப்படும் புல்வெளியில் புள்ளி மான்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. அடர்த்தியான இலைகளுக்கிடையேயிருந்து, அழகுக் கிளிகளின் இனிய கீதம் பீறிட்டவாறு வெளியேறிக் கொண்டு இருந்தது. விசாலமாகப் பரந்து விழுது விட்டு வளர்ந்து நீண்டிருந்த அந்தப் பெரிய ஆலமரம், அவர்களைத் தன்னிடம் அழைப்பது போலத் தென்பட்டது. அந்த மரத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டது போல், குருவும், சீடர்களும் அங்கு வந்து நின்றனர். மரத்தின் கீழ் இருந்த ஒரு பெரிய சமமான கல்லின் மேல் குரு அமர்ந்தவாறே சீடர்களையும் உட்காருமாறு கூறினார். அவர்களும், குருவுக்கு எதிராக அந்தக் கல்லின் மேலேயே சம்மணமிட்டவாறு உட்கார்ந்தனர்.

ஆன்மீக நெறியைப் பின்பற்றி ஒழுகும், குருவின் ஒளி நிறைந்த கண்கள், அங்குள்ள மலைச் சிகரங்களையும், துள்ளி விளையாடிக் கொண்டிருந்த, புள்ளிமான்களையும், கிளிகளையும் உற்று நோக்கின. சற்று நேரம், சிந்திக்கத் தொடங்கினார். அதன் பின், மிக மென்மையான குரலில் உரைக்கலானார்: "நாம் வாழும் இந்த உலகம் உண்மையாகவே மனிதப் புலன்களுக்கு எட்டாத பற்பல ரகசியங்களைத் தன்னிடம் மறைத்து வைத்துக் கொண்டுள்ளது." எனவே, இன்று இந்த இடத்தில் உங்களுக்கு விளக்க ஒரே ஒரு கேள்வி உள்ளது. இந்த உலகத்தில் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடைக்கு உரிய கேள்வி அதுவே. நீங்கள், நன்கு சிந்தித்து அதற்கு சரியான விடைகாண வேண்டும். ஆம், பண்பு ரீதியான பல கூறுபாடுகளைக் கொண்ட வாழ்க்கை மனித வாழ்க்கை. எனவே, அந்தக் கூறுபாடுகளில் ஒன்று, மிகமிகச் சக்தி வாய்ந்ததும், மிகமிக அழகுடையதுமான ஒரு கூறு எது என்று சிந்தித்துக் கூறுக" என்றார்.

"இளந்தளிர் போன்ற மென்மையான மேனியும், ஒளி மிகுந்த கண்களும், உள்ள அழகிய

இளங்குழந்தையின் பவளம் போன்ற இதழ்களிலிருந்து மலரும் புன்முறுவலே மிகவும் எழிலானதும் சக்தி மிகுந்ததுமான அம்சம் குருவே" என்று ஒரு சீடன் எழுந்து நின்று விடை கூறினான். அவனுடைய முகத்தில் நாம் சரியான விடை அளித்திருக்கிறோம் என்ற பொலிவும், புன்முறுவலும் காணப்பட்டது.

"சிந்தித்துப் பார்க்கும் போது, பேரழகும், அன்பும், பண்பும் மிக்க ஒரு யுவதியே, உலகத்தில் அதிக சக்தி வாய்ந்ததும், அழகியதுமான ஒரு அம்சம் குரு தேவா" என்றான், இரண்டாம் சீடன். இந்த விடையளித்த சீடனின் முகத்திலும் ஒரு நம்பிக்கையின் தோற்றம் தெரிந்தது.

"கழுகு போன்ற கூர்மையான பார்வையுடைய மற்றொரு சீடன் எழுந்து நின்று குருவே, இந்த உலகத்தில் மிகமிகச் சக்தி வாய்ந்ததும், மிகமிக அழகானதுமான பொருள் பணம் மட்டுமே. பணமே ஒரு அழகு. பணமே ஒரு சக்தி; பணமில்லாதவன் பிணம்" என்ற பழமொழியும் உண்டு என்றான். அவனுடைய முகம் மிகவும் எழிலாகத் தென்பட்டது.

அடுத்து, கம்பீரமான குரலில் "பளபளவென்று மின்னும் கூர்மிக்க வாளாயுதம் தான் எல்லாவற்றைக் காட்டிலும் மிகமிக சக்திவாய்ந்ததும், அழகானதும் ஆகும். பெரிய பெரிய சாம்ராச்சியங்களும், ஆட்சியும் வாளைக் கொண்டுதான் சாதிக்கப்பட்டுள்ளது என்று தங்களைப் போன்ற சான்றோர்கள் மூலம் நாட்டில் இந்தக் கருத்துப் பரப்பப்பட்டுள்ளது, 'குரு தேவா' என்றான், நான்காவது சீடன்.

குருவின் முகம் மலர்ந்தது. ஒவ்வொருவருடைய மறுமொழிகளையும அவர் உன்னிப்பா- கக் கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் மெல்லப் புன்னகையும் பூத்தது. ஆனால் அவர் வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை. சீடர்களில் ஒருவன் எழுந்து நின்று குருவைப் பார்த்துக் கேட்டான்: "எங்களுடைய இந்த விடைகளில் எது சரியானது என்று நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம். குருவே, கருணை கூர்ந்து நீங்கள் விளக்கியருள வேண்டும்" என்று.

சரியான பதில், உங்கள் உள்ளத்தில் உதிக்கவே இல்லை" என்று குரு முதலில் சுருக்க- மாகப் பதிலளித்தார். பிறகு, புன்முறுவலோடு விவரிக்கலானார்: "எவன் ஒருவன், இளங்- குழந்தையின் வசீகரமான, புன்முறுவலில் பேரழகையும், பெருஞ்சக்தியையும் காண்கின்றானோ அவன், ஒரு கலைஞன். அவனுக்கு, உலகம் கலை மயமாகிறது. வாழ்நாள், முழுவதும் அவன் வறுமைத் துன்பத்தில் உழுக வேண்டியவனாகிறான். எவன் ஒருவன் யுவதியினிடம் எழிலும், சக்தியும் காண்கின்றானோ, அவன் வாழ்நாள் முழுவதும், இன்ப துன்பங்களில் மாட்டிக் கொண்டு சோர்வடைந்து வாழ்க்கையை வெறுக்கிறான். 'வாழ்க்கை, கடல் போன்று துக்கமுடையதாகிறது' என்று மனம் நொந்து கூறுகிறான். அவனுடைய முதுமைக் கால வாழ்வு

சூனியமாகி விடுகிறது. எந்த மனிதன் ஒரு மனிதன், பணத்திலேயே அழகும், ஆற்றலுமுள்ளதாக நம்புகிறானோ, அவனுடைய வாழ்வு வணிகத் தன்மையுடையதாகிறது. தந்திரமான, கெட்டிக் காரத்தனத்தினால், பணம் சேர்ப்பதே அவனுடைய குறிக்கோளாகிறது. ஆனால், உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒருவன் அடையும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பெரும் பேறுகளில், அவன் அடைந்தது பொருள் ஒன்றே ஒன்று. எனவே அவன் அறமும், இன்பமும், வீடும் அற்றவனாகிறான். எவன் ஒருவன் கூர்மையான வாளில், சக்தியையும், செளந்தரியத்தையும் காண்கின்றானோ, அவனுடைய உள்ளம் சதா போராட்டத்திலேயே நாட்டம் கொண்டுள்ளது. சதா போராடுகிறான்; பிறரைக் கொல்கிறான்; ஒருநாள் இவனும் பிறரால் கொல்லப்படுகிறான்",

குருவின் பதில்களைக் கேட்ட சீடர்கள், எதுவும் மனதில் தோன்றாதவர்களாக, ஒரு சில கணங்கள் சிற்சிலைகளைப் போல அமர்ந்தவாறு இருந்தனர். பிறகு ஒருவன் எழுந்து நின்று, மென்மையான குரலில் பக்தி பாவத்தோடு கைகூப்பி வணங்கியவாறு, "அவ்வாறாயின் தங்கள் கேள்விக்குச் சரியான விடைகூறி எங்களை ஆட்கொள்ள வேண்டும், குருதேவா" என்றான். எனவே, காலந்தாழ்த்தாமல் குருவின் வாயிலிருந்து ஒரே ஒரு சொல், மிகச்

முள்ளை முள்ளால்...

யவக்கிரீதன் என்னும் பெயருள்ள ரிஷி ஒருவர் நமது புண்ணிய பாரதப் பூமியில் பண்டைக் காலத்தில் ஒரு கிராமத்தில் சுகஜீவியாகி வசித்து வந்தார். அவருக்கு மிகவும் அழகுடைய ஒரே ஒரு புதல்வன் மட்டும் இருந்தான். அவர் தன் மகனைச் செல்லமாக மிகப் பேரன்புடன் வளர்த்து வந்தார். செல்லங் கொடுத்து வளர்த்த காரணத்தால், தாம் தந்தையரிடமிருந்தோ, உற்றார் உறவினரிடமிருந்தோ கற்றுக் கொள்ள வேண்டிய அறிவொழுக்கம் முதலிய எதனையும் சிறுவன் அறியாமலேயே வளர்ந்து வந்தான்.

பன்னிரண்டு வருட வயது முடியும் தருவாயில் கூட அவன் எழுத்தறிவு இல்லாதவனாக இருந்தான். ஒரு நாள் வீட்டிற்கு வந்த விருந்தினர்கள், இந்தச் சிறுவனைப் பற்றிப் பேசும்போது, 'என்ன இப்படி, எழுத்தறிவுங்கூட இல்லாமல் குழந்தையை வளர்த்து விட்டிருக்கிறீர்களே' என்று அனுதாபமாக யவக்கிரீதனைப் பார்த்து வினவினர். உடனேயே, அடுத்திருந்த இன்னொரு விருந்தினர், 'ஏன் எழுத்தறிவில்லாமல் வளர்ந்தால்தான் என்ன? இவனைப் போல், எழுத்தறிவில்லாமலேயே வளர்ந்திருந்த காளிதாசன், தேவியின் அருளால் உலகம் போற்றும் கவிஞனாகி விடவில்லையா?' என்றார். இந்த இருவரின் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டிருந்த யவக்கிரீதன் "எல்லாம் ஊழ்வினைப் படியே நடக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தது. குழந்தையை நான் எதேச்சையாக வளர விட்டு விட்டேன்" என்றார். இந்தச் சம்பாஷணையைச் சிறுவன் காது கொடுத்துக் கேட்டான், சிறிது சிந்திக்கவும் செய்தான். 'ஏன், நானும் தவம் செய்து காளிதாசனைப் போல் ஒரு கவிஞனாக ஆகக் கூடாது?" என்ற உறுதிப்பாட்டையும் உள்ளத்தில் கொண்டான்.

அழகிய கங்கா நதிக்கரையில் ஒரு பரண் வீட்டை அமைத்துக் கொடுக்குமாறு இளைஞன், தன் தந்தையை மிகவும் வேண்டிக் கொண்டான். 'மகன் சொல்லை விட மந்திரமில்லை' என்று நம்பி வளர்த்து விட்ட தந்தை அவ்வாறே ஒரு பரண் வீட்டைக் கட்டிக் கொடுத்துதவினர். அவனுடைய தவம், எல்லாம் வல்ல இறைவியின் உருவை நோக்கி நாம ஜபத்தில் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அறிவுக் கொவ்வாத தந்தையும் தனயனுமான இவர்களுடைய நடைமுறைச் செய்திகள் ஊரில், மெல்லப் பரவத் தொடங்கிற்று. சில பெரிய மனிதர்கள் சிந்தித்தார்கள். இன்னுஞ் சிலர் சிரிக்கத் தொடங்கினர்.

இரத்த சம்பந்தமுள்ள ஒரு பெரியவர் 'இச் செயல் நடைமுறை உண்மைகளுக்கு உதவாத ஒரு கற்பனை என்று நினைத்தவாறே கங்கா நதிக்கரைக்கு வந்தார்; இளைஞனைப் பார்த்து இரக்கத்தோடு பேசவும் செய்தார், "குழந்தாய், கேவலம் இதுபோன்ற தவம் செய்து எவனும் வித்துவான் ஆக இயலாது. நீ ஒரு ஆசிரியனை அணுகி முறையாகக் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று அறிவுரை கூறினார். அதை அவன் செவிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே அந்த இளைஞன், "தாத்தா, உங்கள் அறிவுரைகள் எனக்கு வேண்டாம். நீங்கள் வந்த காரியம் எதுவோ அதைப் பார்த்துக் கொண்டு செல்லுங்கள்" என்றான்.

இந்தப் பதிலைக் கேட்டுப் பெரியவர் திடுக்கிட்டார். மேலும் சிந்திக்கத் தொடங்கினார். 'தட்டுங்கள், திறக்கப்படும்' என்ற மொழிப்படி சிந்திக்கத் தொடங்கவே, பெரியவருக்கு ஒரு நல்ல யுக்தி உள்ளத்தில் உதயமாயிற்று. ஆயினும், அதை உடனடியாகப் பரிசோதனை செய்வது அவ்வளவு சரியானதன்றென்று அவருக்குத் தோன்றிற்று.

முள்ளை முள்ளால் தான் களைந்து எறிய வேண்டும் என்ற உண்மையை மனதில் பதித்துக் கொண்ட அந்தப் பெரியவர், இரண்டொருநாள் இடைவிட்டுச் சிறிது வேறுபட்ட தோற்றத்தோடு ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தார். தவம் செய்யும் அறியாமை மிக்க இந்த இளைஞனின் பார்வைக்குத் தென்படும் தூரத்தில் வந்து நின்ற அவர் குனிந்து குனிந்து தன் இரண்டு கைகளையும் கூட்டி வெண்மணலை அள்ளி அள்ளி கங்கை நீரில் இறைக்கத் தொடங்கினார். ஒரு நாள் கழிந்தது. மறுநாளும் கழிந்தது. 'யாரோ ஒரு முதியோன், நேற்றும் இன்றும்

~~ஏன் இப்படி மணலை அள்ளி அள்ளி வீணாக இறைத்து~~

ஏன் இப்படி மணலை அள்ளி அள்ளி வீணாக இறைத்துக் கொண்டிருக்கிறார். இவர் அறிவென்பதே இல்லாதவராக இருக்கிறாரா" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான், அந்த இளைஞன்.

மூன்றாவது நாளும் பெரியவர், தன்னுடைய மணல் இறைக்கும் காரியத்தை அங்கு வந்து தொடங்கலானார். பரண் வீட்டிலிருந்து தவம் புரிந்து கொண்டிருக்கும் இளைஞன். இதைப் பார்த்தவுடனே மெல்ல இறங்கிப் பெரியவரை நோக்கி நடந்து வந்தான். வந்தவுடனே "தாத்தா" எதற்காக நீர், இவ்வாறு மணலை வாரி வாரி ஆற்றில் இறைக்கிறீர்கள்? இதனால் ஆவது என்ன? நீங்கள் வீணாகச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்" என்றான்.

ஏற்கனவே இதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெரியவர், "மக்கள் எளிதாக ஆற்றைக் கடந்து செல்லவும், வரவும் இந்த மணலால் நான் இங்கு ஒரு அணையை எழுப்பிக் கொண்டிருக்கிறேன்" என்று இயல்பாக இயம்பினார். பெரியவரின் மறுமொழியைக் கேட்ட தவசியான இளைஞன், மிகவும் ஏளனமாக வாய்விட்டுச் சிரிக்கலானான். பிறகு பேசவும் செய்தான்.

"நூறாண்டு காலம் நீர் இவ்வாறு மணலை இடைவிடாது வாரி வாரி இறைத்த போதிலும் நீர் நினைத்தபடி இங்கு ஒரு அணை உண்டாவது இல்லை. எதற்காக நீர் வீணாகச் சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள்?" என்று.

"குருவிடம் சென்று ஒருவன் கல்வி பயிலாமல், புலவனாக எண்ணித் தவம் செய்து சாதிக்க முடியுமானால், இங்கு பரந்து கிடக்கும் மணலையெல்லாம் இறைத்தால் ஏன் அணை உருவாகாமல் போகும்" என்று அவர் அவன் முகத்தைப் பார்க்காமலேயே பதில் கூறினார்.

இந்தச் சின்ன யவக்கிரீதனுக்கு பெரியவர் சொன்ன இந்த மறுமொழி உள்ளத்தில் தைத்து ஏதோ புதியதொன்றைப் புலப்படுத்துவது போல இருந்தது. மேலும் ஆழ்ந்து சிந்திக்கலானான். 'படிக்காமல், பாவலனாக முடியாது' என்ற உண்மையை அவன் புரிந்து கொண்டான். வெட்கிப்-பட்டவனாய் உடனே சரியன குருவை நாடிக் கல்வி பயிலவும் முயன்றான்.

கல்வி பயில்வதில் சிரத்தையில்லாமல், சாமியைக் கும்பிட்டுப் பரீட்சையில் தேர்ச்சி-யடைய விரும்பும் மாணவர்களை இந்தக் கதை சிந்திக்க வைக்கிறது. சரியான நெறிமுறையும் காட்டித் திருந்தச் செய்து விடுகிறதல்லவா?

****

யோகச் சேமம் வகாம் யகம்.

உபநிடதங்களை "ஞானச் சுரங்கங்கள்" என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். பிரம்மத்தைப் பற்றித் தைத்ரியோப நிடதம், "சத்தியம், ஞானம், அனந்தம், பிரம்மம்" என்று விளக்குவதோடு, "பிரம்ம விதாப் நோதிபரம்"— பிரம்மத்தையறிந்தவன், பிரம்மமாகிறான் என்றும் கூறுகிறது. பிரம்மத்தைப் பற்றி, உபநிடதங்கள் இவ்வாறு தெளிவு படுத்தியிருந்தும், மக்களுக்கு எடுத்துக் கூறி இதனைப் புலனாக்காமல் மறைத்து திசை மாறச் செய்யும் புனை கதைகளும், மிகப் பழங்காலத்திலேயே புனையப்பட்டுள்ளன. மாதிரிக்கு ஒரு கதை இங்கு எடுத்துக் கூறப்படுகிறது.

பழங்காலத்தில், காசிப்பட்டினத்தில் 'மதுசூதனசரஸ்வதி' என்ற பெயரோடு மிகப் பெரிய பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் தம் ஏழ்மையைப் பற்றியோ, இல்லாமை காரணமாக வீட்டில் ஏற்படும் இயலாமையைப் பற்றியோ சிறிதும் சிந்திக்காமல் சதா சர்வ காலமும் நல்ல நூல்களில் பயிற்சியும், ஆராய்ச்சியும் மேலும் புது நூல்களை இயற்றுவதிலும் நேரத்தைக் கழித்து வந்தார்.

ஒரு நாள், அவர் பகவத் கீதைக்கு விளக்கமாக அர்த்தம் எழுத வேண்டுமென்று உறுதிப்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு நாளும் வைகறைப் போதில் எழுந்து, கீதையின் சூத்திரங்களுக்கு வியாக்கியானத்தை எழுதத் தொடங்கினார்.

இவ்வாறு தாத்பர்யம் எழுதிக் கொண்டு வரும்போது, ஒன்பதாவது அத்தியாயம், இருபத்திரண்டாவது சுலோகத்தில் வரும் 'யோகச் சேமம் வகாம் யகம்' என்று இருப்பது, அவருக்குச் சரி என்று படவில்லை. சுலோகத்தின் கடைசிப் பதமான "வகாம் யகம்" என்பதன் பொருள் "சுமந்து கொண்டு வந்து கொடுப்பேன்" என்று விளங்குகிறது. சென்ற காலத்திலிருந்து இன்றுவரைப் பகவான் எந்த ஒரு பக்தன் வீட்டிற்கும் கண்ணுக்குத் தென்படும் படியாக எந்தப் பொருளையும் சுமந்து கொண்டு வந்து கொடுக்கவேயில்லை. அப்படிக் கொடுப்பாராயின் மறைமுகமாகத் தான் கொடுப்பார்' என்று எண்ணி அந்தச் சுலோகத்தின் கடைசிப் பதத்தில் இருக்கும் "வகா" என்னும் இரண்டு எழுத்துக்களை அடித்து விட்டு "ததா" (ரகசியமாகக் கொடுப்பது) 'ததா' என்ற எழுத்துக்களை எழுதினார். அதே நேரத்தில் பொழுது விடிந்து விட்டதன் காரணமாக வழக்கம் போல குளிப்பதற்கு அவர் கங்கா நதிக்குச் சென்றார்.

இங்கே, வீட்டில் மதுசூதனின் தர்ம பத்தினி, 'இன்று சமைப்பதற்கு அரிசியோ, பருப்போ எது ஒன்றுமில்லையே நான் இனி என்ன செய்வது' என்று எண்ணியவாறு திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். அப்போது, அவர்களுடைய வீட்டிற்கு முன்னால் சுமார் எட்டே வயதுள்ள ஒரு சிறுவன், தன் தலையின் மேல் ஒரு கூடையில் அன்று வீட்டிலில்லாத எல்லாப் பொருட்களையும் வேண்டியளவில் வைத்து சுமந்தவாறு அழுது கொண்டு வந்து நின்றான். அவனை மதுசூதன சரஸ்வதியின் மனைவி பார்த்ததும், 'குழந்தாய், நீ ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது? யாராவது உன்னை அடித்தார்களா' என்று பரிவோடு கேட்டாள். அப்போது, அந்தச் சிறுவன், "இன்று உங்களுடைய ஐயர், கடையில் இந்தப் பொருட்களையெல்லாம் வாங்கிக் கூடையில் அடுக்கி என்னுடைய தலை மேலே கொண்டு வந்து வைத்தார். 'நான் இதனைக் கொண்டு போக மாட்டேன்' என்று மறுத்ததும் என் கன்னத்தின் மேல் ஓங்கி இரண்டு அறை அறைந்தார்' என்று அழுதுகொண்டே கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு, அந்த இல்லத்தரசி மிகவும் மனம் வருந்தினாள். அந்தச் சிறுவனின் கன்னத்தின் மேல் விரல்களின் அடையாளங்கள் படிந்து புடைத்திருப்பதைக் கண்டாள்.

அடடா, பாவம். இப்படியா இக்குழந்தையை அடிப்பது; அவர் வரட்டும், வந்ததும் நான் மிகவும் கண்டிக்கிறேன். அவர் வித்தையைக் கற்றும், புத்தியில்லாதவராகவுள்ளார். குழந்தாய் நீ, வீட்டிற்குச் செல் என்று அந்தக் கூடையிலிருந்து ஒரு வெல்லக் கட்டியை எடுத்துக் கொடுத்துப் பரிவோடு அனுப்பி வைத்தாள்.

பண்டிதர் மதுசூதன சரஸ்வதி, கங்கையில் குளித்த உடலையும், உடையையும் மட்டும் ஈர செய்து கொண்டு தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அப்போது, இல்லத்தரசி எழுந்து அவருடைய புழுதி படிந்த பாதங்களைத் தூய்மையாக்கச் செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தவாறு

"உங்களுக்குப் பகுத்தறிவு துளியும் கிடையாதா. பாவம். அந்தச் சிறிய குழந்தையின் தலையின் மீது பாரமான கூடையை வைத்துச் சுமக்க வைத்ததற்கு அவனுடைய கன்னத்தில் இரண்டு அறைகளும் கூலியாகக் கொடுத்தனுப்பினீர்களல்லவா, இப்படி உங்களைப் போன்ற ஒரு பண்டிதர் செய்தது நியாயமானதுதானா?" என்று கேட்டாள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் பண்டிதரின் ஞானக் கண் திறந்து கொண்டு விட்டது. தன் மனைவியிடம் எந்த விதமான மறுமொழியும் சொல்லாமல் உடனே தாம் எழுதி முடித்த "ததா" என் என்ற சொல்லை அடித்து விட்டு முதலில் இருந்த "வகா" என்ற இரண்டு எழுத்துக்களை எழுதி, தம் இறைவன் பக்தர்களுக்குக் கூடையில் சுமந்து கொண்டு வந்து கொடுப்பது உண்மை. அதனால் இன்று இங்கு நேர்ந்துள்ளது. "யோகாச் சேமம் வகாம் யகம்". இது உண்மை, உண்மை என்று மும்முறைக் கூறி முடித்தார்.

****

குருவும் சுவரும்

பழங்காலம் வியப்பும், வெறுப்பும், வேதனையும், வேடிக்கையுமான பலவேறு தகவல்களை என்றும் அழியாது தன்னிடம் வைத்திருந்ததையெல்லாம், 'இது என் பெருங் கொடை' என்று கூறி நிகழ்காலத்திற்கு அளித்துச் சென்றுள்ளது. ஆம். அவனியை அரசன் ஆண்டால் அரசனை குருமார்கள் ஆட்சி செய்த காலம் அது.

பாரத பூமியில், அக்காலத்தில் ஒரு அரசன் ஒரு சிறு பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவருடைய உள்ளம், மிகவும் வளமுள்ளதாக இருந்தது. வளமான மண் இருந்தும், அதை நல்ல முறையில் பண்படுத்திப் பயிர் செய்தும் பலன் காண முடியாதது போன்ற நிலையில், ராஜ குரு அவரைத் தன் பிடியில் சதா சிக்க வைத்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அரசன், மந்திரியுடன் சென்று குருவை அணுகி, தன் உள்ளத்திலுள்ள வேட்கையை வெளிப்படுத்தினார்: "குருவே, எதனை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ அல்லது எல்லா நூல்களாலும் எது ஒன்றே அறியப்பட வேண்டியதாகுமோ, அதை அறிந்து அடைய நான் விரும்புகிறேன். அதை நமக்குத் தெளிவாக விளக்கிக் கூறக்கூடிய ஒரு நல்ல ஆசிரியனை நாம் கண்டு பிடிக்க வேண்டும். காரியம் சித்தியாவதற்கேற்ப ஒரு உபாயம் தாங்கள் கூற வேண்டும்" என்றார்.

அரசனுடைய இந்தக் கோரிக்கை, குருவுக்கு வேண்டாத் தகாததாக இருந்தது. ஆயினும், மந்திரியின் முன்னிலையில் குருவால் அரசனது வேண்டுகோளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை, மறுக்கவும் இயலவில்லை. குரு அரசனை, தன் அருகில் அழைத்து மென்மையான குரலில் மனதில் பதியும்படியாக எதையோ சொல்லி அனுப்பினார். அது அறிவுக்கும், அனுசரிப்பதற்கும் ஒவ்வாததாகவே இருந்தும், அரசன் அவ்வாறே செய்யவும் துணிந்தான். சுயநலம் உள்ள குரு, அரசனை அறிஞனாக்கத் தக்க வழிவகைகளை என்றும் அளிக்க மாட்டான். நாடும் அமைதி இழந்து என்றும் வெறும் ஆரவாரத்தில் மூழ்கியிருக்க வேண்டும் என்பது தான் சுயநலமுள்ள அந்த குருவின் உட்கிடக்கை.

அரசன் மறுநாளே ஏவலாளர்களைக் கொண்டு பறை ~~அறிவி~~ அறைவித்துத் தன் உள்ளக் கிடக்கையை நாடெங்கும் அறிய வெளிப்படுத்தச் செய்தார். "அரசனாகிய எனக்கு ஒரு நல்ல ஆசிரியர் தேவை. மிகவும் அவசியமாயுள்ளது. மிகப் பெரிய, அபாரமான சுவர் கட்டிக் கொண்டு அங்கேயே வசிப்பவராக இருந்தால் மட்டும், ஆசிரியனாக இருக்க அவர் தகுதியுள்ளவர். எனவே, விரும்புகின்ற பேரறிஞர்கள், ஞானிகள் வந்து என்னை நேரில் சந்திக்கலாம்...." என்று.

இந்த அறிவிப்பான பறை ஒலிக் கூற்றைக் கேட்டு மந்திரி திடுக்கிடலானார். தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். "எள்ளிடாத செக்கினை எத்தனை நாள் ஆட்டினும் தான் என்ன? சுட்டு விரலால் தொட்டுத் தேய்க்கும் அளவில் கூட நாம் அதில் நாம் பொட்டு எண்ணெயும் காண இயலாது" என்று.

குறிப்பிட்ட நாளில், அரண்மனை முன் சடைமுடியோடும் கூடிய சந்நியாசிகள், காவி உடை உடுத்திய சித்த புருடர்கள், தண்டு கமண்டலங்களை ஏந்திய துறவிகள், பட்டை நாமம் தரித்த பாகவத சிரோன்மணிகள், நெற்றியில் திருநீறு பூசிய சாதுக்கள் எல்லோரும் திரண்டு வந்து கூடி விட்டார்கள், அரசனுக்கு ஆசிரியன் ஆகும் ஆசையினால்.

உடனே, அரசனும் குருவும் அரண்மனையில் அமர்ந்தவாறு அவர்களைப் பரிசோதிக்க-லாயினர். அரசனைக் காணும் பொருட்டு தயாராக நின்றிருந்தனர், சாது, சந்நியாசி, பக்தர் அடியார்களனைவரும்.

ஒவ்வொருவராய்த் தம் முன் அழைத்து வரச் செய்து அவர்களுடைய அகப் புறத் தோற்றங்களை வெகு நுட்பமாகவும் சரியாகவும் ஆராய்ந்து அறியலானார், அரசர்.

ஒவ்வொருவரும் 'நான் தான் அரசனுக்கு சரியான குரு எனக்கே அந்தத் தகுதியுள்ளது' என்று மனதில் எண்ணிக் கொண்டு அரண்மனைக்குள் போவதும், வருவதுமாக இருந்தனர்.

அந்த நூற்றுக்கணக்கானவர்களில் கேவலம் ஐந்தே பேர்களை மாத்திரம் அரசன் தேர்ந்தெடுத்தார். அவர்களை அழைத்து, "ஊருக்கருகில் உள்ள வெற்றிடம் முழுவதும் இப்பொழுது உங்களுடையது. நீங்கள் அங்கு உங்கள் விருப்பமுள்ள இடத்தில் மிகப் பெரிய அபாரமான சுவர்களை மட்டும் கட்டி வைத்துக் கொண்டு, அங்கேயே உங்களுடைய குரு குலங்களையும், ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான கல், மண், ~~செ~~ செங்கல், சுண்ணாம்பு, மணல் மற்றும் வேண்டிய வேலையாட்களையெல்லாம் நான் உங்களுக்கு ஒதுக்கித் தருகிறேன். ஒரே ஒரு வாரத்துக்குள் இந்த வேலையை நீங்கள் முடித்துக் கொள்ள வேண்டும். பிறகு உங்களில் எவரொருவர் மிகப் பெரிய அபாரமான சுவரை எழுப்பியுள்ளவரோ அவரை நான் எனது ஆசிரியராக வைத்துக் கொள்கிறேன்" என்றார், அந்த அரசர்.

இதைக் கேட்ட அனைவரும், சிரித்து வக்கித்து நின்றார்கள்; வியப்புற்றார்கள்; இது இதுகாறும் இல்லாத ஒரு விநோதமான நடைமுறையாக இருந்தது.

ஒரு வாரம் கழிந்தது. நகர்ப்புற வெளியில் பெரிய பெரிய சுவர்கள் எழத் தொடங்கின. அவர்களில் ஒருவர் மிக உயரமாக உள்ளதுதான் பெரியது என்ற கருத்துடன் சுவரை எழுப்புவித்தார். மற்றொருவர் 'அகலந்தான் மிகப்பெரியது' என்று எண்ணிச் சுவரைக் கட்டுவிக்கத் தொடங்கினார்; வேறொருவர் இந்த இரண்டு மாதிரிகளையும், மனதில் வைத்துக் கொண்டு மிக உயரமும், அகலமுமான சுவர்களை எழுப்பச் செய்திருந்தார். மற்றும் ஒருவர் 'இன்னும் எவ்வளவு பெரிய சுவர் எழுப்புவது' என்று கட்டுவிப்பதும், இடிக்க வைப்பதுமாக இருந்தார்.

ஆனால், ஐந்தாமவர் மட்டும், இது போன்ற சுவர் கட்டும் வேலையில் ஈடுபடாமல் ஒரு பெரிய மரத்தினடியில் உட்கார்ந்து ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு நூலை ஆழ்ந்து படித்த வண்ணமிருந்தார்.

எட்டாவது நாள், அரசனும், குல குருவும், மந்திரியுமாக அங்கு வந்து சேர்ந்தனர். ஒவ்வொருவருடைய சுவரையும் நின்று நின்று ஆய்ந்து பார்த்து விட்டு, ஐந்தாமவரிடம் வந்து நின்றனர். ஆச்சரியமடைந்தனர். "சுவாமி, நீங்கள் மட்டும் ஏன் அவர்களைப் போல் சுவரைக் கட்டி எழுப்பவில்லை" என்று கேட்டார், அரசர். அப்பொழுது அவர் பதில் கூறினார்: "என்னுடைய பங்கில் எழுப்பப்பட்டுள்ள சுவர் வெகு விசாலமான பிரதேசத்தில் ஏற்கனவே கட்டி எழுப்பப்பட்டுள்ளது. அதோ, அங்கே பாருங்கள் வானமும் வையகமும் முட்டிக் கொண்டிருப்பதை" என்று கூறிவிட்டு, மறுபடியும் தன்னுடைய நூலில் கண்களைப் பதித்தார்.

அரசன், உடனே அவருக்கு தன்னுடைய எட்டு அங்கங்களும் நிலம் படிய வீழ்ந்து வணங்கி "எல்லாம் வல்ல ஓ, இறைவனே, என்னை இப்பொழுதே, உம்முடைய சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று தழுதழுத்த குரலோடு கேட்டுக் கொண்டார். பழைய குருவின் முகத்தில் அப்போதே இருள் படியத் தொடங்கிற்று.

மனநிறைவு.

ஆசிரமத்தை விட்டு வெளியேறுகிற தன் அன்புக்குரிய சீடனைப் பார்த்துப் பகவான் புத்தர் வினவுகிறார்:

"அன்பனே, ... நீ இங்கிருந்து எந்த இடத்திற்குச் செல்ல விரும்புகிறாய்?"

"பிரபு, நான், ஒரு பல்கலைக் கழக துணை வேந்தரின் பதவியில் நியமனமாகி-யுள்ளேன். அங்கு சென்றிருந்து என் கடமையை மேற்கொண்டு செயல் படுவதற்காகவே..." என்று சீடன் தலைதாழ்த்தி விடையளித்தான்.

"நீ, எப்போது எந்த நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறாய்? என்பதைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே?"

"பகவான், நேற்று இரவில் நான், எனக்கு வந்த நியமனக் கடிதத்தைத் தங்களுக்-குக் காட்டியிருக்கிறேன். இனி நான் இங்கிருந்து செல்ல என்னை அனுமதித்து ஆசீர்-வதியுங்கள்."

"அன்பனே, என்னுடைய ஆசீர் வசனங்கள் நீ செல்லும் அந்த நகரம் வரைதான், உனக்கு உதவிகரமாயிருக்கும். ஆனால், நீ எந்தவொரு பதவியை ஏற்கச் செல்லுகிறாயோ அதை இறுதிவரையிலும் சீராக நடத்திக் கொண்டு செல்ல உன்னால் முடியுமா? என்பதைப் பற்றி நான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்."

"தேவா, தாங்கள் எங்களைப் போன்றவர்களின் வேட்கை விளக்கை ஒளிரச் செய்ய இத்தகைய வினாக்களை எழுப்பி எனக்கு என்னதான் சொல்ல விரும்புகிறீர்கள்?"

"ஏ, அன்பனே, நீ எந்த மாணவர்களுக்கிடையே செல்கின்றாயோ? அவர்கள் புதிய கோட்பாடுகளை விரும்புகிறவர்கள்; புதிய வாக்கியங்களைப் போன்றவர்களே மாணவர்கள். வித்தை எனும் சொல்லின் பொருள், 'வித்தையைக் கட்டிச் சுமப்பவன்' என்று ஆகிறது. இந்த மாணவர்களுக்கு, 'துணை வேந்தர்' என்னும் பிராணி என்றாலே 'அலர்ஜி'. எனவே, உன்னைப் பற்றி அவர்கள் வெறுக்கவே செய்வார்கள். கிண்டல் செய்வார்கள்" என்று புத்தர் மாணவர்களின் மனோநிலையைத் தன் சீடனின் நினைவுக்குக் கொண்டு வந்தார்.

பிரபு, தாங்கள் சொல்வது போலவே ஒரு வேளை அவர்கள் என்னை வெறுத்துக் கேலியும், கிண்டலும் செய்வார்களெனினும் நான் அவர்களோடு அப்போதும் நல்ல விதமாக பேசிப் பழகுவேன். ஏனெனில், சச்சரவு வைத்துக் கொள்ளவில்லையே என்று..."

"உன்னிடம் சச்சரவு செய்து கொள்ள தொடங்குகிறார்கள் என்றே வைத்துக் கொள், அப்பொழுது?......"

"குருதேவா, அப்போதும் அவர்கள் நல்லவர்களே. உடனே அவர்கள் என்னெ-திரில் உண்ணாவிரதம் இருக்கவில்லையல்லவா?"

"உன்னெதிரில் உண்ணாவிரதம் தொடங்கி விடுகிறார்கள் என்றே வைத்துக் கொள், அப்போது?"

"ஆனாலும், குருதேவா, அவர்களை நான் நல்லவர்களென்றே எண்ணுவேன்; உடனே, என்னை அந்தப் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று முயற்சி செய்யவில்லையல்லவா?'

"உன்னை, உடனேயே பதவியிலிருந்து விலக வேண்டுமென்று அவர்கள் முயல்கிறார்கள் என்று வைத்துக் கொள், அப்போது?"

"அப்போதும், பிரபுவே, நான் அவர்களை மிகவும் நல்லவர்களென்றே எண்ணுவேன் ஏனெனில், உடனேயே அவர்கள் 'பதவி விலகல் கடிதம் தாக்கல் செய்து விட்டுப் போய் விடுங்களென்று" வற்புறுத்தவில்லையல்லவா?"

"ஏற்கனவே, பதவி விலகல் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டுச் செல்லுங்களென்று

வற்புறுத்துகிறார்களென்றே வைத்துக் கொள்? அவர்களுக்கு யாரைப் பிடிக்கவில்லையோ அப்படிப்பட்டவரை அந்த இடத்திலிருந்து துரத்தி விடுவது அவர்களுடைய பிறப்புரிமையென்று எண்ணுகிறார்கள். அப்போது?"

"ஓ, அப்போது அந்த மாணவர்களைத் தட்டிக் கொடுத்துப் புகழ வேண்டியுள்ளது. கல்வி கற்றுக் கொள்வதிலிருந்து மக்கள் அபிப்பிராயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் அல்லவா? ஆயினும், இறுதியாக என்மேல் அவர்கள் கற்களை எடுத்து வீசவில்லையல்லவா என்று மகிழ்ச்சியடைவேன்."

"அன்பனே, அவர்கள் கற்களையெடுத்து உன்மேல் எறியவே செய்கிறார்கள். கடுங்கோபம் மாணவர்களின் முதன்மையான குணம். கற்கள் என்னும் இந்த ஆயுதங்களையெடுத்து வீசுவதில் அவர்கள் மிகமிகத் தேர்ச்சி பெற்றவர்களாயுள்ளனர். அப்போது?"

"அப்பொழுதும் அவர்களை நான் மிகவும் நல்லவர்களென்றே எண்ணுவேன். இறுதியாக அவர்கள் என்னுடைய தலையை உடைக்கவில்லையல்லவா?"

"ஒரே ஒரு வார்த்தையை மட்டும் உன்னுடைய உள்ளத்தில் வைத்துக் கொள். அன்பனே, அவர்கள் குறிபார்த்து அடிப்பதில் கை தேர்ந்தவர்கள். உன்னுடைய தலை நிச்சயமாக உடைக்கப்படுகிறது என்று வைத்துக் கொள், அப்போது?"

"அவர்கள் அப்படியே என் தலையை உடைத்த போதும் நான் அவர்களுக்குத் தீங்கு செய்ய எண்ண மாட்டேன். இறுதியாக அவர்கள் என்னை மூளை இல்லாதவனாக செய்யவில்லையல்லவா?"

"முன்கோபிகளான அவர்களைப் பற்றிச் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது. அவர்கள் உன்னை மூளையில்லாதவனாகவே செய்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள். அப்போது?"

"குருதேவா, அப்போது அந்தக் கருணைமிக்க மாணவர்களின் பாத கமலங்களை என்னுடைய தலை மீது வைத்து தாங்கிக் கொள்வேன்."

"ஏன்?" புத்தருக்கு சீடனுடைய பதில் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

"ஏனெனில், அந்த மாணவர்களுக்கு மூளையில்லாத துணைவேந்தர்தான் வேண்டியுள்ளது. இதற்கு முன்னிருந்த துணை வேந்தர்களை மூளையுள்ளவர்கள் என்றுதானே அங்கிருந்து நீக்கினார்கள்."

சீடனின் பதிலைக் கேட்டுப் பகவான் புத்தரின் முகம் மலர்ந்தது. அவருடைய விழிகளிலிருந்து இவன் 'பரிபக்குவமானவன்' என்று நினைக்கவே ஆனந்தக் கண்ணீர் சிந்திற்று.

"அன்பனே, இனி, நீ பூரிப்படு. உண்மையாகவே நீ என்னுடைய பெயரை மேலும் விளக்கமுறச் செய்வாய்" என்றார் புத்தர்.

மயான சத்தியம்.

நமது பாரதப் புண்ணிய பூமியில் பிறந்த, பிரம்மஞானிகளாக வாழ்ந்த மகான்களில் கபீரும் ஒருவர். அவருடைய பெயரை எல்லாரும் ஓரளவு கேள்விப்பட்டிருந்தனர். இந்தப் பேரறிஞரைப் பற்றி அடிக்கடி எண்ணிப் பார்த்த அயலூரான் ஒருவன் நேரில் காண ஒரு நாள் கபீரின் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தான். அவர் அப்போது வீட்டிலிருக்கவில்லை. அவருடைய மனைவி, அந்தப் புதிய மனிதனைப் பார்த்து, "அவர் இப்போது மயானத்திற்கு சென்றிருக்கிறார். திரும்பி வர நேரமாகலாம். விரும்பினால், நீர் அங்கே சென்று அவரைச் சந்தியுங்கள்" என்றாள்.

"அம்மா, நான் என்றும் அவரை நேரில் பார்த்திருக்கவில்லை; அந்த மயானத்தில் மக்கள் பலர் இருக்கலாம்; முற்றிலும் அறிமுகமற்றவனான நான் அவரை எப்படி அடையாளம் காண முடியும்?" என்றான், அந்தப் புதிய மனிதன்.

"அவரை அடையாளம் தெரிந்து கொள்வது மிகவும் எளிதானது. அங்கு யாருடைய முகத்தில் தெய்வீகத் தோற்றம் தென்படுகிறதோ, அவர்தான் நீர் தேடி வந்த ஞானி" என்றாள் அந்தத் தாய்.

புதியவன், உடனே மயானத்திற்குச் சென்று பார்த்தான். ஞானி கபீரை அடையாளம் காண முடியவில்லை. சற்று நேரம் நின்றிருந்து வீட்டுப் போன வாக்கில் திரும்பி ஏமாற்றமடைந்து வந்த அந்தப் புதியவன், "தாயே, மயானத்திலிருந்த எல்லாருடைய முகங்களிலும், ஒரே விதமான தோற்றந்தான் எனக்குத் தென்பட்டது. அதனால் நான் அவரைக் காண முடியவில்லை" என்றான்.

இந்தப் பதிலைக் கேட்ட அந்தச் சாதுவின் மனைவிக்கு உடனே சிரிப்பு வந்தது. "புதிய சீடனே, மயானத்திலிருந்து திரும்பி வரும் பொழுது, யாருடைய முகத்தில் அந்தத் தெய்வீகக் களை தென்படுகிறதோ, அவர்தான் நீ தேடி வந்த ஞானி" என்றாள், அந்தத் தாய். புதியவன், உடனே மயானத்தை நோக்கிச் சென்றான். எரிந்து கொண்டிருக்கும் சிதைக்கருகில் குந்திக் கொண்டும் நின்று கொண்டுமிருந்தவர்களில் ஒவ்வொருவரையும் அவன் மிகவும் கூர்ந்துகூர்ந்து நோக்கத் தொடங்கினான். சிதை முழுவதும் எரிந்தவுடன், அவர்கள் எல்லாரும் அங்கிருந்து புறப்படலாயினர். அருகிலிருந்த ஆற்றில் குளித்துத் தம்மைத் தூய்மை செய்து கொண்டனர். புதியவன் இப்போது அவர்கள் அனைவரையும் ஒவ்வொருவராக உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். எப்படியாயினும் தான் காண வந்த ஞானி கபீரை இனங்காண வேண்டுமல்லவா? ஆற்றில் குளித்ததுமே, மற்ற எல்லாருடைய முகங்களிலிருந்த ஞானக்களையும் மறைந்து போயிற்று. இதைக் காணவே அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால், ஒரே ஒருவருடைய முகத்தில் மட்டும் அந்தத் தெய்வீகப் பொலிவு நிலையாக இருப்பதைக் கண்டான். அந்தக் காட்சி அவனுடைய உள்ளத்தை மகிழச் செய்தது. அவரே ஞானி கபீர் என்பதுவும் அவனுக்குத் தெரிந்தது. விரைந்து அவர் அருகில் வந்து நின்று காலைத் தொட்டு வணங்கினான். நீங்கள் தான் ஞானி கபீராக இருக்க வேண்டும் என்று கேட்டான்.

"அல்ல, என்றார் அந்த மனிதர். 'அப்படியா?' புதியவனுக்குத் திக் பிரமை ஏற்பட்டது. அதற்குள் அவர்" நான் ஞானி கபீரல்ல, கேவலம் என் பெயர் கபீர் மட்டும் தான்' என்றதும் புதியவனுக்கு உள்ளம் தெளிந்தது போலிருந்தது.

'நான் தத்துவ உண்மைகளைத் தெரிந்து கொள்ள உங்களை நாடி வந்துள்ளேன். எனக்கு, இப்போது ஒரே ஒரு ஐயப்பாடு மட்டும் நீங்கள் தெளிவித்தால் போதும். இதைக் காட்டிலும் வேறு ஞானம் எனக்கு எதுவும் வேண்டாம்' என்றான் அந்தப் புதியவன்.

" என்ன சந்தேகம்?" என்றார் கபீர்.

"சற்று முன், நான் மயானத்திலிருந்த, எல்லாரது முகத்திலும் ஒரு தெளிவான ஞானப் பொலிவு இருப்பதை நேரில் கண்டேன். குளித்து முடித்ததும் உங்கள் ஒருவரைத் தவிர்த்து மற்ற அனைவருடைய முகத்திலும் இருந்த அந்தப் பொலிவு அறவே மறைந்து விட்டது.

இது எத்தகைய ஞானப் பொலிவு?" என்றான் புதியவன்.

ஞானி கபீர் கம்பீரமாக அவனைப் பார்த்து, "அன்பனே, அது ஞானப் பொலிவல்ல. அதன் பெயர் 'மயானப் பொலிவு' என்பது. ஆனால், இந்த உண்மைதான் என்றுமழியாத ஞானத்தின் வடிவம்" என்றார்.

"அந்த உண்மை தான் என்ன?" என்றான், புதிய அன்பன்.

"என்னுடைய வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கையில்லையெனில், என்னோடு நீர் வருவீராக. நான் காட்டும் விலையுயர்ந்த அந்த இரத்தினங்கள் எங்கேயிருக்கின்றனவோ, அங்கேயே உங்களை அழைத்துச் சென்று காட்டுகிறேன்" என்றார், துறவி.

இந்த வார்த்தைகளை நம்ப இயலாதவராயிருந்தும், 'அவருடைய வார்த்தையைப் பரிசோதனை செய்து பார்க்கலாம்' என்ற எண்ணத்தோடு சரி என அரசர் புறப்பட்டார். நகரத்துக்கு வெளியே நடந்து சென்று அங்கு ஒதுக்கப்பட்டிருந்த குடிசை வாசிகளின் ஒரு வீட்டின் முன் போய் நின்றனர்.

"அரசே, நான் சொன்ன அந்த விலை மதிப்புள்ள இரத்தினக்கல் அதோ பாருங்களேன்; நான் உங்களோடு பொய் பேச வேண்டுமா" என்றார் துறவி. துறவி சுட்டிக் காட்டிய திசையைத் திரும்பிப் பார்த்தவாறு நின்ற சக்கரவர்த்தி "ஊம், இது ஒரு ஏழையின் குடிசை. சோற்றுக்கு வக்கற்றவன் குடியிருப்பு. இதில், அந்த விலைமதிக்க முடியாத இரத்தினம், எங்கிருந்து வந்திருக்க முடியும்? போதகரே, நீங்கள் என்னோடு விளையாடாதீர்கள்" என்றார்.

அப்போதும் துறவி சற்று குனிந்து அந்த வீட்டிற்குள் சுட்டிக் காட்டியவாறு, "அரசே, இந்தக் குடிசையில் அதோ தெரிகிறதல்லவா? நமக்கு எதிராகவே, இந்தக் கல் தான், அந்த இரத்தினம்" என்றார்.

என்றனர், முனிவர்கள்.

“மகரிஷிகளும் தேவேந்திரனும் பெருமை தாங்கிய இந்தச் சபையில், உங்களைப் போன்ற பகுத்தறிவில்லாத மூடர்களும், முட்டாள்களும் புகுந்து அசுத்தப் படுத்தி விட்டீர்கள். அதை நினைத்துத்தான் நானும் சிரித்து விட்டேன்” என்றான், அஷ்டவக்கிரன்.

அவனுடைய இந்த பதில், அங்கிருந்த அனைவருக்கும் பெருஞ் சினத்தை ஏற்படுத்தியது. “அடே, சிறுவனே, கோணல் வாயனே! உனக்கு எவ்வளவு தைரியமிருந்தால், எங்களை இப்படிப் பேசுவாய்” என்று இடி இடிப்பதைப் போல் முழங்கினார்கள். இதைக் கேட்ட அஷ்டவக்கிரன் புன்னகை புரிந்தவாறு, “சகோதரர்களே, கோபங் கொள்ள வேண்டாம். கோபங்கொள்வதிலிருந்து, உங்களை நீங்களே தாழ்மையற்றவர்களாக்கிக் கொள்கிறீர்கள். இருக்கட்டும். உங்களை மூடர்கள் என்றும், முட்டாள்கள் என்றும் நான் சொன்னதைக் கேட்டு உங்களுக்குக் கோபம் வந்துவிட்டதல்லவா? நீங்கள் என்னுடைய இந்தக் கோணலான உடம்பைப் பார்த்துச் சிரித்தீர்கள். இந்த என் உடம்பினுள்ளேயிருக்கும், பரமாத்மா என்னும் தெய்வத்தை நீங்கள் யாரும் பார்க்கவேயில்லை. அதனால், கேவலம் அழிந்து போகும் இந்த உடம்புக்கு மட்டுமே மதிப்பளிக்கும் உங்களை, நான் மூடர்கள் என்றும் முட்டாள்கள் என்றும் சொன்னதில் தவறு என்ன இருக்கிறது? எல்லாருடைய உள்ளத்திலும் குடியிருக்கும் ஆத்மா ஒன்று தானே. உள்ளத்திலிருக்கும் அந்த ஆத்மாவில் உங்களுக்கும் எனக்கும் என்ன பேதமிருந்தது. உள்ளம் தூய்மையாய் இருக்கிறதா, இல்லையா? என்று பாருங்கள். அந்த உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் ஆத்மா, சொல்லாலும் வெளியே அறிவொளியாக வெளிப்பட்டுக் கொண்டுள்ளதா என்று ஆர்ந்து பாருங்கள். தன்னுடைய ஆத்மாவை அறியாது வாழும் ஒவ்வொருவரும் முட்டாளே என்பதை நீங்கள் எப்போதேனும் உணர்ந்து கொள்ளுங்கள்” என்றான்.

இந்தத் தர்க்க ரீதியான வாதத்தைக் கேட்ட அனைவரும், தத்தம் தலைகளைத் தாழ்த்தியவாறு மௌனமாயினர். முனிவர்கள் இந்த உண்மைகளை அறிந்தவர்களாயிருந்தும், மறந்து விட்டதன் தவறுக்காக அஷ்டவக்கிரன் கொடுத்த தண்டனையை நினைத்து மிகமிக வெட்கப் பட்டவர்களாய் அங்கிருந்து உடனே வெளியே சென்றனர். சபையும் கலைந்தது.

* * * * * * * * * * * * * * * * *

ஆத்ம சக்தி.

இயற்கையிலும், செயற்கையிலும் இதுகாறும் இல்லாதிருக்கும் புதியவவொன்றைக் கண்டுபிடித்து இந்த உலகுக்களிப்பவன் ஒரு ஆராய்ச்சியாளன்தான். அவனுடைய, ஆற்றல் பிற்கால மக்களால் போற்றப்படத்தக்கது. இதில் ஒருவரும் ஐயுற வேண்டிய அவசியமில்லை. உலகத்தில் என்றும் நிலைபெற்றிருந்து மக்களுக்குப் பயன்படக் கூடிய அரிய ஒன்று கண்டுபிடித்தும்; அதை எல்லாருக்கும் பொதுவாக பயன்படக் கூடாது; தம் இனத்திற்கே அது உரியதாக வேண்டுமென்று குறுகிய மனப்பான்மையோடு ஒருவன் செயல்பட்டால், அது நீதிக்கும், உண்மைக்கும் புறம்பானதாகும். சுய நலமுள்ள இத்தகைய ஒருவன் மக்களால் அவமதிக்கப்பட வேண்டியவனாகவே இருப்பான். இந்தக் குறுகிய மனோபாவமுள்ளக் கூட்டத்தையும், மகாசக்தி வாய்ந்த ஒரு உண்மையையும் கண்டுபிடித்ததைப் பற்றிய அற்புதமான ஒரு வரலாற்றுச் சித்திரம் இது.

பண்டைக் காலத்தில், இதுகாறும் யாரும் அறியாமலிருந்த ஒரு அரிய உண்மையை ஒரு ஆராய்ச்சியாளன் முயன்று கண்டுபிடித்திருந்தான். அது உண்மையிலேயே மிகவும் சக்தி வாய்ந்ததுதான். அதனைச் சரிவரப் புரிந்து கொண்டு ஒருவன் தன் வாழ்க்கையில் மேற்கொண்டொழுகினால், அவன் விரும்பியதனைத்தையும் அது கைகூடச் செய்யவல்ல- தாயிருந்தது. 'வேண்டாதவர்கள், இந்த மர்மவுண்மையை அறிந்து கொள்ளக் கூடாது' என்று அஞ்சிய கண்டுபிடிப்பாளி, தன் இனத்தினரில் ஒரு சிலரை மட்டும் அழைத்து அவர்களுக்கு விளக்கவுரைத்து, "இந்த மகாசக்தி வாய்ந்த மர்ம உண்மையை எந்த இடத்தில் மறைத்து வைத்தால் நல்லது என்று உங்களால் கூறமுடியுமா?" என்று வினவினார்.

அவர், கேட்டுக் கொண்டபடி இவர்கள், அமைதியாக அமர்ந்து, சிந்திக்கத் தொடங்கினர். சற்று நேரங்கழித்தபின், ஒருவன் கூறினான், 'இதனைக் கடலின் அடியில் புதைத்து வைத்து விட்டால் பிறர் யாரும் அறிந்து கொள்ள முடியாது என எனக்குத் தோன்றுகிறது' என்று. இதைக் கேட்டதும் வேறொருவன், "மிகவும் உயர்ந்துள்ள ஒரு மலைச் சிகரத்தின் உச்சியில் புதைத்து வைத்துவிட்டால் நலமாயிருக்கும். எனில் யாரும் இதைக் கண்டுகொள்ள முடியாது," என்றான். "அடர்ந்த காடு சூழ்ந்துள்ள ஒரு மலைக்குகைதான் இதற்குச்சரியான பாதுகாப்பிடம்" என்றான், வேறொருவன்.

இறுதியாக, அங்கிருந்தவர்களில் மேதாவியான ஒருவன், ஆழ்ந்து, சிந்தித்துச் செப்பினன்: "கடலும், மலையும், குகையும் போன்ற இடங்களைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருப்பது வீண். இது தேவையற்றது. இந்த அரும்பெரும் சக்திவாய்ந்த மர்ம உண்மையை நாம் மனிதனின் உள்ளத்திலேயே நிரந்தரமாக இட்டு வைக்கலாம். இந்த அற்புதமான சக்தி, 'தன் இதயத்தில்' உள்ளது என்று எந்தவொரு மனிதனும், எந்தக் காலத்திலும் அறிந்து கொள்ள மாட்டான். எப்படியெனில், இளமை முதல் முதுமை வரை ஒவ்வொரு மனிதனுடைய உள்ளமும், தனக்குப் புறம்பாக வெளியேயுள்ள பொருள்- களைப் பற்றியே, எண்ணியும், கண்டும், கேட்டும் அரையும் குறையுமாய் அறிந்ததை மட்டும் நம்பி இயங்கிக் கொண்டுள்ளது. இது காரணமாய், 'இந்த அற்புதமான சக்தி தன்னுள்ளத்திலேயே அடங்கியுள்ளது' என்று அவன் சிந்தித்து அறிந்து கொள்வது சாத்தியப் படாதது. மனிதன் தன் உடலில் பிறவியிலிருந்து வெளிநோக்காக அமைந்துள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளின் மூலமாக அறிந்து கொள்ளக் கூடிய உலகத்தில்தான், அவன் இந்த அரும்பெரும் மர்ம உண்மையைத் தேடிக் கொண்டிருக்கிறான். தன்னைத்தான் அறியாத எந்த ஒரு மனிதனும், அஞ்ஞானியேயாகிறான். ஆனதினால்,

மனிதனின் உள்ளத்தினுள்ளேயே இதனை வைப்பதுதான் மிகவும் நல்லது", என்றான்.

இந்த மேதாவியின் ஆலோசனையை, மற்ற எல்லோரும் ஒருமனதாக அங்கீகரித்தனர். அப்படியே, ஒருவன் விரும்பியதனைத்தையும் அவனுக்கு கிடைக்கச் செய்யவுள்ள இந்த அற்புதமான மகாசக்தியை மனிதர்களின் உள்ளத்தின் உள்ளேயே மறைத்து வைத்துவிட்டு அவர்கள் மனநிறைவோடு கலைந்து சென்றனர்.

இந்த உலகத்தில் பிறந்துவாழும் எந்தவொரு மனிதனும் தன் உள்ளத்தில் அவர்கள் மறைத்து வைத்துள்ள மகாசக்தியை அறிந்து கொள்வானாயின் நிச்சயமாக அவன் எல்லாம் அறிந்தவனாகிறான். எல்லாம் வல்லவனாகிறான். விரும்பியதனைத்தையும், விரும்பியவாறு பெற்று நுகர்பவனுமாகிறான். இன்றைய உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும், இந்தப் பேருண்மையை அறிந்து கொள்ளாமல், தன்னுடைய சுய ஆசாபாசங்களின் பற்றுகளினால், கட்டப்பட்டு பெரும் நரக வேதனைகளை அனுபவித்துக் கொண்டு தான் காலங்கழிக்கிறான். தன்னுடைய கண்களைத் தன் கையாலேயே மூடிக்கொண்டு மனிதனுக்கு மனிதன் பகைவனாகி, பொருளினால் உயர்ந்தவன் தாழ்ந்தவனாகி, சாதி மத ~~சூழ்~~ பேதங்களை ஏற்படுத்திக் கொண்டு கூக்குரலிட்டு ~~'கோவிந்தம்! போட்டு'~~ பெரும் அஞ்ஞானியாக வாழ்கிறான். ஆனால், தன்னைத்தான் அறிந்து கொண்டவன் மட்டும் தன்னுள்ளத்தில் மறைந்துள்ள அந்தவுண்மையையும் அறிந்து ~~கொண்டவன் எல்லையானவன்~~ நிலையில்லாப் பொருள்களிடையே, நிலையுள்ளவனாயும், அறிவுள்ள உயிர்களின் அறிவாயும், ஒருவனாய் நின்று அனைவருடைய ஆசைகளையும் நிறைவேற்றுபவனாயும் ஆகிறான். அவனை, ~~உலகத்தில்~~ வெல்லும் சக்தி ஒன்றுகூட எந்தக் காலத்திலும் உலகத்தில் இருக்க முடியாது.

இத்தகையவர்களுக்கே, இருக்கும் போதும் சரி, இறந்த பின்னும் சரி, அழிவில்லாத சாந்தியும் நிலைபெறான அமரத்துவமும் உரியதாகவுள்ளது.

அந்த மர்மத்தின் பெயர் வடமொழியில் சொன்னால்: "ஏதஸ்யா பிரம்மணோ நாம சத்திய மிதி" எனப்படும். தமிழில் "அந்த பிரம்மத்தின் பெயர் சத்தியம்" என்று ~~அர்த்த~~ பொருள்படும். சத்தியமே அந்த ஆத்ம சக்தி; சத்தியமே நித்தியமானது.

அன்னை கொரில்லா

தாய்மை! எனும் பண்பார்ந்த சொல், மனித குலத்துக்கு மட்டும் தான் உரியது என்று ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. "காட்டில் வாழும் கொடிய விலங்குகளுங்கூட சமய சந்தர்ப்பங்களில் கருணை மிகுந்த தன்மையில் செயல்படும் இயல்புள்ளன" என்று ஒரு சிலர் நம்பாமலும் இருக்கலாம். ஆயினும், இந்தவுண்மையை அறிய இந்த நிகழ்ச்சிச் சித்திரம் உலகுக்கு நிரூபித்துக் காட்டுகிறது.

1919 செப்டம்பர் பன்னிரண்டாம் நாள் நடந்த சம்பவம் இது. ஆப்பிரிக்கா கண்டத்தில் 'உகாண்டா' தேசத்தில் இருக்கும் சிறிய ஊர் ஒன்றில், இந்த விசித்திரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பயங்கர இருள் சூழ்ந்த காடுகளின் இடையே இருந்தது அந்தச் சிறிய ஊர். 'மசாயி' என்னும் ஆதிவாசிகளின், கேவலம் ஒரு பதினைந்துக்கு மேற்படாத சிறிய குடிசைகள் தான் ஊரில் இருந்தன. அந்தக் குடியிருப்பின் ஆதிவாசி ஒருவன், தன் விவசாய நிலத்திலேயே ஒரு சிறிய குடிசையைக் கட்டிக் கொண்டு அங்கேயே குடியும் இருந்தான். நீண்ட காலம், அன்போடு கூடியிருந்து வாழ எண்ணி திருமணம் செய்து கொண்ட அவனுடைய இல்லத்தரசி ஒரே ஆண்டும் நிறைவு பெறாத சின்னஞ்சிறு குழந்தையை அவன் பொறுப்பில் விட்டுவிட்டு நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டாள். குடிசையைச் சுற்றியிருந்த விவசாய நிலத்தில் 'கொரில்லாக்களின்' தொந்தரவு மிகவும் அதிகமாயிருந்தது. பகலும் இரவும் நிலத்தில் இட்ட சோளம், கிழங்கு போன்ற பயிர்களை காத்து எடுக்க வேண்டியிருந்தது அவனுக்குத் தவிர்க்க முடியாததாயிருந்தது. தனிக் குடிசையில், தாயற்ற சின்னஞ்சிறு மகவோடு வாழ்ந்து கொண்டே இந்தக் குரங்குகளை விரட்டும் மிகவும் சிரமமான செயலிலும் அவன் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கண்ணும் கருத்துமாயிருந்து தாயற்ற தன் அருமைக் குழந்தையையும் பாதுகாக்க வேண்டும்; அதே போன்று, பண்ணையில் தான் இட்ட பயிர்களையும் காப்பாற்ற வேண்டும். எனவே, அவன் நிலை சொல்லால் விவரித்துக் கூற இயலாத பரிதாபமாயிருந்தது. அந்தச் சிறு குழந்தைக்குத் தூக்கம் வந்த நேரத்தில், பிரம்புத் தொட்டிலில் படுக்க வைத்து விட்டுச் சென்று கொரில்லாக்களை விரட்ட அவன் காட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

ஒரு நாள் பொழுது சாய்வதற்குச் சற்று நேரம் இருக்கும் தருவாயில், ஒரு வரப்பின் மேல், அவன் நடந்து கொண்டிருந்தான். கொஞ்ச தூரத்தில் கொரில்லாக்களின் கூட்டமொன்று சோளக் கொல்லையில் புகுந்து கதிர்களைப் பறித்துமென்று, தின்றவாறு, பாழ்படுத்துவதைக் கண்டான். அதே நேரத்தில், தன் அன்புக் குழந்தை தொட்டிலிலிருந்தவாறு, தூக்கந் தெளிந்து கதறி அழும் ஒலியும் கேட்டது. பயிர் பாழாவதைக் கண்ணால் கண்டுங்கூட அதை உதறிவிட்டு குழந்தையின் அன்பு அவனை அங்கிருந்து குடிசைக்கு விரைந்து வரச் செய்தது.

சற்று தூரத்திலிருந்தே அங்கு வந்து கொண்டிருந்த பெண் கொரில்லா ஒன்று அப்போது தன் குட்டிகளுடன் குடிசைக்குள் நுழைந்து கொண்டிருந்தது. இதைக் கண்டதும் அவன் அங்கேயே தயங்கித் தம்பித்து நின்று விட்டான். 'ஐயோ, என்னருமைக் குழந்தையின் கதை இனி என்ன ஆகப் போகிறதோ!' என்று ஐயமுற்று, உடனே என்ன செய்ய வேண்டும்! என்று யோசனையுமாய்த் தன் தோளிலிருந்த வில்லை நாணேற்றி, கொரில்லாவைக் கொல்லும் கூர்மையான ஒரு அம்பையும் கையில் பிடித்தவாறு, அவன் குடிசையை நோக்கி நடக்கும் போதே, தன் குழந்தையின் அழும் குரல் அறவே நின்று விட்டிருந்தது. காரணமறியாத அவன், 'குழந்தைக்கு என்ன நேர்ந்திருக்கும்' என்ற பீதியில் மேலும் சற்று அங்கு நின்றான். பின்பு, அடிமேல் அடியிட்டவாறு அவன் கால்கள் மெதுவாகக் குடிசையை நோக்கி நடந்தன. குடிசையில் தென்பட்ட அந்தக் காட்சி, அவனை மெய் சிலிர்க்க வைத்தது. அந்தத் தாய் கொரில்லாக் குரங்கு இவனுடைய குழந்தையைத் தொட்டிலிலிருந்து எடுத்து உட்கார்ந்த நிலையில் மடியிலிட்டுக் கொண்டு பால் கொடுத்துக் கொண்டிருந்தது. கொரில்லாவின் இரண்டு குட்டிகளும், தொட்டிலைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தன. இது உலகத்தில் இதுகாறும் நேரில் கண்டிராத, கேட்டிராத ஒரு அபூர்வக்

காட்சியாயிருந்தது. ஆயினும், அவ்வாறே நின்று காலந் தாழ்த்த அவனுக்கு உள்ளம் ஒருப்பட வில்லை. குடிசைக்கு அருகில் வந்தான். அவனைப் பார்த்தவுடனேயே அந்தக் கொரில்லா தாய்க் குரங்கு, சற்று வெட்கமடைந்தது போல, விசுக்கென எழுந்து குழந்தையை முன்னிருந்தவாறே தொட்டிலில் படுக்க வைத்து விட்டுக் குட்டிகளுடன் வெளியே வந்து வேறொரு திசையை நோக்கி விரைந்து சென்று விட்டது. உடனே, குடிசைக்குள் வந்து குழந்தையை அவன் உற்றுப் பார்த்தான். குழந்தையின் இதழ் ஓரத்தில் ஒட்டிய பாலின் இரண்டு துளிகள் வெண்முத்துக்களைப் போல அவனுக்குத் தென்பட்டன.

இந்த நிகழ்ச்சி, அன்று ஒரு நாளோடு நின்று விடவில்லை. அவன், குடிசையில் இல்லாத நேரம் பார்த்து அந்தத் தாய் கொரில்லா நாளும் ஒரு தடவையாவது வந்து குழந்தைக்கு, பாலூட்டி விட்டு சென்று கொண்டிருந்தது. ஒரு சில நாளில் அதுதன் குட்டிகள் அருகில் இருந்த பெரிய புதர்களில் மறைந்திருந்து விட்டும் வரும். இவ்வாறு, அந்த இரக்கமுள்ள கொரில்லா சுமார் ஒரு ஏழெட்டு மாதங்கள் வரையும் தவறாமல், வந்து குழந்தைக்குப் பாலூட்டி அதை வளர உதவி புரிந்தது. குழந்தைக்கு எந்தவொரு அபாயமும் இருக்க வில்லையென்று அறிந்த அந்தக் காட்டு மனிதன், கொரில்லா அங்கு வந்து போவதற்குக் குறுக்கீடு எதுவும் செய்யவில்லை. குழந்தை ஆரோக்கியமாகவும் உடல் வலிவோடும் வளர்ந்தவாறிருந்தது. பிறகு, அந்தத் தாய்க் கொரில்லா அங்கு வருவது குறைந்து நாளடைவில் நின்று விட்டது.

விலங்குகளைக் காட்டிலும் 'மனிதர்களாகிய நாம் அறிவில் சிறந்தவர்கள்' என நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஆப்பிரிக்கக் காட்டுவாசிகள், இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்தும் சரியான உண்மைக் காரணம் புரியாதவர்களாக இருந்தனர்.

'குழந்தையை ஈன்று, கணவரின் பாதுகாப்பில் விட்டுவிட்டுக் காலஞ் சென்ற கருணை உள்ள அந்தத் தாய், கொரில்லாவுருவங் கொண்டு ஒவ்வொரு நாளும் வந்து குழந்தைக்குப் பாலூட்டினாள்' என்று தான் அவர்கள் பேசிக் கொண்டனர். 'இறந்து போனவரின் ஆத்மா ஏதாவதொரு ரூபத்தில் திரும்பி வரும்' என்பது 'மசாயி' ஆதிவாசிகளது திடமான அச்க்கிச அபிப்பிராயமாயிருந்தது. இது எப்படியிருப்பினும், இளங்குழந்தையின் அழுகையும், ஈன்ற தாயில்லாத திக்கற்ற நிலையும் அந்த கொரில்லாவின் உள்ளத்தில் கருணையை உண்டாக்கியிருக்க வேண்டும். அதனால் தான் அந்தத் தாய்க் குரங்கு, ஒரு தாயைப் போலவேயிருந்து, குழந்தைக்குப் பாலூட்டிப் பாதுகாத்தது. இதிலிருந்து, 'மனிதர்களைக் காட்டிலும், சில சமயங்களில் விலங்குகள் சற்றுமேலான இதயத்தைக் கொண்டுள்ளது', என்று நாம் துணிந்து கூறலாம். ஆம், 'மனிதனாய்ப் பிறந்தும், விலங்கைப் போல் வாழ்பவரும் உண்டு; விலங்காய்ப் பிறந்தும் மனிதனைப் போல் வாழ்பவையும் உண்டு' என்ற இது இனிப் பொய்யாகாதல்லவா?

தன்னையெல்லாம் நீ வற்றடித்து விட்டாய். இன்னும், எப்படித்தான் நான் உனக்குச் சொல்லி அழுவது?' என்று உரத்த குரலில் கத்தியவாறு, கையிலிருந்த நீண்ட சிறு பிரம்பினால் கண்ணும் மண்ணும் தெரியாது ஒரே மாதிரியாய் அரசிளங்குமரனை இடுப்பிலிருந்து கால்வரையிலும் சரமாரியாக விளாசி முடித்தார்.

இவ்வாறு, ஆசிரியர் சிறுவனை அடிக்கும் போது கூர்ந்து பார்த்து எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருந்த ஒரு சிறுவன், 'இரண்டு டஜன் அடி. கணக்கு சரியாயிற்று' என்றான்.

9 ('இரண்டு டஜன்' என்ற சொல், அந்த ஆசிரியரை திடுக்கிட வைத்தது. தன்னால் அடிக்கப் பட்ட அந்தச் சிறுவன், அந்நாட்டையாளும் அரசனுடைய மகன் என்பதும் நினைவிற்கு வந்தது. அதை நினைக்கும் போதே ஆசிரியரின் உள்ளத்தில் பேரச்சம் உண்டாயிற்று. உடலும் நடுங்கத் தொடங்கிற்று.) 9 (அதே நிலையில், அரசகுமாரனின் முகத்தை அவர் உற்று நோக்கினார். என்ன ஆச்சரியம், பிரம்பினால் இருபத்தி நான்கு அடிகளைப் பெற்றிருந்தும் அந்த மாணவன் முகத்தில், ஒரு துளி வருத்தமோ, அழுகையோ காணப்படவேயில்லை. 'அவன் ஒரு சாந்தமூர்த்தி' எனும் தோற்றத்தோடு எப்போதும் போல நின்று கொண்டிருந்தான்.) 10 (ஆசிரியர், சற்று வெட்கமடைந்தவாறு, "உன்னால் புரிந்துகொள்ள முடியாத வரிகள் யாவை? அவற்றில் உனக்கு என்ன புரியவில்லை?" நான் ஒரு முறைக்கு, இரு முறை - மும்முறையுங்கூடச் சொல்லி விளக்கியிருக்கிறேனல்லவா?" என்று வினவினார், ஆசிரியர்)

'நீங்கள் போதித்ததில், "அறிவுள்ளவொருவன், தன்னுள்ளத்தில் கிளம்பிய சினத்தை ஆற்றிக் கொள்ள வேண்டும்" என்ற வரியும், "எந்த நிலையிலும், உள்ளது உள்ளபடி உண்மையே பேசவேண்டும்" என்ற வரியும் தான். இவையிரண்டும் எனக்குச் சரியாக புரியவில்லை ஐயா, என்று வினயமாகப் பதிலளித்தான், அரசிளங்குமரன்.

உற்றுக் கேட்டவாறு, நின்று கொண்டிருந்த வகுப்பு மாணவர்களனைவரும், ஆசிரியரின் முகத்தையே திருதிருவென்று இப்போது பார்க்கத் தொடங்கினர்.

13 (ஆசிரியருக்கு, இப்போதுதான் அந்த இரண்டு வரிகளின் பொருளும் சரிவரப் புரியத் தொடங்கிற்று. எந்த நிலையிலும், உள்ளத்தில் தோன்றிய சினத்தை அறிஞன் அடக்கிக் கொள்ள வேண்டுமேயன்றி, வெளிப்படுத்தக் கூடாது என்னும் தன்னுடைய போதனைக்குத் தானே நேர்மாறாக நடந்து கொண்டது ஆசிரியருக்கு படுவெட்கத்தை உண்டு பண்ணிற்று) (உள்ளது உள்ளபடி உண்மையையே பேசினான், அரசகுமாரன். மற்றவர்கள், 'புரிந்தது' என்று சொன்னது பொய்யாகவும் இருக்கக் கூடும். ஆனால், ஆசிரியர் அதை மெய்யென நம்பினார்.) 15 (அரசகுமாரனும், மற்றவர்களைப் போலவே, "ஆம் ஐயா, எனக்கும் புரிந்தது" என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அவன் சொல்லவில்லை. இரண்டு டஜன் அடிபட்டும் ஆசிரியரின் பேரில் சினமும் கொள்ளவில்லை. உண்மையைப் பேசவும் தவறவில்லை. எனவே, அரசகுமாரன் மட்டுந்தான் அந்த இரண்டு வரிகளின் பொருளையும் சரிவரப் புரிந்து கொண்டிருந்தான்) 16 (ஆனால், போதித்த ஆசிரியர் அதன் பொருள் தன் நடைமுறையில் வருமளவு புரிந்து கொள்ளாதவராகவே இருந்தார். மாணவர்களெல்லாம் வெளியில் சென்று, இந்த வெட்கக் கேட்டை சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்களே என்று எண்ணி அவருள்ளம் மிகவும் வருந்தியது.)

[illegible]

* * * * * * * * * * * * * *

[illegible]

[illegible]

ஒரு பிச்சைக்காரன், தன் வாழ்வுக்கு 'இருக்கும் ஊரே போது'மென்று திருப்தியடைய மாட்டான். ஒரு வியாபாரி தன் வாழ்வுக்கு 'இருக்கும் கடையே போதும்' என்று திருப்தியடையமாட்டான். ஒரு பணக்காரன் தன் வாழ்வுக்கு 'இருக்கும் பணமே போதுமே' என்றும் திருப்தியடையமாட்டான். சாமான்யமான இவர்களைப் போலவே, தன் வாழ்வுக்கு 'இருக்கும் தேசமே போதும்' ஆட்சி புரிய என்று திருப்தியடைய மாட்டான், ஒரு அரசன். ஆனால், மற்ற அனைவரையும் அரசனின் இந்த திருப்தியற்ற நிலை, மகா பயங்கரமானது என்பதை நாம் இனி படித்துக் காணலாம்.

இரண்டாம் சந்திரகுப்தனுக்குத் தன் சாம்ராச்சியத்தை மேலும் பரவலாக்க வேண்டும் என்னும் ஆசை தீவிரமாக இருந்தது. அதனால், சில சிறிய சிறிய தேசங்களின் மேல் படையெடுத்துச் சென்று, எதிர்த்த வீரர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் கண்மூடித்தனமாகக் கொன்று குவித்து, அவர்களது ஆடுமாடுகளையும், தங்கம், வெள்ளி நகைகளையும் அபகரித்துக் கொண்டு வந்து சேர்த்த அவன், இரத்த ஆறுகளின் மேல், தன்னுடைய சாம்ராச்சியத்தை விஸ்தரித்துக் கொண்டேயிருந்தும் கூடத் 'திருப்தி' என்ற ஒன்றைக் காணாமலேயே இருந்தான்.

இவன் இருக்கக் குஜராத், மேலும் சௌராஷ்டிரத்திலிருந்த நிரந்தரமான விரோதிகள் சந்திரகுப்தனின் எல்லைப் பிரதேசத்தில் அடிக்கடி கூட்டங்கூட்டமாக வந்து புகுந்து மக்கள்டமிருந்த நகை நாணயங்களையும், மாட்டு மந்தைகளையும் கொள்ளையடித்துக் கொண்டு செல்பவராயிருந்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சந்திரகுப்தன் சிலபல தந்திரங்களைக் கையாண்டான். ஆயினும் அவைகள் ஒன்றும் பயன் தரவில்லை.

அப்போது, சந்திரகுப்தன் யோசனைக்குள்ளானான். 'பரார்' என்ற பிரதேசத்தை ஆண்டுகொண்டிருந்த 'வாகாடகர்களின் அரசனைப் போரில் தோற்கடித்துச் சிறைபிடித்துக் கொண்டு வந்து தன்னுடைய படைத்தலைவனாக வைத்துக் கொண்டால், அவன் மூலம் அந்த நிரந்தர விரோதிகளை அடக்கி விடுவது எளிது என்று தோன்றிற்று. ஆனால், அவனுடைய மந்திரிகள் இந்த யோசனையை ஒத்துக் கொள்ளவில்லை. "வாகாடர்களை போரில் தோற்கடிப்பது அவ்வளவு எளிதானதன்று. ஆனால், தந்திரத்தினால் அவனை நம்முடையவனாகச் செய்து கொள்ளலாம்" என்றனர்.

"அப்படியான உபாயம் என்னவுள்ளது? இருந்தால் மிகவும் நல்லது தான். அதைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்க்கலாம்" என்றான், சந்திரகுப்தன். மந்திரிகளில் ஒருவர், "வாகாடகர்களின் அரசன் இரண்டாம் ருத்திர சேனன் என்பவன் தான். அவன் இன்னும் திருமணம் புரிந்து கொள்ளாத பிரம்மச்சாரியாகவே இருக்கிறான். அவனுக்கு உங்களுடைய திருக்குமாரி, பிரபாவதியைக் கொடுத்துக் கல்யாணம் முடித்து வைப்பீராக." என்றார்.

இரத்தம் சிந்தாமல் வாகாடகர்களைத் தம்முடைய உறவினர்களாக ஆக்கிக் கொள்ளும் இந்த தந்திரம் மிகச் சரியானது என்று சந்திரகுப்தனுக்குத் தோன்றிற்று. காலந்தாழ்த்தாது தூதுவர்களை அனுப்பி வைத்து ருத்திரசேனனிடம் இந்த திருமணம் பற்றிய செய்தியை அறிவிக்கச் செய்தான். அவனுடைய ஜாதகத்தையும் தருவித்தான். தன்னுடைய ஆஸ்தான ஜோதிடர்கள் மன்னன் மகளுடைய ஜாதகத்தோடு ருத்திரசேனனின் ஜாதகத்தை வைத்து ஆராய்ந்து பார்த்து, "அரசே, இந்த திருமணத்தால் எந்தவிதமான நல்ல பலன்களும் ஏற்படுவதாயில்லை. கிரகங்கள் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கவில்லை" என்றனர்.

"ஜாதகங்கள், பொருந்தாமலிருப்பினும் குப்தர்களுக்கும், வாகாடகர்களுக்குமுள்ள வேற்றுமை நீங்க இந்த சம்பந்தம் நடைபெற்று தீரவேண்டுமென்று" அடம்பிடித்தான், சந்திரகுப்தன்.

ஜோதிடர்கள், மேலும் விளக்கிச் சொன்னார்கள். "வேண்டாம் அரசே, ருத்திரசேனன் அற்ப ஆயுளை உடையவனாய் இருக்கிறான். அவனுடைய வாழ்நாள் வெறும் ஒரு பத்தாண்டுகள் மட்டுந்தான். உம்முடைய அருமை திருமகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டு

விதவைக் கோலம் வரக்கூடாது' என்றனர், அரண்மனைச் ஜோதிடர்கள். (இதையறிந்ததும் அந்தப்புரத்திலிருந்து வந்த மகாராணி, அங்கு வந்து சேர்ந்தாள். தன் கணவரைப் பார்த்து "ஜோதிடர்களின் எச்சரிக்கையைத் தாங்கள் மீற வேண்டாம். நமது குழந்தையை (ராஜகுமாரி) அவருக்குக் கொடுக்காதீர்கள்" என்று இடைமறித்தாள்.)

சந்திரகுப்தன் அசைக்க முடியாத திடச் சித்தத்தோடு சொன்னான்: "அரசாங்கத்தோடு அரசாங்கம் சேரும் இனிய பந்தத்தை உனக்கு வேண்டாமோ? இத்தகைய என்னுடைய தீர்மானங்களை நீ மறுத்தால், அதனால் பேரிழப்புகள் நேரிடக் கூடும். ஆதலால், இந்த சம்பந்தம் நடந்தே தீர வேண்டும்." என்றான்.

"உங்களுக்கு சாம்ராச்சியத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற பித்தம் தலைக்கேறியுள்ளது. அதற்காக அந்த கன்னிப்பெண்ணை பலி கொடுக்க நினைக்கிறீர்கள். இந்தக் குள்ளநரித் தந்திரத்தினால்தான் 'கா' வம்சத்தினரின் நட்பு வேண்டுமென்று என்னை நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள். இதுவன்றி, உங்களுடன் பிறந்த தங்கை 'துருவ தேவி'யையும் இதே முறையில் பலி கொடுத்துள்ளீர்கள். இந்த இரண்டு மனமற்ற - மனமற்ற திருமணங்கள் புரிந்தும் உம்முடைய மனம் திருப்தியடையாமல் மேலும் பெற்ற குழந்தையை இன்று பலி கொடுத்து விளக்கி விடத் துணிந்துள்ளீர்கள். இது நடைபெறக் கூடாது" என்றாள் மகாராணி.

தன்தாய், தன் அப்பாவோடு ~~கூடாத வாக்குப் போர் புரிந்து~~ கொண்டிருக்கும் அந்த நேரத்தில் அரசிளங்குமரி, (பிரபாவதி) அங்கே வந்து "அப்பா, அம்மா, உங்களுடைய ~~பேச்சை~~ உடனே நிறுத்தி விடுங்கள். நான் இந்தத் திருமணத்திற்கு மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன்" என்றாள் உறுதியான உள்ளத்தோடு.

"என்னடி சொல்கிறாய், நீ? என்னுடைய உயிரே, என்னுடைய செல்வமே, உனக்கும் உன் அப்பாவைப் போல சித்தப் பிரமை ஏற்பட்டு விட்டதா?" என்று மகாராணி சீறினாள்.

"அம்மா, நான் நன்றாக யோசித்துப் பார்த்து விட்டேன். என்னுடைய உள்ளம் மிகவும் நன்றாக உள்ளது. நான், இந்த சம்பந்தத்தை மறுத்து விட்டால், என்னுடைய அப்பா ~~வாகாடகர்களுடன்~~ போர் புரியச் சென்றே தீருவார். அப்பொழுது, அளவற்ற அநேக மங்கைகள் இரு நாடுகளிலும் விதவைகளாகின்றனர், தாய்மார்கள் சந்ததிகளை உண்டு பண்ண வேண்டிய தக்கம் கணவன்மார்களை இழந்து விடுகின்றனர். எந்தக்குற்றமும் புரியாத மக்கள் கொலை செய்யப்படுகின்றனர். ஓடும் இரத்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த நான் துணிந்து செய்யும் இந்தத் தியாகம் அவ்வளவு பெரியதாகி விடாது. என்னை - யீன்ற அன்னையே, என் ஒருத்தியின் தியாகத்தினால் எத்தனை உயிர்கள் காக்கப்படுகிறார்கள். இதை இன்னொரு முறை நீ எண்ணிப் பாராம்மா. அப்பா நிச்சயம் செய்த இந்தச் சுபகாரியத்தை நீ தடுத்து நிறுத்த வேண்டாம்" என்றாள், ~~[illegible]~~ ~~[illegible]~~ அரசிளங்குமரி.

தன்மகள் உலகமறியாதவள் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட சாம்ராட் இரண்டாம் சந்திரகுப்தன் திக்பிரமையடைந்து விக்கிரகம் போல் அப்படியே நின்று விட்டான்.

* * * * * * * * * * * * *

இலக்கியம்

வெள்ளியங்காட்டான்

நண்பன் பதிப்பகம்
பீளமேடு
கோவை—641004

சிந

சஞ்சீவி

முறையிலிருந்து, இதுகாறும், 'சஞ்சீவி' எனும் சொல்லுக்கு மக்கள் தவறான பொருள் கொண்டுள்ளனர். அது மலைகளிலோ, வனங்களிலோ மறைந்திருக்கும் 'தாவர' இனத்தைச் சேர்ந்த ஒன்றன்று. மக்கள், வாழ்நாள் முழுவதும் தத்தம் உள்ளங்களில் வைத்துக் கொண்டு ஒழுக வேண்டிய, பாரமார்திக உண்மை ('சத்தியம்), வியவகார உண்மை (நீதி)களின் பயனைக் குறிப்பிட வந்த அரும்பெரும் பொருள் பதிந்த ஒரு சொல். மேலும், சற்று விளக்கின், நில்லா இயல்பினதான பொருள் செல்வத்தையே, "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்று முன்னோர் அறிவுறுத்தியுள்ளனர். ஆனால், இதனினும் மேலான ஆன்மிக அறிவுச் செல்வத்தைத் தேடும் அவசியத்தைப் பற்றி விளக்க வந்த சொல் இது. கன்னட மொழியில், உள்ள ஒரு சிறிய பழமொழி உண்டு. "சுவார்த்தவே சகல அநர்த்தக மூல" என்று. இதன் பொருள் "சுயநலமே எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாக உள்ளது" என்பதாகும். இத்தகைய சுயநலமுள்ளவர்கள் "சஞ்சீவி" என்ற சொல்லின் பொருளை மறைத்து, மூலிகைச் செடி என்று சொல்லி ஏமாற்றினர். இந்த உண்மையை, மக்கள் புரிந்து கொள்ளும்படி தீட்டப்பட்டுள்ளது, இந்தக்கதை.

கி.பி. 531-லிருந்து 579ம் ஆண்டு வரை "பர்சியா" எனும் நாட்டை 'ஆனோசர்-வன்' என்ற பெயருடைய ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய சமஸ்தானத்தில், கிரீஸ், பாரதம் மேலும் பர்சியா தேசத்தைச் சேர்ந்த உடல் மருத்துவர்களும், உளமருத்துவர்களும் இருந்தனர். அவர்களில் பர்சியா தேசத்து உள வைத்தியனான பூர்ஜோயி, அறிவுசால் நூல்-களை இடைவிடாது சிரத்தையோடு கற்பதும், கற்றதை ஆழ்ந்து சிந்திப்பதும் வழக்கமாகக்கக் கொண்டிருந்தார். ஒருநாள் நம் பாரத நாட்டிலிருந்து சென்று அந்த சமஸ்தானத்தில் இடம்-பிடித்துக் கொண்ட பண்டிதரும், பூர்ஜோயும் உரையாடிக் கொண்டிருந்தனர். பேச்சுவாக்கில், நம் பாரத தேசத்துப் பண்டிதரிடமிருந்து, ''நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டவர்களையுங்கூட உயிர்த்தெழச் செய்யும், இந்த 'சஞ்சீவி'யின் மகத்துவமும், அது பாரதத்திலுள்ள மிகப் பெரியதும், நீண்டதுமான மலைச் சிகரத்தின் உச்சியிலிருக்கும் ஒரு மருந்துச் செடி' என்றும் பூர்ஜோயி ~~பேச்சுவாக்கில்~~ அறிந்து கொண்டார்.

இதை நினைக்க நினைக்க பூர்ஜோயின் உள்ளம் குது கலித்தது. 'ஆகா, இதுகாறும் நான் கேள்விப்படாத-ஏன் நம்பவும் முடியாத இது ஒரு அதிசயமாகவே இருக்கிறது.' இது உண்மைதானா? அந்தச் செடியின் விவரம் ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் தயவுசெய்து சொல்லுங்களேன். நான், அங்கு சென்று அதைத் தேடிக் கண்டுபிடித்து விடுகிறேன். இதனால், நாம் உலகத்துக்குப் பேருபகாரம் செய்தவர்கள் ஆகின்றோமல்லவா?' என்று மிக வினயமாகவும், ஆவலாகவும் வேண்டிக் கொண்டார்.

'ஐயா, உங்கள் பேராவலைக் கண்டு நான் மிகவும் அமைகிழ்கிறேன். ஆனால், நான் அந்த மூலிகைச் செடியைப் பற்றி கேள்விப்பட்டதன்றி நேரில் பார்த்தறியேன்,' என்றார், நம்முடைய பாரதப் பண்டிதர். இவர் அளித்த பதில், உண்மையானது. அவர் கேள்விப்பட்ட-தோடு சரி. ஆம், அந்த மூலிகைச் செடியை நேரில் கண்டவர்கள் ஒருவரேனும் தேசத்தில் என்றும் இருந்திருக்கவில்லை.

பூர்ஜோயி, சஞ்சீவி மூலிகையைப் பற்றி மறக்க முடியாதவராய், சிந்தித்துச் சிந்தித்துச் சிலநாட்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தார். "எப்படியாயினும் சரி, என்ன நேர்ந்தாலும் சரி, நான் புனித பாரத தேசத்துக்குச் சென்று அந்த அரும்பெரும் மூலிகையைத் தேடிக் கண்டு பிடித்துத் தீருவேன்' என்று.

ஒரு நாள் 'பூர்ஜோயி' தன் உள்ளக்கிடக்கையை, மறைக்காமல் அந்நாட்டு அரசனான "ஆனோசர்வனிடம்'' 'சமயமறிந்து வெளிப்படுத்தினார்" அரசன், பூர்ஜோயியின் அறிவாற்றலையும், பிடித்ததைச் சாதிக்கும் அதீதமான திறமையையும் நன்கு அறிந்தவரானதனால் மகிழ்ச்சியோடு அவருடைய பிரயாணத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து, வாழ்த்தும் கூறி பாரத நாட்டிற்கு வழியனுப்பி வைத்தார். வழி நெடுக, எந்தவித இடையூறுமின்றி, எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதற்காகப் புரிந்த உடலோடும், புனிதமான உள்ளத்தோடும், பூர்ஜோயி ஒரு நாள்

பாரதத்தை வந்தடைந்தார். நீரில் மூழ்கிய ஒருவன், சுவாசிக்கும் காற்றிற்காக விரைந்து மேல்மட்டத்திற்கு வருவது போன்ற அவசர நிலையில் பூர்ஜோயும் செயல்படலானார். மலைகளில் எல்லாம், மிகவும் பெரியதும் உயர்ந்ததுமான மலை 'இமயகிரி' என்று அவர் உள்ளம் நிச்சயித்தது. தொன்று தொட்டுப் பழங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மிகவும் எழிலார்ந்த ஒரு குக்கிராமத்தைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டார். பகல் முழுவதும் சஞ்சீவி மூலிகையை ஆராய்ந்து அறிவதிலும், அதனால் ஏற்பட்ட உடல் சோர்வை இரவில் உண்டு, உறங்கி கழிப்பதிலும் நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சென்று கொண்டிருந்தன. வாரங்களாக, மாதங்களாக வருடமும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக முடிந்தது. இவ்வாறு தேடியும், அவருக்கு சஞ்சீவி மூலிகை காணப்படவேயில்லை. உள்ளச்சோர்ந்து வெறுங்கையோடு திரும்பித் தன் சொந்த நாட்டுக்குச் செல்லவும் மனந்துணியவில்லை. இத்தகைய நிராசையில் மாட்டிக் கொண்ட பூர்ஜோயி, மூலிகையைத் தேடும் செயலை மறந்தவாறு ஒருநாள் சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட, அந்தச் சிறு கிராமத்துத் தலைவன் வந்து பூர்ஜோயியின் சோர்ந்துள்ள நிலையைப் பற்றி விசாரிக்கலானார்.

வயது முதிர்வுடன், வாழ்வில் வாய்த்த பட்டறிவும், நிறைந்துள்ள அந்த வயோதிகனைப் பார்த்து, பூர்ஜோயி, தன் நிலைமையை விளங்கக் கூறினார். ஏற்கனவே, பாரத நாட்டுப் பண்டிதர் கூறிய மலையைப் பற்றிய குறிப்புரையையும், அந்த வயோதிகனிடம் மேலும் ஒரு முறை தெளிவாகக் கூறினார். படிப்பறிவற்றும், பட்டறிவு பெற்றுள்ள அந்த வயோதிகன், பூர்ஜோயின் குறிப்புரையைக் கேட்டு இவ்வாறு கூறினார்.

"பூர்ஜோயி, அந்தக் குறிப்புரையை நீ சரிவர ஆய்ந்து புரிந்து கொள்ளவில்லை. அதன் வெளிப்படையான கருத்து மட்டும்தான் உனக்குப் புரிந்திருக்கிறது. இரு பொருள் படும் குறிப்பு அது என்று நான் கருதுகிறேன். அதற்கு இன்னொரு பொருளும் உள்ளதென நீ உணர்ந்து கொள்ளவில்லை. அதை நான் உனக்கு விளக்குகிறேன்., கேட்டுக் கொள்ளுங்கள்.

பருவதம் என்றால் எல்லா நூல்களையும் கற்று, வல்லுநரான பண்டிதரைக் குறிக்கும். [illegible] செடியென்றால் அது வாக்கியங்களைக் குறிக்கும். இறந்தவர்களுக்கும், 'ஜீவனற்ட [illegible]' என்றால் அது "ஆத்மாவையறியாத அஞ்ஞானிகளைக் குறிக்கும்". எனவே, அது ஆத்மாவைப் பற்றிய ஒரு நூல்தான். அது செடியல்ல, கொடியுமல்ல," என்று.

அப்போது தான், பூர்ஜோயுக்குத் தன் தவறு புரிந்தது. உடனேயே, அந்த நூல், [illegible] பிரதேசத்தையாளும் அரசனிடம் இருக்கக் கூடும் என்று முதியவன் சொல்லக் கேட்டு [illegible] செய்து கொண்டார். அரசனிடம் சென்று, தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, 'அந்த [illegible] நூலை' தனக்கு இரவலாகப் படித்தறியத் தர வேண்டுமென்று கோரினார்.

தன்னுடைய உயிருக்கும் மேலாக எண்ணிப் பாதுகாத்து வைத்திருந்த அந்த நூலை பூர்ஜோ-[illegible] கொடுக்குமுன் அரசன், சில நிபந்தனைகளை விதித்தார்: "நீ இந்த நூலை [illegible] எந்த இடத்திற்கும், எடுத்துச் செல்லக் கூடாது. இதே, இடத்திலிருந்து தான் நீர் [illegible] தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நூலை எந்தக் காரணத்தைக் கொண்டும் வேறு [illegible] செய்து கொள்ளக் கூடாது." இவையே அந்த நிபந்தனைகள்.

நிபந்தனைகளுக்குச் சம்மதித்த பூர்ஜோயி, அவ்வாறே செய்தார். அதன் முதல் சூத்திரம் [illegible] இருந்தது.

"ஓம், பூர்ணமத:, பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண
முதச்யதே/பூர்ணஸ்ய பூர்ண – மாதாய
பூர்ண மேவாவசிஷ்யதே/ ஓம் சாந்தி
சாந்தி சாந்தி."

[illegible] நாளும் தான் படித்த சூத்திரங்களை பூர்ஜோயி நினைவில் இருத்திக் கொண்டு வந்து [illegible] அதைக் குறித்துக் கொள்ளத் தவறவில்லை. நாளடைவில், அவருடைய [illegible]. அரசறியாது அதே நூலைப் புதிதாக எழுதியும் முடித்துக் கொண்டார். [illegible] 'உபநிஷத்து'.

சஞ்சீவி [illegible] நாடி வந்த பூர்ஜோயி, இவ்வாறு சஞ்சீவியைப் போன்றே உடலையும், [illegible] அனைத்து நோய்களும், தீர்க்கும் அருமருந்தாகிய அமிர்தமயமான அந்தச்

சஞ்சீவி நூலைத் தம்முடைய நாட்டுக்கு எடுத்துச் சென்று அரசனிடம் கொடுத்தார். ஒவ்வொரு நாளும், அந்த ஆன்மீக நூலைப் படித்துக் காட்டினார். கேட்டறிந்து, அகமகிழ்ச்சி கொண்ட அரசன், தன் நாட்டு மக்களுக்கு இந்த நூலின் சாராம்சமான

"சத்தியம் வத; தர்மம் சர"

அதாவது, 'உண்மையைப் பேசுக, அறவழி ஒழுகுக' என்று பர்சிய மொழியில் புரியும் படியாகப் பறைசாற்றி அறிவித்து அனைவரும் கடைப் பிடித்தொழுகுமாறு செய்தார். இந்தச் சஞ்சீவி மொழிகளை நம்பிப் பின்பற்றி ஒழுகிய அந்த மக்கள் நோய் நொடியின்றி, வாது வழக்கின்றி, பொய், புனைச் சுருட்டுகளின்றி வாழ்வாங்கு வாழ்ந்து இறந்தும் இறவாத நிலைபெற்ற அமரராய் போற்றப்பட்டனர்.

வாழ்க்கைப் புத்தகம்.

'நான் பணக்காரன்; நான் பட்டதாரி, நான் பதவியாளன்' என்றோ அல்லது நான் ஒரு ஆண், நான் ஒரு பெண், நான் ஒரு குழந்தை என்றோ இன்னும் இது போன்ற ஏதோ ஒரு பெயருடன் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தம்மை மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்திக் கொள்கின்றனர். இவர்கள், தான் யாராயினும் முதலில் தன்னைத் தான் சுட்டிக் காட்ட முன் நிற்கும் சொல் ஒன்றே — அது 'நான்' என்பது தான்.

ஆணும், பெண்ணும் குழந்தையும் — மற்ற அனைவரும் 'நான்' எனும் சொல்லில் ஒன்றாகவே உள்ளனர். ஆனால், இந்த 'நான்' எனும் ஒருவன், 'தான் யார்?' என்பதை அறியாதவனாகவே வாழ்ந்து காலம் தீர்ந்து கழிந்தவனாகிறான்.

இவனுடைய தோற்றத்திற்கு எவை காரணமாகயிருந்தனவோ, அவற்றுடன் அதுவாக இவனும் பிரிந்து உயர்திணையை இழந்து அஃறிணைப் பொருள்களின் — நிலம், நீர், நெருப்பு, காற்று என மாறி ஆகாயத்தில் கலந்து விடுகிறான். ஆகவே, ஒவ்வொருவரும் தாம் வாழுங்காலத்திலேயே இந்த 'நான்' என்பது என்ன? என்று அறிந்து கொள்ள வேண்டும்.

'எதையறிந்தால், எல்லாம் அறிந்ததாகுமோ அல்லது எல்லா நூல்களிலிருந்தும் எது ஒன்றே அறியத் தகுந்ததாகுமோ' அதுதான் இந்த 'நான்' என்பது. இந்த நான் தான் 'பிரம்மம்' என்பது. இதை "அகம் பிரம்மாஸ்மி" — "நானே பிரம்மமாயுள்ளேன்" என்று விளக்குகிறது, உபநிடதம்.

இதனை, தமிழில் சொன்னால் 'சைதன்ய தரிசனம்' எனலாம். இதன் பொருள், தானும் இறைவனும் ஒன்றே எனக் காண்பது. சைதன்யம் என்னும் சொல்லின் பொருள் அறிவு, ஆத்மா, கடவுள், தத்துவ ஞானம் எனப்படும்.

நீரோ அல்லது நெருப்போ" — என்னுடைய தட்பம், என்னுடைய வெப்பம் என்று தன்னை இருவேறாகப் பிரித்துக் கொள்ள எப்படி இயலாதோ, அதே போன்று ஒரு மனிதன், 'என்னுடைய உடல் என்று சொல்லலாம். என்னுடைய உயிர் என்று கூடச் சொல்லிக் கொள்ளலாம். இன்னும், மற்ற அனைத்துப் பொருள்களையும் என்னுடையது என்று சுட்டிக் காட்டலாம். ஆனால், என்னுடைய ஆத்மா என்று மட்டும் சொல்லக் கூடாது. நான் தான் ஆத்மா. ஆத்மா தான் நான். அது இரண்டற்றது. ஒன்றேயானது. இதையறியாது இன்றுள்ள மக்கள் ஆத்மா அல்லது கடவுள் என ஒன்று வேறாக உள்ளது. அதைப் பூசனை புரிந்து போற்றிப் பக்தனாக ஒழுகினால் தான் தெய்வீக நிலையை அடைய முடியும் என்று கருதுவது, நான் வேறு, என்னுடைய தட்பம், வெப்பம் வேறு என்று, நீரும் நெருப்பும் சொன்னால், எப்படிப் பொருந்தாததாகுமோ, அவ்வாறே பொருந்தாததாகும்.

ஆனால், இதில் ஒரு சிக்கல். நம்முடைய உள்ளத்தை (சைதன்யத்தை) மாசு படுத்தக் கூடியதாய நம்முள்ளேயே அவர் உணர்வில் இருக்கும் உட்பகைகள் ஆறு என்பர். இவற்றை 'அரிஷட்வர்க்கம்' என்று தொகுத்துக் கூறுவர். இதன் பொருள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் என்பன. இதனைத் தமிழ்ப் படுத்தினால், ஆசை, வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, சச்சரவு எனலாம். இவைகளை நம்மிடமிருந்து அறவே நீக்கிக் கொள்ளும் போது நம்முடைய ஆத்மாவை அறிந்து கொண்டவராகிறோம். நான் வேறு, தெய்வம் வேறு எனும் தவறு அப்போது தவிர்க்கப் படுகிறது. இந்தவுண்மைகளை விளக்கக் கூறுகிறது, இந்தச் சின்னஞ் சிறிய புத்தகக் கதை.

'இந்த உலகத்தில் மிக அதிகமான எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு விற்பனையாகும் ஒரு புத்தகம் எது?' என வினவின் இந்த ஒரே பிரச்சனைக்கு விடைகள் பலவாக இருக்கும். அவரவர் பின்பற்றி ஒழுகும் மத ஒழுக்கங்களின் அடிப்படையில் 'கீதை' என்றும், 'பைபிள்' என்றும், 'குர்ரான்' என்றும், 'திரிபிடகம்' என்றும், இன்னும் என்னவெல்லாமோ ஆகவோ அந்த விடைகள் இருக்கலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மிஞ்சி நிற்கும் மனிதனை மட்டும் பற்றிய — பிரதி ஒவ்வொரு மனிதனும், பிறந்த போதே, 'வாழ்க்கை' என்ற பெயருடன் ஒரு புத்தகமும்

பிறந்து உள்ளது. ஆம், ஒருவன் பிறந்தவுடனேயே இந்தப் புத்தகமும் வெளியிடப்பட்டு விடுகிறது. ஆயினும், இந்தப் புத்தகத்தில், கண்ணுக்குத் தென்படும் எழுத்துக்கள் இருப்பதில்லை. இதன் பக்கங்கள் மட்டும் ஒரு பெரிய எண்ணிக்கைக்கு உட்பட்டுள்ளன. அவன் வாழும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பக்கமும் அச்சிடப்படுகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரையும் இவ்வாறே அந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு தாளும் அச்சிடப்படுகிறது. ஆனால், அச்சிடப்பட்ட அந்த பக்கத்தை படித்துப் பார்த்தால், அதில் சாராம்சம் என்று எடுத்துக்கூ எது ஒன்றும் இருப்பதில்லை. இதே முறையில் நாட்கள் ஒவ்வொன்றாய்க் கழிவதும், மனிதன் வாழ்வதுமான ஒவ்வொரு பக்கத்திலும் அழிக்க முடியாததான எழுத்துக்களுடன் கூடிய ஒலி வாக்கியங்கள் அச்சிடப்பட்டு முடியும்போது அதில் அவன் உள்ளத்திலிருந்து இறகி-காரம் வெளிப்பட்ட அந்தச் சுயநலம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, சச்சரவு மட்டுந்தான் பதிவாகியுள்ளன. அவ்வளவும் வெறும் ஒலிகள், வெறும் சொற்கள்.

அந்த வாக்கியங்களையே நாம் பற்பல வர்ணங்களாக பகுத்து அழகாக்கிப் பரோபகாரம், பாண்டித்யம், சாதுர்யம், தர்மம், நீதி, கடவுள், அன்பு, புகழ், 'சத்தியம், சிவம், சுந்தரம்' என்று நூல்களாக என் வாங்கிப் படித்துக் கொண்டிருக்கிறோம்.

இத்தகைய மேற்கோள்கள், கற்பனைகள், உருவகங்கள் ஆக அமைந்து இலக்கண அமைதியோடு நெருக்கப்பட்டுக் 'காவியம்' என பெயரிடப் பட்டிருப்பினும், அவைகளின் மூலவடிவங்களுக்குள்ள குணங்கள் வேறு நல்ல குணங்கள் ஆவதில்லை. அது சாத்தியமற்றது. இதற்கு மேலும், வாழ்க்கைப் புத்தகத்திலுள்ள பக்கங்களுக்கு மூலாம் பூசி மெருகிட ஆரம்பித்தால் புத்தகமே நாசமாகி விடுகிறது. வாழ்க்கையின் நடைமுறையுண்மைகளை மட்டுந்தான் அது காட்டுகிறது. பொய், மெய்யாவதில்லை. யாரும் அதனை மெய்யாக ஆக்கவும் முடியாது. மனிதனை நாசக் கேடு செய்யும் 'காமக் குரோத லோப மோக மதமாத்சரம்' எனும் இந்த ஆறு பகைகளையும் உலகத்தில் இல்லாமல் மனதுள்ளத்தில் ஒளிந்து கொண்டு இருக்க விடாமல் களைந்தெறிவது எப்பொழுது? இது சாத்தியமா' எனலாம். தொண்டும், உண்மை என்னும் பேனாக்களைக் கொண்டு எழுதினால் மட்டும் இந்த வாழ்க்கை நூலில் உள்ள பக்கங்கள் நாசமாகாமல், மறையாமல் நிலை பெற்றிருக்கும். அந்தச் சத்தியமென்றவொன்று நாமாகவே மாறி விடும்போது மட்டும் இது சாத்தியமாகும். அப்போது அது நல்ல ஆதாரநூலாகவோ, காவியமாகவோ மாறுகிறது. மக்களுக்கு பற்றுக் கோடாகவும் அமைகிறது. மக்களை அது தேவர்களாக மாற்றுகிறது.

இதைத்தான்,

'சீவனெனவும் சிவனெனவும் வேறில்லை,
சீவன் சிவனாரைச் சிந்தித்தறிகிலன்,
சீவன் சிவனாரைச் சிந்தித்தறிந்தபின்,
சீவன் சிவனாய்ச் சிறப்புற்றிருந்தானே.'

என்கிறது திருமூலர் திருமந்திரம்.

'அத்மநா விந்ததே வீர்யம் வித்யயா விந்ததே அம்ருதம்' என்கிறது, உபநிசத். இதன் பொருள், ஆத்மாவின் வித்தாக உள்ளது ஒருவனிடம் உள்ள வீரியம்; ~~இதை~~ ஆத்ம வித்தையின் வித்தாக உள்ளது அமிர்தம்', எனப்பொருள் படும். எனவே, நாம் நம்மை உடையவராகி தெய்வத்தை அறிந்துகொள்ளும் போதே பிறரால் வெல்ல முடியாதவர்களாகிறோம். ஆத்ம வித்தையை நாம் அறிந்து கொள்ளும் போதே மரணமற்றவர்களாக ஆகிறோம். 'ரிதம் சத்யம் பரப்பிரம்ம' என்று உபநிசத்து விளக்குகிறது. 'ரிதம்' என்றால், 'ஒழுக்கம், அழகு' என்பது பொருள். ஒழுக்கமே நீதி எனப்படும். இது வியவகார உண்மை. சத்தியம், பாரமார்த்திக உண்மை. இதனையே நாம் உள்ளத்தில் வைத்துக் கொண்டொழுகின், உட்பகை ஆறும் அற்று விடுகிறது.

சூழ்ச்சி.

ஏஷ ப்ரஜாபதிர் – யத் – ஹ்ருதய – மேதத் ப்ரஹ்மை தத் ஸர்வம்.

ஏத ஹ்ருதயமோ (புத்தியோ) அதுதான் பிரஜாபதி அதுதான் ஆத்மா என்கிறது உபநிஷத்து. மேலே, 'ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய: ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸி தவ்யோ' என விளக்குகிறது உபநிஷத்து.

அடே, மைத்ரேயி ஆத்மாவே பார்க்கப்பட வேண்டும்; கேட்கப்படவேண்டும்; நினைக்கப்பட வேண்டும்; அறியப்பட வேண்டும் என்பது இதன் பொருள்.

மேலும், "தேவாஸ்தம் பராதுர் – யோ அன்யத்ராத் மனோ புதானி வேத" என்பது மற்றொரு உபநிஷத்து.

'ஆத்மாவுக்கு அன்னியமாக தேவர்களை எவன் கருதுகிறானோ அவனைத் தேவர்கள் தள்ளி விடுவார்கள்' என்பது இதன் பொருள்.'

இந்த நியதியைத் தான் இதே அட்டவக்கிரன் தேவேந்திரன் சபையில் எடுத்துக் கூறி, 'உடலைப் பார்க்கக் கூடாது. உடலுக்குள் மனோமயமாய் இருக்கும் ஆத்மாவைப் பார்க்க வேண்டும்' என்று ரிஷிகளிடம் வாதம் செய்தான். 'மூடர்கள், முட்டாள்'களென்றும் அவர்களைத் திட்டினான். 'அதுசரி சரிதான்' என்று நாமும் ஒப்பி அங்கு இவனுக்கு ஒத்தாசை உள்ளவராவோம்.' ஆனால், இங்கு அதே அட்டவக்கிரனின் நியாயம் எப்படி இருக்கிறது, பாருங்கள்.

அந்தக் குற்றத்தைத் தன்மேல் சுமத்தப்பட்ட போது அது குற்றமேயல்ல என்று காரண காரிய முறையில் பல்வேறு நீதிநியமங்களை எடுத்துக் காட்டி வாதித்து குற்றம் சுமத்திய – வர்கள் மீதே திருப்பி குற்றம் சுமத்தின அட்டவக்கிரன், இப்போது மற்ற மனிதர்களுடைய உள்ளத்திலும் அந்த ஆத்மா உள்ளது என்பதை அறவே மறந்து பிராமணனைத்தவிர மற்ற அரசன் முதல் உலகத்திலுள்ள அனைவரும் பிராமணனுக்குக் கீழ்ப்பட்ட மக்களாக கருதி வாதிப்பதை இங்கு காணலாம். அட்டவக்கிரனுடைய காலம் மகாபாரதத்துக்கும் முந்தின காலம் என்று குறிப்பிடப்படுகிறது. இதை அந்தக் காலத்திலிருந்தே பிரம்மத்தை அறிந்திருந்த பிராமணர்கள் தாமும் பிரம்மமாகிய சத்தியத்தை பின்பற்றாமல், மற்ற மக்களுக்கும் அந்த உண்மைகளைக் கூறி விளக்காமல் இந்த நாட்டில் வல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணமாகிய விக்கிரக ஆராதனை அல்லது உருவ வணக்கம் செய்வதை மற்ற மக்களுக்குப் போதித்தார்கள். பகவத் – கீதையின் மூலம் உருவ வணக்கத்திற்கு வித்திட்டு இந்த நாட்டை அதோகதிக்கு ஆளாக்கியுள்ளனர்.

அட்டவக்கிரன் என்ற பெயருடைய இவன் ஒரு பிராமணச் சிறுவன். சிறுவனாயிருக்கும் போதே அரச சபையில் நின்று கொண்டு தன் வாதத்தையெடுத்துப் பேசுகிறான். தப்பு இங்கு சரியாகிறது. அநீதி நீதியாகிறது.

'ஒரு சிறிய ஒற்றையடிப் பாதை. அதில் ஒரு புறத்திலிருந்து நாட்டையாளும் அரசன் வருகிறான். இன்னொரு புறத்திலிருந்து ஒரு பிராமணன் வருகிறான். இப்படி வரும் போது யாருக்கு யார் விலக வழிவிட வேண்டும்?' என்பது தான் இங்கு வாக்கு வாதத்திற்கு அடிப்படைக் காரணம். அரசனுடைய அனுக்கிரகத்தினால் தான் அட்டவக்கிரனுடைய காலட்சேபமே நடக்கிறது. இந்த ஆத்ம ரகசியத்தை:

அரசன் கூட ஒரு பிராமணனுக்குக் கீழ்ப்பட்டவன் என்று இங்கு பேச்சினால் நிரூபிக்கப் – படுகிறது.

அட்டவக்கிரனுடைய வாதத்திறமை இவ்வாறு இருந்தது. "யாருக்கு யார்? விலகி வழிவிட வேண்டுமென்றால் அது பிராமணனுக்குமல்ல. அரசனுக்குமல்ல.

இரண்டு கண்ணும் தெரியாத ஒரு குருடன் தடியூன்றிக் கொண்டு தடுமாற்றத்துடன் வருவதைக் கண்டால் கண்ணுள்ள ஒருவன் விலகி குருடனுக்கு வழி விட வேண்டும். அதே போல், ஒரு திசையிலிருந்து ஒரு பெண் வரும் போது அந்த இக்கட்டான வழியில் ஒரு ஆண்மகன் எதிர் – திசையிலிருந்து வந்தால் விலகி நின்று பெண்மகளுக்கு வழிவிட வேண்டும். இரண்டு கையும் வீசிக் கொண்டு, அதே வழியில் செல்லும் ஒரு ஆடவன் எதிர்புறத்திலிருந்து தலையில் சுமையோடு

வரும் ஒரு அடிகளுக்கு விலகி நின்று வழிவிட வேண்டும். அதன் பிறகு பிர[illegible]திருக்கும் போது அரசன் எதிர் திசையிலிருந்து வந்தால் எல்லாரும் வழிவிட்[illegible] நிற்க வேண்டும். பிராமணன் இருந்தால் பிராமணனுக்கு முதலில் எல்லாரும் வி[illegible] வேண்டும். ஏனெனில், அரசன் உடல் பலமுள்ளவன், பிராமணன் பலவீனமானவன். பலமில்லாதவனுக்கு பலமுள்ளவன் வழிவிட்டு விலகி நிற்க வேண்டும்.

இங்கு அரசனைக் காட்டிலும், பிராமணன் உயர்ந்தவனாக காட்டப்படுகிறது. [illegible] போது சபையிலிருந்த ஒருவன் பேசுகிறான். 'இது நியாயம், அட்டவக்கிரனுடைய நீதிக்குப் புறம்பானதல்ல. இதில் சத்தியம் அடங்கியுள்ளது. நிதர்சனமான காட்சிகள் மூலம் நிரூபிக்கப் படுகிறது' என்று. அட்டவக்கிரனுடைய வாதத்துக்கு ஆமோதிப்பு சபை[illegible] உண்டாக்குகிறான்', 'வேலுக்கு ஓனான் சாட்சி' என்பது போல. இது சூழ்ச்சி. சத்[illegible] இங்கு மறைக்கப்படுகிறது. 'அந்தப் பிரம்மத்தின் பெயர் 'சத்தியம்' என்பதை மறைத்தவன் பிராமணனாக இருக்க மாட்டான்.

அந்தக் காலத்திலிருந்து இன்று வரும் இந்த நியாயந்தான் நாட்டில் வழங்கி வருகிறது. உபநிடதத்தின் கருத்துகளின் படி இது சரியான மார்க்கதர்சனமன்று. 'நீதி'யென்றும் கூற முடியாது. நாட்டினுடைய எல்லாத் துன்பங்களுக்கும் இந்தப் போக்கே மூல காரணம். மக்கள் அனைவரும் சமம் என்று இந்த வாக்கு வாதம் ஒத்துக் கொள்ளவில்லை. உபநிடதத்துக் கருத்துக்கள் தெரிந்திருந்தும் மக்களுக்கு மறைத்து வைத்தது மிகப் பெரிய மன்னிக்க இயலாத ஒரு தவறு என்று இங்கு நாம் கருத வேண்டியுள்ளது.

மக்கள் பிரம்மத்தை அல்லது ஆத்மாவை அறிந்து கொள்ளாத நிலையில் உருவ வணக்கத்திற்கு உள்ளாக்கி மக்கள் சக்தியை அடியோடு வீணாக்கப்பட்டுள்ளதை நாம் காணுகிறோம். 'ஆத்மனா விந்ததே வீர்யம்' மிகப் பெரிய பலம் ஒவ்வொருவருக்கும் தத்தம் ஆத்மாவை அறிந்து கொள்கிற போதுதான் உண்டாகிறது என்கிறது உபநிடதம். எனவே, நாம் அசக்தர்களாக்கப்பட்டோம் என்பது இதிலிருந்து இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

வீதியில் சென்று வந்து கொண்டிருக்கும் வழிப் போக்கர்களே, நாகரிகர்களே, உங்களனைவரையும் நான் இங்கு வரும்படியாகக் கூவி அழைத்துக் கொண்டிருக்கிறேன். என் கண் காணவே, விரைந்து செல்லுகின்ற, என்னுடைய அருகில் வந்து நின்று விட்டுச் செல்லுகின்ற எல்லாருக்கும் நான் கதறிக் கண்ணீர் விட்டவாறு கேவிக் கொண்டு கூவி அழைப்பது உங்கள் யார் காதிலும் விழவில்லையா?

என் முன் வந்து நின்று விட்டுச் செல்கின்றீர்கள். எனக்குக் கை கூப்பி வணங்கி விட்டுச் செல்கின்றீர்கள். என்மேல் மலர்களைக் கொண்டு வந்து தூவுகிறீர்கள். எண்ணெயைக் கொண்டு வந்து ஊற்றுகிறீர்கள். உள்ளத்தில் அடங்கியுள்ள உங்கள் துன்பதுயரங்களை என் முன்னால் நின்று சொல்லிச் சொல்லி வேண்டுகிறீர்கள். இவ்வாறு நீங்கள் நாள்தோறும் செய்து கொண்டிருந்தும், நான் மட்டும் உங்கள் கண்ணுக்குப் புலப்படாத ஒரு உருவாகியுள்ளேன். பேரில்லாத தாயுள்ளேன். என்னுடைய உள்ளத்திலிருந்து பீறிட்டுக் கொண்டிருக்கிற ஆற்றாமைகளில் நீங்களும் கொஞ்சம் பங்கிக் கொள்ளக் கூடாதா?

என்னைப் பற்றி இவ்வளவு பேசிய பின்பும் என்னை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளவில்லையா? சரி, அதில் உங்கள் தவறெதுவும் இருக்கவில்லை. இதோ, சொல்லியே விடுகிறேன். நான் வழி மேல் சில ஆண்டு காலம் விழுந்து கிடந்த சாதாரணமான ஒரு கல். இயற்கையின் ராகத்துவேசங்களுக்கும் கோபதாபங்களுக்கும் என்னை நானே உட்படுத்திக் கொண்டுள்ளேன். வெயில், இடி, மின்னல், மழைகளினால் நான் மிகவும் தாக்குண்டு பல்வேறு விதங்களாய் என் நிறமும் உருவமும் மாற்றப்பட்டுள்ளது. இறந்த காலத்தைப் பற்றி எண்ணும் போது இவையெல்லாம் என்னுடைய ஞாபகத்திற்கு வந்து விடுகிறது.

ஒவ்வொரு நாளும் காலை, மாலை நேரங்களில் வேலைக்குச் செல்லும் கூலிக்காரர்கள் வழியில் கிடந்திருந்த என் மேல் வந்து சற்று நேரம் உட்கார்ந்திருப்பார்கள். அதனால் அவர்களுடைய மனம் ஆறுதல் கொள்ளும். ஒரு சிலர், என் மேல் அமர்ந்திருந்தவாறே கஞ்சி குடித்துக் கை கழுவிக் கொண்டு செல்வதுண்டு. உடல் சோர்வை ஆற்றிக் கொள்ள, வடியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு போவதுண்டு. அவர்களின் எல்லாச் சுக துக்கங்களையும் என் மேல் உட்கார்ந்தபடியே சிலர் பேசச் சிலர் கேட்டுச் செல்வதுண்டு. எத்தனையோ தடவை அவர்கள் கையில் கொண்டு வரும் அரிவாள், கொடுவாள் [illegible] என் மேலேயே அழுந்தத் தேய்த்துக் கூர்மையாக்கிக் கொள்வதுண்டு. ஊர்க் குழந்தைகள் வந்து என்மேல் ஏறிக் குதித்துக் கும்மாளமிடுவதுண்டு.

என்ன கெட்ட காலமோ? என்னுடைய உடம்பில் ஒரு விதமான உறுதியும், மிருதுத் தன்மையும் ஒன்றி இருந்தது. அது காரணமாய் எனக்கு ஒரு விதமான மதிப்புத் தோற்றம் வந்தது. என்னுடைய இந்தத் தோற்றமே, உங்களில் ஒருவனுக்கு சிந்தனையை உண்டாக்கிற்று. மேலும், என்னைத் திருத்தமுற உருவாக்கித் தெய்வத் தன்மையை வலுக்கட்டாயமாக என் மேல் சுமத்தினான். என்னை ஒரு சுயம்பு லிங்கம் என்று பிரசாரம் செய்தான். தன்னுடைய பூசை போற்றுதல் என்ற வழிபாட்டு வலையில் என்னைச் சிக்க வைத்தான். என் மீது நாளும் எண்ணெயைச் சொரிவான். மேலெல்லாம் குங்குமம் பூசுவான். மலர்களை மாலையாகக் கட்டி அணிவிப்பான். என்னைச் சுற்றியும் அழகாக சிறிய மேடையைக் கட்டினான். மொத்தத்தில் என்னை மக்களிடமிருந்து அறவே பிரித்தொதுக்கினான். யாரும் என்னருகில் வர முடியாதபடி எஜமானத்துவம் செய்தான். யாரும் வந்து என்னைத் தொட்டு விடாதபடி கண்காணித்தான். தன்னுடைய வயிற்றை நிரப்பிக் கொள்வதற்காக என்னை நிரந்தரமாக உபயோகப் படுத்திக் கொள்ள இன்னும் வேண்டியவற்றையெல்லாம் செய்தான்.

என்னுடைய மனக்குமுறல்களை இனி மேலாயினும் நீங்களெல்லாரும் செவி கொடுத்துக் கேளுங்கள். ஆம். நான் ஒரு சுத்தமான கல்; சாமான்யமான கல். சந்திரனிலிருந்து கொண்டு வந்த ஒரு அபூர்வமான கல் அன்று. மண்ணின் மேல் விழுந்து கிடந்த மிக மிகச் சாமான்யமான ஒரு கருங்கல் தான் நான். என் மேல் தெய்வத்தன்மையை மிக அதிகமாக ஏற்றி வைத்து, உங்களுடைய பாவங்களையெல்லாம் என்மேல் சுமத்தி, உங்களுடைய இயல்பான வாழ்க்கையை அவன் பேச்சைக்

பயிர்ப்புடைய வணக்கமும் வாழ்த்தும்.

நூலைப் பற்றிய தங்கள் கருத்துரை கிடைக்கப்பெற்றேன். 'மூன்று அச்சிகள்' என்பது மட்டும் நீங்க, மற்ற அனைத்துக் கருத்துக்களும் சரியாக ஆய்ந்து புலப்படுத்தியுள்ளீர்கள். தங்களுடைய பல்வேறு அலுவல்களுக்கிடையே நூலினை ஒரு பொருட்டாக மதித்துப் படித்துப்பார்த்து என் வேண்டுதலை நிறைவு செய்தமைக்கு நான் பெரிதும் நன்றிக்கடப்பாடுடையவனாகிறேன். நன்றி.

இனி என்னை நானே அறிமுகப்படுத்திக்கொள்ள அனுமதிப்பீர் எனஎண்ணுகிறேன்.

'புலிப்பாற்பட்ட ஆமான் குழவிக்குச்-சினங்கழி மூதாக் கன்றுமடுத்தூட்டும்-கானத்ததுவே பான பரிசிலர்க்-குல்லியது சுரக்கும் ஓம்பா ஈகை-வெல்வேல் ஆவ மாயின் ஒவ்வாத்-கறையடி யானைக் கல்லது - உறைகழிப்பறியா வேலோ னூரே.

இந்த ஊர்ப்பெயர் வெளியம். ஊர் காடு சூழ்ந்திருந்தது. இந்த ஊரை உறைவிடமாகக் கொண்ட குறுநில மன்னன் பெயர் ஆய் எயினன். எங்காய்க் கண்ணி நாரி முடிச்சேரலின் படைத்தளபதியாக இருந்தவன். இந்த வெளியங்காடு எனும் ஊர்தான் என்சொந்தவூர்.

'கயிறு-பொரக்கலங்கும் கழல்-மூலவேலி-அரிவன் கவலர்குடிச்சீறூர்-ஒளிமென் சுந்தள் ஒன்றுதல் அரிவை-நடுகல் கைதொழுது பரவு மொழியாது-விருந்தெதிர் பெறுகற்றர் யானே வெல்லையும்-ஒருவாய் பொருள் நசை வேந்தனோடு நாடுதரு விழுப்பகை எய்துக எனவே.

— இதுதான் நாம் கற்ற அறநெறி இலக்கியம்

'அடலருந் துப்பின் கெடலரும் படப்பை- கோடுங்கு வெல்கை குருந்தே முல்லையென்-நின்னான் கல்லது பூவுமில்லை-கருங்காலவரகே இருங்கதிர்த் தினையே-சிறுகொடிக்கொள்ளே-பொறிகிளர் அவரையொ-டிந்நான் கல்லது உணவுமில்லை-ஒன்னாத்தெவ்வர் முன்னின்று விலங்கி ஒளிறேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக் கல்லே பரவின் அல்லது -நெல்லுகுத்துப்பரவும் கடவுளுமிலவே.

இதுதான் நாம் கற்றறிந்த தமிழக வரலாறு.

ஈன்று புறந் தருதல் என்றலைக் கடனே' எனும் முறையில் நூலினை நான் பெற்றுத் தந்துவிட்டேன். மேலும் சான்றோனாக்கும் தந்தையும், வேல்வடித்துக்கொடுக்கும் கொல்லனும், நன்னடை நல்கும் வேந்தனும் என நூலுக்கு வாய்த்தால் அவ் நிச்சயம் களிறெறிந்து பெயர்வான் என்ற நம்பிக்கை தங்கள் அறிவுசால் கருத்தும்பெருமையால் நிறைவுறும். நாடும் நலம்பெறும் என தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

தங்கள் நன்றிமறவாத,